
கல்கி

KALKI 19-4-81 ரூ. 1.20





✕ டயெட்மாருக்கு வயது 18. மேற்கு ஜெர்மனி சாம்பியன். சென்ற ஆண்டு தமது உயரமான ஆறு அடி ஏழு அங்குலத்தைவிட ஓரடி அதிக உயரம் தாண்டினார்.



✕ சிங்கார வேலு

திரு சிங்காரவேலு இன்றைய அதலெட்டுகளின் நிலை பற்றி வருத்தத்துடன் சொன்னார். இவர் சென்னை பல்கலைக் கழக அதலெடிக் குழுவிலும் தமிழக அதலெடிக் குழுவிலும் உறுப்பினர். சென்னை லயோலா கல்லூரி அதெலடிக் குழுவின் தலைவர்.

● இந்தியாவிலேயே விளையாட்டின் பெருமைகளை உணர்ந்து ஊக்கமளிக்கும் இரு மாநிலங்கள் பஞ்சாபும், கேரளாவும் தான். சமீபத்தில் குவாலியரில் அகில இந்திய பல்கலைக் கழகங்களுக்கிடையிலான தனித்திறமைப் போட்டிகள் நடந்தன. பஞ்சாபும், கேரளாவும் குவாலியர் போவதற்கு ஒரு மாதம் முன்பே தம் ஊரில் பயிற்சி முகாம்களை நடத்தின. குவாலியருக்குப் போட்டிக்கு ஒரு வாரம் முன்பே போய்க் கடுமையாகப் பயிற்சி செய்தன. அதனால்தான் ஆண்களுக்கான சாம்பியன்ஷிப் ஷீல்டை பஞ்சாபும், பெண்களுக்கான சாம்பியன்ஷிப் ஷீல்டைக் கேரளமும் தட்டிச் சென்றன.

● பெங்களூரில் அனைத்து மாநிலத் தனித்திறன் போட்டிகள் நடந்தன. லாங் ஜம்ப், 'பிட்' சரியாக இல்லை. கேரளத்தின் வீராங்கனை வால்சம்மாவின் காலை அது பதம் பார்த்துவிட்டது. 1976ல் இந்தியாவின் நம்பர் ஒன் அதலெட்டான கேரளத்து யோகண்ணனின் அதலெட் வாழ்க்கைக்கும் மோசமான லாங் ஜம்ப் பிட்தான் முற்றுப்புள்ளி வைத்தது.

● பெங்களூருக்குத் தமிழ் நாட்டிலிருந்து சுமார் 125 பேர் போனோம். அத்தனை பேரும் மூன்று கம்பார்ட்மெண்ட்களில் பயணம் செய்ய வேண்டியதாயிற்று. (கூட பொதுமக்கள் வேறு.) தங்கும் இடம் வசதியாக இல்லை. ஒரு நாளைக்குத் தரப்பட்டது பத்து ரூபாய். பெங்களூர் நகரில் பத்து ரூபாயில் ஒரு நாளை எப்படி ஓட்டுவது?

● ''தமிழகத்தில் வாலிபால், பாஸ்கெட்பால், கிரிக்கெட், என எல்லா விளையாட்டுக்களுக்கும் பயிற்சி செய்ய, விளையாட்டு அரங்கங்கள் உண்டு. ஆனால் அதலெட்டுகள் பயிற்சி செய்ய இடமில்லை.

● இப்போதுள்ள சூழ் நிலையிலேயே குவாலியரில் நடந்த போட்டிகளில் மூன்றும் இடத்தைப்பெற்றோம். இன்னும் பயிற்சி செய்ய வசதிகள் செய்து தந்தால், பல சாதனைகள் புரிவோம். அரசு அதிக நிதி ஒதுக்க வேண்டும். 'விளையாட்டுக்கெனத் தனி அமைச்சரை நியமிப்பேன்' என முதலமைச்சர் சொன்னதைச் செயலில் காட்டவேண்டும்.

பேட்டி: எஸ். சந்திரமௌலி

விளையாட்டுக்கு ஓர் அமைச்சர் அமைவாரா ?

பிரிட்டிஷ் பிரதமர்



✖ பிரதமர்

ஏழுநூறு ஆண்டு பிரிட்டிஷ் நாடாளு மன்ற சரித்திரத்தில் பிரதமர் பதவி வகிக்கும் முதல் பெண்மணி மார்கரெட் தாட்சர்.

இம்மாதம் இந்தியா வருகிருர்.

இவ்விதழ் அட்டைப் படத்தை அலங்கரிக் கிருர்.

முதலில் ரசாயன ஆராய்ச்சியாளர்; பிறகு வரிச் சட்டங்களை அலசும் நிபுணர்; கடைசி யாக அரசியல்வாதி. இவை அவர் வாழ்க் கையின் மூன்று கட்டங்கள்.

இவ்வளவுக்கும் இடையில் அவர் பொறுப் புள்ள குடும்பத் தலைவி. அன்பான மனைவி; இரட்டைக் குழந்தைகளின் பாசமுள்ள அன்னை.

மார்கரெட்டின் தகப்பனுர் சதா படி படி என்பார். சினிமா, டிராமா — நோ, நோ! ஆனல் என்ன புத்தகம் வேணுமானலும் வாங்கித் தருவார். பல்கலைக் கழக நிலைக்குச் செல்லும்வரை மார்கரெட்டுக்கு பாய்ஃபிரண் டும் கிடையாது; டான்ஸுக்கும்போனதில்லை. அன்னை இவரிடம் வளர்த்தது, சங்கீதத்தில் ரசனை.

மார்கரெட் படிப்பிலே கட்டி;வகுப்பிலே முதல். பல உபகாரச் சம்பளங்களைப் பெற்று சதா வயதுக்கு ஒரு வகுப்பு முன்னதாகவே இருந்து வந்தார்.

அரசியல் சுவை கண்டது கன்ஸர்வேடிவ் கட்சிக்காக 1935 தேர்தலில் எடுபிடி வேலை செய்தபோது.

1949ல் கட்சியின் வட்டாரத் தலைவர் இவரிடம் மதிப்புக் கொண்டு தேர்தலில் நிற்க வேண்டினர். இவருக்குத் தரப்பட்ட தொகுதி தொழிற் கட்சிக் கோட்டை! 36 சதம் வோட்டுக்களைப் பெற்றுத் தோற்ருர். 1951ல் 40 சதம் பெற்றுத் தோற்ருர்!

51 தேர்தலுக்கு ஐந்து மாதம் முன்னல் தாட்சரை மணந்துகொண்டார். தாட்சர்ஒரு பெயிண்ட் தயாரிப்பு நிறுவன அதிபர். அதனை பர்மா — காஸ்ட்ரால் நிறுவனம் சுவீகரித்த போது பெரிய நிறுவனத்தில் இவர் டைரக்ட ரானர்.

முதன் முதலாக நாடாளு மன்றத்தில் அடியெடுத்து வைத்த கட்டத்திலேயே ஒரு தனிநபர் மசோதா கொண்டு வந்து நிறை வேற்றினர் மார்கரெட். முக்கியமான இந்தச் சீர்திருத்தத்தின்படி வரிப் பணத்தில் இயங் கும் எந்தப் பொது ஸ்தாபனமானலும் அதன் நிர்வாகிகள் கூட்டம் நடக்கும்போது அங்கு பத்திரிகை நிருபர்களும் பொதுமக்களும் பார் வையாளர்களாக வந்தமரலாம்.

✖ பார்லிமெண்டில்



அடுத்தடுத்து வந்த கன்ஸர்வேடிவ் பிரதமர்கள் இவருக்குப் பொறுப்புள்ள பதவிகளைத் தந்தனர். கன்ஸர்வேடிவ் கட்சி எதிர்க் கட்சியாக இருக்க நேர்ந்த தருணங்களில் நிழல் மந்திரி சபை அமைக்கும். எதிர்க் கட்சியின் இந்த நிழல் மந்திரிகள் பல்வேறு பிரச்னைகளை ஆராய்ந்து ஆளும் கட்சி மந்திரிகளுக்கு யோசனை கூறுவார்கள்; தவறுகளைச் சுட்டிக் காட்டுவார்கள். நிழல் மந்திரி சபையில் பல்வேறு பொறுப்புக்களில் அமைச்சராக இருந்தார் மார்கரெட்.

70ல் கன்ஸர்வேடிவ் கட்சி பதவிக்கு வந்த போது பிரதமர் ஹீத் இவரை கல்வி, விஞ்ஞான அமைச்சராக்கினார்.

தரம் உயர்ந்த சில பள்ளிகளைத் தனியார் நடத்தி வருவதில் தவறில்லை என்பது மார்கரெட்டின் கருத்து: ''ஏனைய பொதுப் பள்ளிகளின் தரத்தையும் உயர்த்தப் பாடுபட வேண்டுமேயன்றி, பொறாமைப்பட்டு, இருக்கிற ஒருசில தரம் உயர்ந்த பள்ளிகளுக்கும் மூடுவிழா நடத்துவதில் ஒரு பலனும் இல்லை''.



தாட்சர் குடும்பம்

கல்வி அமைச்சராக இருந்தபோது இவர் செய்த இரு சீர்திருத்தங்கள் பலத்த எதிர்ப்பைப் பெற்றன. ஒன்று பள்ளிப்பிள்ளைகளுக்குத் தரப்பட்டு வந்த உணவுக் கட்டணத்தை உயர்த்தினார். அடுத்து, இலவசமாகப் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பால் தரும் பழக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

'வரிப் பணத்தில் இலவசமாகப் பால் விநியோகிப்பதற்கும் கல்விக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை' என்று கூறி இதனால் அரசுக்கு மிச்சமான ஏராளமான பணத்தை பள்ளிகள் தொடங்கவும் இருக்கிற பள்ளிகளை அபிவிருத்தி செய்யவும் பயன்படுத்தினார்.

தேசப் பொருளாதாரம் பலம்பெறச்சிறந்த வழிகள் அரசாங்கத்தின் அனாவசியச் செலவுகளைக் குறைப்பதும் உபரி பட்ஜெட் தயாரிப்பதும்தான் என்று நம்பும் தாட்சர், 'விலைவாசிகளைச் சட்டம் போட்டுக் கட்டுப்படுத்த முடியாது' என்கிறார்.

மார்கரெட் பணிவாகப் பேசுகிறவர்; ஆனால் வழவழா கிடையாது. 'கன்'னென்று உறைக்கும். அசாத்திய தைரியம்.

அழகி. சிகை அலங்காரம்; உடை அலங்காரம், மேக் அப் எல்லாவற்றிலும் மிகுந்த கவனம் செலுத்துவார். ''என்றும் முப்பதாக இருக்க விரும்புகிறேன்'' என்றார் ஒரு சமயம்.

கேள்வி: அரசியல் பெண்களுக்கு ஏற்றதா?

மார்கரெட்: அரசியலில் ஏதாவது பேசப்பட வேண்டுமானால் ஆண்மகனை அணுகுங்கள். அரசியலில் ஏதாவது சாதிக்கப்பட வேண்டுமானால் பெண்மணியை அணுகுங்கள்!

பாரதப் பிரதமருடன்







வறட்சி

(தமிழகத்தில் 11 மாவட்டங்களில் வறட்சி நிலவிக் கொண்டிருக்கிறது. வறட்சியைப் போக்க அரசு செய்து வரும் பணிகளையும், செய்யாமல் விட்டவைகளையும் பற்றி தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களும் அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்களும் சந்தித்து உரையாடுகிறார்கள்.)

துரைமுருகன்: தென்மேற்குப் பருவக்காற்று மழை கடந்த ஆண்டு பொய்த்ததுமே விவசாயிகளுக்கும் அரசாங்கத்துக்கும் வறட்சி வரப் போவது தெரியும். அரசுக்கு நினைவூட்டுவது எதிர்க் கட்சிகளின் கடமை என்ற முறையில் செப்டம்பர் மாதம் வட ஆர்க்காடு மாவட்ட எம். எல். ஏ. திருவேங்கடம், கலெக்டர், முதல்வருக்கு வறட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடிதம் எழுதினார். விரைவில் அதிகாரிகளை அனுப்புகிறோம் என்று முதல்வரிடமிருந்து கடிதம் வந்தது. அதன் பின்பு எவ்வித நடவடிக்கையும் காணோம். செப்டம்பர் மாதம் கலெக்டர் பத்திரிகைகளில் சொல்கிறார்: ''வறட்சி நிகழும்'' என்று. அக்டோபரில் சில தமிழ்ப் பத்திரிகைகள் எழுத ஆரம்பித்து விட்டன. அப்போதும் அரசு கவலைப்படவில்லை. மாறாக உலகத் தமிழ் மாநாட்டுக்குக் கவனம் செலுத்தத் துவங்கி விட்டது.

இரண்டாவது சோதனையாக வடகிழக்குப் பருவ மழையும் தவறியது. அப்போதும் அரசு நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது. பல எம். எல். ஏக்கள் வறட்சி பற்றித் தந்தியடித்தார்கள். டிசம்பரில் நடந்த கவர்னர் உரையில் 70க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏக்கள் வறட்சி பற்றிப் பேசினார்கள். அரசு தரப்பில் ''வறட்சி ஏற்பட்டிருப்பது உண்மைதான். அதை மிகைப்படுத்திப் பேசுகிறீர்கள்'' என்றார்கள். வறட்சிப் பணிக்கு 4 கோடி ரூபாய் ஒதுக்குகிறோம் என்றார்கள். வட ஆர்க்காடு மாவட்டத்துக்கு என பல லட்சம் ரூபாய் குடிநீர் வடிகால் வாரியத்திடம் கொடுத்தார்கள். ஆனால் ஆழ்கிணறு தோண்டும் இயந்திரம் இல்லாததால் அந்தப் பணம் மக்களுக்கு உபயோகப்படுத்தப் படாமலே இருக்கிறது.

வறட்சி பற்றி மத்திய அரசிடம் ஏன் மாநில அரசு முன்கூட்டியே தெரிவிக்கவில்லை? இப்போது 135 கோடி வேண்டும் என்று கேட்கிறார்கள். நமது நிதியமைச்சர் சொல்கிறார்: ''ஆரம்பத்திலேயே கேட்டு இருந்தால் மூன்று மாவட்டங்களுக்குத்தான் கேட்டிருக்க முடியும். இப்போது 11 மாவட்டங்களுக்கும் கேட்கலாமே'' என்று. வேடிக்கையாக இருக்கிறது. ''தீப்பிடித்த வீடுகளுக்கு உதவி கிடைக்கிறது என்பதற்காக நம் வீடும் தீப்பிடிக்கவில்லையே'' என்று சொன்னானாம், பக்கத்து வீட்டுக்காரன். அதுபோல இருக்கிறது.

வறட்சி காரணமாகப் பல கிராமங்களிலிருந்து கூட்டம் கூட்டமாக வெளியூர் சென்று விட்டார்கள். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் அரசுக்குக் கண்ணாகவும் காதாகவும் இருந்து வந்த கிராம அதிகாரிகள் நீக்கப்பட்டதுதான். பஞ்சாயத்துத் தலைவர்களும் இல்லை. அரசு பணத்தை கமிஷனர், வட்டார வளர்ச்சி அதி

அரசு செய்ததும் :

காரிகள் தவறான முறையில் செலவழித்தால் தட்டிக் கேட்கப் பஞ்சாயத்துக்களில் மக்கள் பிரதிநிதிகள் இல்லை. இந்த ஆண்டு கடுமையான வறட்சி நிலையில் மக்கள் மிகவும் அவதிப்படுவதற்குக் காரணம் அரசின் அலட்சியப் போக்குத்தான்.

சமரசம்: இந்தியாவின் உயிர்நாடி கிராமங்கள்தான் என்று நாம் பீற்றி வந்தாலும் கிராமங்களுக்குக் கடந்த 30 ஆண்டுகளாக ஆண்டு வந்த எந்த அரசும் வசதிகள் செய்யவில்லை. வறட்சியை நிரந்தரமாகத் தடுக்கும் திட்டம் உருவாக்கவில்லை. அ.தி.மு.க. அரசுதான் தன்னிறைவுத் திட்டம், வளர்ச்சிப் பணித் திட்டம், உழைப்புக்கு உணவுத் திட்டம் ஆகிய திட்டங்களைத் தீட்டி 11 மாதங்களுக்கு முன்பு இருந்தே செயலாற்றி வந்திருக்கிறது. இதனால்தான் ஓரளவாவது இந்த வறட்சியைச் சமாளிக்க முடிந்திருக்கிறது என்று உறுதியாகச் சொல்லலாம். இல்லையெனில் நிலைமை இன்னும் மோசமாக இருக்கும்.

தவிர விவசாயிகளின் நில வரி, கூட்டுறவுக்கடன், நிலுவை வசூல் ஆகிய வற்றைத் தள்ளுபடி செய்து விவசாயிகளுக்கு உதவியிருக்கிறது. கிராம அதிகாரிகளை நீக்கியதால்தான் அரசுக்குத் தகவல் கிடைக்கவில்லை என்பது தவறு. என்னைப் பொறுத்த வரை 15 நாட்களுக்கு ஒரு முறை என் தொகுதியில், அரசு எம்.எல்.ஏ.க்களுக்குச் செய்து கொடுத்திருக்கும் ஜீப் வசதி மூலம் சுற்றிப் பார்த்து வருகிறேன். அந்தந்த வட்டார வளர்ச்சி அதிகாரி, கமிஷனரோடு நேரடித் தொடர்பு கொண்டு கவனித்து வருகிறேன். வறட்சிப் பணி ஒழுங்காக நடந்து வருகிறது. மாவட்ட அளவில் கலெக்டர் தலைமையிலும் மாநில அளவில் தலைமைச் செயலாளர் தலைமையிலும் அமைக்கப்பட்டுள்ள கமிட்டிகள் வறட்சி நிவாரணப் பணிகளைப் பற்றி விவாதித்து செய்ய வேண்டியவைகளை முறைப்படுத்தி வருகிறது. இந்தக் கமிட்டிகளில் சர்வ கட்சியினரும் இருக்கிறார்கள்.

மக்கள் எல்லாக் காலங்களிலும் வேலை தேடி வெளியூர் போகிறார்கள். கிராமங்களில் வாழவே முடியாமல் வறட்சியினால் போயிருப்பதாகத் தெரியவில்லை. குடிநீர் வசதிகள் பெருகவும் பாசன வசதிகள் அதிகரிக்கவும் தொடர்ந்து பணியாற்றிக்கொண்டுதான் வருகிறோம். அரசு அதிகாரிகள் மெத்தனமாக இருக்கிறார்கள் என்பதை ஓரளவுக்கு மறுக்க முடியாது. உங்கள் குற்றச்சாட்டில் ஓரளவு உண்மை இருக்கிறது.

துரைமுருகன்: வறட்சி இருப்பது உங்களுக்குத் தெரிகிறது. கிணறுகளை ஆழப்படுத்தத் தக்காவிக் கடன் தரப்படவில்லை. சரி; வறட்சி இருக்கும்போது வறட்சி தலைவிரித்தாடும் பகுதிகளைப் பஞ்சப் பிரதேசம் (DROUGHT AREA) என்று அ.தி.மு.க. அரசு அறிவித்தால் என்ன? காரணம் இன்னும் அதிக கடன் வசதி செய்து கொடுக்க வேண்டுமே என்ற எண்ணம்தான். இன்னொரு காரணமும் உண்டு. நமது ஆட்சி காலத்தில் தமிழ் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டு விட்டது என்று அறிவிப்பதா என்ற வறட்டுக் கௌரவமும் முதல்வருக்கு வந்து விட்டது.

டாக்டர் சமரசம்: நான் இதை மறுக்கிறேன். எல்லா உதவிகளும் செய்து வருகிறோம். வேலைகள் துரிதமாக நடந்து வருகின்றன. ஒருகோடி ரூபாய் ஏரிகளில் பாசனக் கிணறு தோண்டவும், தூர் வாருவதற்கும் ஒதுக்கி இருக்கிறோம். நகராட்சி மின் சப்ளைக்காக 50 லட்சம் ஒதுக்கி இருக்கிறோம். லாரிகளின் மூலம் குடி தண்ணீர் எடுத்துச் செல்ல 50 லட்சம் ஒதுக்கி யிருக்கிறோம். இப்படி பல்வேறு வகையில் இயன்ற அளவில் அ.தி.மு.க. அரசு வறட்சிப் பணியாற்றி வருகிறது. எதிர்க் கட்சி என்ற முறையில் நீங்களும் வறட்சிப் பணி ஒழுங்காக நடைபெற எங்களோடு ஒத்துழைத்து பொது மக்களின்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உதவ வேண்டும். உங்கள் கடமையும் அதுதான். கிராம அதிகாரிகள், ஊராட்சித் தலைவர்கள் இல்லாத இந்த நேரத்தில் மக்கள் பிரதிநிதிகளான நாம்தான் அரசுக்குச் சரியான தகவல்களைக் கொடுத்துப் பணிகள் செவ்வனே நடைபெற உதவ வேண்டும். இந்த வறட்சி ஆளும் கட்சியைப் பாதிக்கும் என்ற அரசியல் ஆதாயத்தைப் பாராமல், சர்வ கட்சியினரும், இதைத் தங்கள் பிரச்னையாகக் கருதி, அரசுக்கு உதவியாக இருக்க வேண்டும். இது என் தாழ்மையான வேண்டுகோள்.




துரைமுருகன் — டாக்டர் சமரசம்.

சந்திப்பு ஏற்பாடு: மஞ்ஜுபாரதி ப்ரியன்

உரையாடல் படம்: ஜெய்மோகன்

செய்யாததும்!

நியூஸ் ஜூஸ்



— அனிதா

ஆர். வி. கரோல்பாக்கில் விண்டோ ஷாப்பிங் போனார். காரியதரிசி பின்னோடு வந்தார். ஒரு கண்ணாடிக்குப் பின்னால் டெரிலின் ஷர்ட் தொங்கியது. அதில் ரூ. 10 என்று சீட்டு பின் பண்ணப்பட்டிருந்தது. ஆர்.வி.க்கு ஒரே சந்தோஷம். மறுநாள் அமைச்சரவைக் கூட்டத்தில், ''எல்லோரும் விலைவாசி உயர்ந்துவிட்டது என்று அமர்க்களப்படுத்துறீங்களே; நேற்று நான் ஒரு கடையில் பத்து ரூபாய்க்கு டெரிலின் ஷர்ட் பார்த்தேன் தெரியுமா?'' என்றார் பெருமையாக.

அச்சமயம் காரியதரிசி பரபரப்புடன் ஆர்.வி. காதருகே குனிந்து ரகசியமாக, ''ஸார்! நேற்று நீங்க பார்த்தது ஒரு ட்ரை கிளீனிங் ஷாப். டெரிலின் ஷர்ட்டில் பின் குத்தப்பட்டிருந்த சீட்டு டிரை கிளீனிங் சார்ஜ்'' என்றார்.

●

இது புதுதில்லியில் இன்று பரவலாக வழங்கும் ஜோக். ஜோக்குகளை விடுங்கள். நிஜமாகவே அமைச்சர் உளறிக்கொட்டுவதும் உண்டு. ஜயப்பிரகாஷ் நாராயண் உயிருடன் இருக்கும்போதே இறந்துவிட்டதாக நாடாளு மன்றத்தில் அறிவித்து, இரங்கல் தீர்மானமும் கொணர்ந்தாரே மொரார்ஜி. அதைவிடவா பெரிய ஜோக் இருக்க முடியும்?

●

இத்தகைய அசட்டுத்தனங்கள் நம் தேசத்தில் மட்டுமில்லை; அமெரிக்காவிலும் உண்டுஎன்பதில் அலாதித் திருப்தி நமக்கு.

ரேகன் சுடப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார் என்றதுமே அயல் நாட்டு அமைச்சர் ஹெய்க், ''ஜனாதிபதி செயலாற்ற முடியாத இந்நேரத்தில் தேசத்துக்கு நெருக்கடி ஏதும் ஏற்பட்டால் அதைச் சமாளிக்க வேண்டிய முழுப் பொறுப்பும் என்னுடையதே'' என்று அறிவித்தரார். கேலிக்கும் உள்ளானார்.

ஜனாதிபதி கடமையாற்ற முடியாத நிலை ஏற்பட்டால் அந்தக் காலகட்டங்களில் அடுத்து துணை ஜனாதிபதி சகல விஷயங்களுக்கும் பொறுப்பேற்பார் என்பது அமெரிக்காவில் குழந்தைகளுக்குக் கூடத் தெரிந்த விஷயம். அவ்வாறிருக்க ஹெய்க் ஏன் இப்படிப் பேசினார் என்பது புரியாத புதிர்.

அன்று மாலையே, தம்மால் செயலாற்ற முடியாத நேரங்களில் துணை ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் நெருக்கடிகளை நிர்வகிப்பார் என்ற ரேகனின் அதிகாரபூர்வமான அறிக்கையும் வெளியாகிவிட்டது.

ஹெய்க் தமக்குத் தாமே ஏற்படுத்திக் கொண்ட சிறுமையை இன்னமும் மென்று விழுங்கிக் கொண்டிருக்கிறார்.

●

ஜோக்குகளில் எல்லாம் பெரிய ஜோக் எது என்று என்னைக் கேட்டால், ''நமது தேசத்தின் மிகப்பெரிய எட்டு நாளிதழ்களை அரசுடைமையாக்கி விட வேண்டும்'' என்ற சிபாரிசை உள்ளடக்கிய ஐ. ஐ. பி. ஏ. அறிக்கையைத்தான் குறிப்பிடுவேன்.

இரண்டாவது பிரஸ் கமிஷன், இந்திய பொது நிர்வாக நிறுவனத்தை (ஐ.ஐ.பி.ஏ.) ஆய்வு நடத்துமாறு வேண்ட, அது, ஆராய்ச்சியின் முடிவாக மேற்படி அற்புதமான சிபாரிசைச் செய்திருக்கிறது!

'பத்திரிகைத் துறையில் ஏக போக்கியத்தைத் தடுக்க எட்டு மிகப் பெரிய நாளிதழ்களை அரசுடைமையாக்கி விட்டால் அவை அரசாங்கத்தின் ஏகபோக்கியமாகி விடுமே' என்றால், 'அப்படி ஆகி விடாது' என்று கருத்துத் தெரிவிக்கிறது ஐ.ஐ.பி.ஏ. அறிக்கை. கூடவே, ''வானொலியும் தொலைக் காட்சியும் அரசாங்கத்தின் ஆளுமையிலிருந்தும் நிர்ப்பந்தங்களிலிருந்தும் விடுபட்டுச் சுதந்திரமாக இயங்கவில்லை'' என்றும் கூறுகிறது!

இதை முரண்பாடு என்பதா? ஜோக் என்பதா? 'இரண்டும் இல்லை, சதித் திட்டம்' என்பதா?

அரசுடைமையான நாளிதழ்களுக்கு என்ன பெயர் வைக்கலாம் எப்படி அழைக்கலாம் என்று யோசித்தேன். ''ஜால்ரா'', ''தலையாட்டிப் பொம்மை'', ''ஆமாம் சாமி'', ''பின்பாட்டு'' என்று சில பெயர்கள் தோன்றின. வேறு சிலவற்றை நீங்கள் யோசிக்கலாமே?

✕ நிருபர் (ஹெய்கிடம்): ''ரேகனும் புஷ்ஷும் ராஜினாமா செய்யவேண்டும் என்று நீங்கள் கேட்டதாகக் கூறப்படுவதில் உண்மை இல்லை என்று சொல்கிறீர்கள்?'' - வாஷிங்டன் போஸ்ட் ஜோக்



1981 Herblock in The Washington Post

சதம் காணும் கமல்



முதல் படம்
களத்தூர் கண்ணம்மா
1960




100 வது படம்
ராஜபார்வை
1981

''ராஜபார்வை''யில் சதம் காணும் கமலஹாசனிடம் நூறு கேள்விகள்:

1.	செல்லப் பெயர்?	—அப்பா அழைப்பது ''பட்டா'' என்று. குடும்பத்தில் பிறர் குறிப்பிடுவது ''இருக்கன்'' என்று.
2.	பிறந்த தேதி?	—7-11-54
3.	பிறந்த இடம்?	—ராமநாதபுரம். (அரண்மனை – இங்கு அப்பா பணியாற்றி வந்தார்.)
4.	உயரம்?	—5'.8''
5.	எடை?	—154 பவுண்டுகள்.
6.	பிடித்த நடிகை?	—சாவித்திரி.
7.	மறக்க முடியாத தேதி?	—மே 5, 1978.
8.	கொஞ்சம்கூடப் பிடிக்காதது?	—சீயக்காய்.
9.	மனைவியின் சிறப்புக்களில் முக்கியமானது?	—கணவனைக் காதலிப்பது.
10.	நடித்த படங்களில் மிகவும் பிடித்தது?	—16 வயதினிலே.
11.	நன்றிக்குப் பாத்திரமான நபர்?	—பாலசந்தர்.
12.	அதிகம் பயப்படுவது?	—பிழைகளுக்கு.
13.	மறக்க முடியாத நபர்?	—ஸ்ரீமதி எஸ். ராஜலட்சுமி.
14.	விரும்பும் பொழுதுபோக்கு?	—சினிமா பார்ப்பது, படிப்பது.
15.	ஆத்மார்த்த நண்பர்?	—பலர், வம்பில் மாட்டிவிடாதீர்கள்!
16.	ஓய்வு நேரத்தைச் செலவழிப்பது?	—இப்பொழுதெல்லாம் மனைவியுடன்தான்.
17.	அதிருஷ்டம் அடித்த தருணம்?	—கலாகேந்திரா அலுவலகத்தில் திரு கே. பாலசந்தரைச் சந்தித்த நேரம். (காலை 10 மணி ராகுகாலம்.)
18.	ஏமாற்றம் ஏற்பட்ட ஒரு தருணம்?	—பாலசந்தர் என்னை அழைக்க, உதவி இயக்குனராகப் போகிறேன் என்று எண்ணியபடி நான் செல்ல அவர் என்னை நடிக்கச் சொன்னபோது.
19.	படுக்கையில் தள்ளிய விபத்து?	—பல. சமீபத்தில் குதிரையில் இருந்து விழுந்து குதிரையும் நானும் காலை ஒடித்துக்கொண்டோம்.
20.	பார்த்த நாடுகள்?	—சிங்கப்பூர், அமெரிக்கா, பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, ஜெர்மனி.
21.	கலைத்துறையில் போட்டியிட்டு உமது மதிப்பில் உயர்ந்தவர்?	—ரஜனிகாந்த்.
22.	கேர்ள் பிரண்ட்?	—காந்திமதி.
23.	அதிகமாகப் பிடித்த விஷயம்?	—பட்டாம்பூச்சி, தும்பி.
24.	குருவாக நினைப்பது?	—டி. கே. சண்முகம்.
25.	எதிர்கால லட்சியம்?	—கலைத் துறையில் மரியாதை கெடாமல் வாழ்வது.

(தொடரும்)

பேட்டி: ''சலன்''


உம்ம பாரு ஜானி! ஈரான்-ஈராக் யுத்த சமரசம்னு ஜம்முன்னு கிளம்பிட்டீங்க! என்னைச் சொல்லுவாங்க...
ஜெயில் சிங்
நரசிம்ம ராவ்
மெஜாரிடி இழந்த அஸ்ஸாம் (இ) காங்கிரஸ் அரசு
நான் நினைச்சா மற்ற கட்சி மாநில அரசுகளை அரைமணியில் தீர்த்துக் கட்டி விடுவேன்!
நான் நினைச்சா அப்படிச் சொல்லல்லே -ன்னும் சொல்லிடுவேன்!
எரிசாராய ஊழல் விசாரணை

அமைதி இழந்த ஆவி!

ஹல்லோ! உங்களைத்தான்! என்னை யார் என்று தெரிகிறதா? தெரியலே? நான்தான் ஸார், ஈ. எஸ். பார்த்தசாரதி! ஆமாம் அஸ்ஸாமில் வெடிகுண்டுக்குப் பலியான ஐ. ஏ. எஸ். அதிகாரியேதான்! என்ன ஸார், அப்படி மிரள்றீங்க? பயப்படாதிங்க! நான் உங்களை விழுங்கிட மாட்டேன். உட்கார்ந்து கேளுங்க.

ஒரு விஷயம் தெரியுமா? சர்க்கார் உத்தியோகத்திலே இருக்கிற வரை ஒருத்தன் தன் சொந்தக் கருத்துக்களை மேலிடத்துக்கு எடுத்துச் சொல்லலாம். ஆனா, அவங்க இறுதியா ஒரு முடிவு எடுத்த பின்னர் நமது தனிப்பட்ட கருத்து என்ன வானாலும் அதை மூட்டைகட்டி வைச்சுட்டு மேலிடம் எடுத்த முடிவுப்படி காரியங்களை நிறைவேற்றிக்கிட்டுப் போக வேண்டியதுதான்.

இப்போ என் நிலை வேறே. முன்பு அரசு ஊழியனாய் இருந்து இன்று ஆவி வடிவில் உலவுகிறவன் பேசக்கூடாது என்று சட்டமில்லே! அதனால் சொல்கிறேன்: நான் இறந்த பிறகு என் குடும்பத்துக்கு எவ்வளவோ செய்யறாங்க. ஐம்பதாயிரம் பணம் தந்திருக்காங்க. இன்னும் என் பென்ஷன் காலம் வரும்வரை என் முழு சம்பளத்தையே என் குடும்பம் பென்ஷனா பெற்று வரும்னு ஒரு பத்திரிகையிலே பார்த்தேன். இதுக்கெல்லாம் நான் மகிழ்ச்சியோடு நன்றி தெரிவிக்கிறேன். ஆனா இதையெல்லாம் விட எனக்கு சந்தோஷத்தை அளிக்கக் கூடிய விஷயம் என்ன தெரியுமா? அஸ்ஸாமிலே அமைதி நிலவுவதுதான்.

அது ஏன் சாத்தியமாகலே? நம்மிடையே ஜனநாயகம் இருக்கு, ஆனா ஜனநாயக மனப்பான்மை இல்லே! அதுதான் காரணம். ராஜாஜி நினைவுச் சொற்பொழிவிலே ஜேம்ஸ் கலாகன் குறிப்பிட்ட மாதிரி, ஜனநாயகம் என்கிறது வெறும் மெஜாரிட்டி மைனாரிட்டி எண்ணிக்கை மட்டுமில்லே. அது ஓர் இயல்பு, பண்பாடு.

'நாடாளுமன்றத்திலே எனக்குப் பெரும்பான்மை இருக்கு; நான் சொல்றதுக்கெல்லாம் கை தூக்கக் கட்சிக்காரங்க இருக்காங்க; அதனால் என் விருப்பப்படி தான் எல்லாம் நடக்கணும்'னா அது ஜனநாயகமாகாது. பெரும்பான்மை என்பது கர்வத்தையும் பிடிவாதத்தையும் வளர்த்துக்கிட்டா கொடுங்கோன்மையாகிவிடும். ஜனநாயகப் பண்பு என்பது பேச்சு வார்த்தையிலும் எதிராளியின் கருத்தை மதித்து அதைப் புரிந்துகொள்ள முயல்வதிலும் முடிந்தவரை விட்டுக்கொடுக்க முன் வருவதிலும்தான் இருக்கு. இரு தரப்பிலும் படிப்படியா விட்டுக்கொடுத்து வந்து ஓரிடத்தில் சமரசம் கண்டு கை குலுக்கணும்.

இது மறக்கப்படும்போது அங்கே சமூக விரோத சக்திகள் தலைதூக்குகின்றன. குஜராத், கர்நாடகம், கேரளம், அஸ்ஸாம் எல்லா இடங்களிலும்.

அஸ்ஸாமில் வந்து குடியேறிய நேபாள, பங்களாதேச அகதிகள் காரணமாக அஸ்ஸாமியர், அஸ்ஸாமிலேயே சிறுபான்மையினராகி விடுவோமோ என்று அஞ்சறாங்க. இந்த அந்நியர்களுக்கு பிரஜா உரிமை தருவதாலும் வோட்டு உரிமை வழங்குவதாலும் ஏற்படுகிற பிரச்னைகளை எண்ணிப் பயப்படறாங்க. இவங்களுடைய அச்சம் நியாயமானது என்பதை மத்திய அரசும் உணர்ந்திருக்கு. ஆயினும் என்ன? கால வரம்பு போன்ற ஏதோ ஒரு துணைப் பிரச்னையில் கருத்து வேற்றுமை. வீம்பு காரணமா பேச்சு வார்த்தைகளில் முறிவு!

அஸ்ஸாமில் இந்திரா காங்கிரஸுக்குப் பெரும்பான்மை இருப்பதாகக் கூறிக்கிட்டு ஆட்சிக்கு வந்தார் திருமதி டைமூர். அப்போதே யாரும் நம்பவில்லை. சட்டசபையில் கொண்டுவரப்பட்ட ஒரு மசோதா தோற்ற பின்னரேனும் அமைச்சரவை ராஜினாமா செய்திருக்க வேணுமா? ராஷ்டிரபதி ஆட்சிக்கு மீண்டும் வழி வகுத்திருக்கலாமில்லையா? மசோதாவை வாபஸ் வாங்கிக் கொள்வதாக அறிவித்துப் பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பது போன்ற ஜனநாயகப் பண்பற்ற, பலாத்காரச் செயல், எதிர்த்தரப்பில் கோபத்தைக் கிளறுது. வன்முறையாளருக்கு வசதியான சூழலை சிருஷ்டிக்குது. என்னைப்போல் எத்தனையோ பேர் பலியாறாங்க.

இந்த நிலை மாறி நாட்டில் ஜனநாயகப் பண்பாடு வளர்ந்து சாந்தி நிலவினாலொழிய எனக்கு அமைதி கிடையாது. நான் ஆவி வடிவில் என் தாய் நாட்டையே, அதுவும் அஸ்ஸாமையே சுற்றி வந்துக்கிட்டுத்தானிருப்பேன்!

1981 ஏப்ரல் 19

துன்மதி சித்திரை 7

மலர் : 39 இதழ் : 38





கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

It is said that chastity is a virtue much more admired than practised by the Indians.

(VICO'S LETTER IN 1628)

3

கூடத்தில் அவளை அந்தப் புதியவன் நெட்டித் தள்ளினான். பிறகு வாளைச் சுருக்காகத் தூக்கி வீச்சென்று கீழே இறக்க,

சுவர்ணமுகி ஒரு துள்ளலில் அதன் பாதையிலிருந்து விலகினாள்.

கூடம் தீவர்த்தியில் ஆடியது. பெரிய பெரிய நிழல்கள் சுவரில் மோதின.

திகில் கண்ணுடன் அவள் அவனைப் பார்த்தாள்.

இவனை எங்கேயோ பார்த்திருக்கிறோமே!

ஓகோ!

தளவாய் நரசய்யனா?

சந்திரகிரி வட்டாரப் புள்ளிகளில் ஒருவன். சொந்த சைன்யம் வைத்திருப்பவன்.

ஒழுக்கத்துக்கும் நேர்மைக்கும் அதிகம் கவலைப்படாதவன். இப்போது திம்மராஜா பக்கம் சாய்ந்திருப்பவன்.

இவனிடமா அகப்பட்டோம்?

இப்போது என்ன செய்வது என்று அவள் யோசிக்க,

''ஓடாதே, நில்!'' என்றான் அவன்.

சுவர்ணமுகி நடுங்கினாள்.

நரசய்யன் போர்க் களச் சூட்டிலிருந்து நேராக வந்திருந்தான். முகம் கறுத்திருந்தது. கண்கள் ரத்தப் பழமாக இருந்தன. ஆடைகள் பிசிறு விட்டுத் தொங்கின.

அவன் கையில் வாள் சிந்தூரச் சிவப்பில் இருந்தது. சற்று முன் நடந்த கொலைகளுக்கு அந்த வாள்தான் உபகரணமாக இருந்திருக்க வேண்டும்.



ஸ்ரீவேணுகோபாலன்

''சொல்லு! நீ யார்?'' என்றான் சீறிக் கொண்டு.

''ரங்கப்பாவின் மகள்!'' என்றாள் அவள். சொல்லும்போது சிறிய படபடப்பு ஏற் பட்டது.

அவள் பதில் சொன்னதும் அவன் ஏற இறங்க அவளைப் பார்த்தான். இவனுக்கு ரகசியம் தெரிந்திருக்குமோ என்று அவள் குமைந்தாள்.

''இவ்வளவு நேரம் எங்கிருந்தாய்?''

நல்ல வேளை. அடுத்த கேள்விக்குப் போனது அவளுக்குப் பெரிய நிம்மதியாக இருந்தது.

''வெளியே போயிருந்தேன்.''

''வெளியே என்றால்?''

''திருப்பதிக்கு...''

''பொக்கிஷத்தை ஒளித்துவைப்பதற்கா?''

ஏளனமாகக் கேட்டு நெருங்கினான் அவன். சுவர்ணமுகி பின்வாங்கினாள்.

''என்ன பொக்கிஷம்?''

''தெரியாதா உனக்கு?''

வாளை ஓங்க, ''தெரியாது'' என்று பட படத்தாள் அவள்.

''விஜயநகரப் பொக்கிஷம்.''

''விஜய நகரப் பொக்கிஷமா?'' — ஆச்சரி யத்துடன் கேட்டாள்.

''ஆமாம். அதுவேதான்.''

''ஐயா! அதைப் பற்றிக் கேள்விப்பட் டிருக்கிறேன். வேறு ஒன்றும் தெரியாது.''

''தெரியாமலா போர் நடக்கும் போது இப்படி வெளியே போய் விட்டு வந்தாய்?''

''பிரார்த்தனைக்காகப் போனேன் ஐயா, சத்தியமாக.''

''பொய்!'' என்று அந்தச் சொல்லைக் கீழே ஓங்கி அடித்தான் அவன்.

சுவர்ணமுகியின் வாய் அச்சத்தில் திறந் தது. விஜயநகரப் பொக்கிஷம் என்ன என்று அவளுக்குத் தெரியும். தலைக்கோட் டைப் போரில் விஜயநகர மன்னர் தோல்வி அடைந்தபோது, அவரது ஏராளமான பொக் கிஷம் தெற்கே ஒரு ரகசிய இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த விஷயம் மிகச் சிலருக்குத்தான் தெரியும். அந்தச் சிலரில் அநேகர் அதைத் தேடி வெவ்வேறு இடமாக அலைகிறார்கள். விலை மதிக்க முடியாத திரவியம் அது. கிடைத்தால் ஒரு சாம்ராஜ்யத்தையே விலைக்கு வாங்கலாம்! அவ்வளவு பெரிய சம்பத்து! இவனும் அதைத் தேடித்தான் வந்திருக்கிறான்.

''ஐயா நிச்சயம் தெரியாது'' என்றாள் அவள்.

''இந்த ரங்கப்பன் குடும்பத்தில்தான் அது இருக்கிறது. நிச்சயம் எனக்குத் தெரி யும்.'' என்றான் அவன்.

''நிச்சயம் கிடையாது!''

''பொக்கிஷம் எங்கே இருக்கிறது என்ப தற்கு ரகசியக் குறிப்பாவது இங்கே இருக்க வேண்டும்.''

''அதுவும் கிடையாது.''

''இந்தா பெண்ணே! நீ உயிர் வாழணுமா வேண்டாமா?''

கையில் வாளைத் தூக்கினான். சுவர் ணமுகி விழித்தாள். விடை ஏதும் சொல்லத் தெரியவில்லை. இன் றைய ஒரே தினத்தில் இவ்வளவு துயரம்



சேர்ந்து வரும் என்று அவன் நினைக்க வில்லை.

''உன் குடும்பத்தாருக்கு நேர்ந்த கதி, உனக்கும் நேர வேண்டுமா? சொல்!'' என்றான் கர்ஜனையில்.

''ஐயா, எனக்கு எதுவும் தெரியாது. என்னை விடுங்கள்!'' என்றாள் புலம்பலோடு.

நரசய்யன் கண் துடித்தது.

''வா! என்னுடன்! எல்லா இடமும் காட்டு. ஒன்று பொக்கிஷம் இருக்க வேண்டும். இல்லாவிடில் அது பற்றிய ஏட்டுக் குறிப்பாவது இருக்க வேண்டும். இரண்டும் இல்லாவிட்டால் உன்னைத் தீர்த்துக் கட்டி விடுவேன்'' என்றான்.

அவனே கையில் தீவர்த்தியை எடுத்துக் கொண்டான். பின் கூடத்தில் நுழைந்தான்.

அவளை முன்னே போக விட்டு, ஒவ்வொரு இடமாகத் தட்டிக் கொண்டு போனான்.

பின்கட்டுக்கு அடுத்தது சமையற்கட்டு. அடுத்தது முற்றத் தாழ்வாரம். அதை அடுத்துப் பெரிய உக்கிராண அறைகள்.

ஒவ்வொன்றாகக் காண்பித்துக் கொண்டே போக அவள் அதற்குள் யுக்தி தயார் பண்ணியிருந்தாள்.

இரண்டாவது தாழ்வாரத்தில் படிகள் சரியாயில்லை. திரும்பக் கட்டுவதற்காக இடித்திருந்தார்கள். அங்கே வந்ததும் அவள் முன் ஜாக்கிரதையாகப் படக்கென்று குதிக்க,

அவன் ஏமாந்து காலை வைத்துக் கீழே தடுமாறித் தீவர்த்திக்கையோடு சேர்ந்து விழுந்தான். ''ஏய்!'' என்று அவன் இரைய,

அந்தத் தீவர்த்தி கீழே விழுந்த அவசரத்தில் வெளிச்சத்தைக் குறைத்து அடிக்க,

விருட்டென்று அவள் ஒரு முயல் போல், துள்ளிப் பின்கட்டு வழியே மறைந்தாள்.

படிகள் படபடவென்று இறங்கியதும் விஸ்தாரப் பழத் தோட்டம் எலுமிச்சைகளோடு மணத்தது. பாத்திகளிலும் பாதைகளிலும் பின்னி, தூரத்தில் இருந்த தோட்ட வாயிலுக்கு வந்தாள். அங்கிருந்து கதவைப் பிரித்து வெளியேற,

அருணா ஆற்றின் பரந்த படுகை. இரவுக் குளிர்ச்சியுடன் வரவேற்றது.

ஆற்றில் நீரில்லை.

எங்கும் மணல்வெளி.

பாலைவனம் போன்ற காட்சி.

இரவில் மணலுக்கு ஒரு மினுமினுப்புத் தோன்ற, அதில் அவளது உருவம் செல்வது நன்றாக அடையாளம் தெரியும்.

இதையெல்லாம் யோசித்து, சீக்கிரம் ஆற்று வெளியைக் கடக்க எண்ணினாள்.

ஜோசியர்: உங்க மனைவி உங்கமீது மிக அன்பாக இருப்பாள் என்பதை இந்த ரேகை காண்பிக்கிறது.

அவர்: அது ரேகையில்லீங்க. என் மனைவியுடன் போன வாரம் ஏற்பட்ட சண்டையில் அவள் கையிலிருந்த கத்தி கீறிய வடு.

- எஸ். சந்திரசேகர்



மூச்சைப் பலமாக இழைத்து, சேலையை முட்டுக்கு மேல் தூக்கி தறிகெட்டு ஓடினாள்.

ஆற்றைக் கடந்து தரிசை வெளியில் ஏறியதும் ஆசுவாசமுடன் திரும்பிப் பார்க்க,

தூரத்தில் அந்த வேங்கடகிருஷ்ண விலாசத்தின் புழக்கடையில் தீவர்த்தியுடன் அந்த ஏமாளி உலாவுவது தெரிந்தது.

என்ன தைரியம் இவனுக்கு?

வழக்கங்களையும் நியாயங்களையும் புறக்கணித்து இப்படி வீடு புகுந்து பெண்டிர்களைக் கொலை செய்து விட்டானே!

விஜயநகரப் பொக்கிஷம் என்றான்.

இந்த ரங்கப்பா குடும்பத்தாரிடம் இருக்கிறது என்பதை அவன் எப்படி அறிந்து கொண்டான்? போர்க் களத்தில் ரங்கப்பா கூறியிருப்பாரோ? அல்லது அவரைச் சித்ரவதைசெய்து அவரிடமிருந்து ரகசியங்களை வாங்கி இருப்பார்களோ?

நல்ல வேளை!

பொக்கிஷத்தைத்தானே தேடி வந்தான்.

நான் யார் என்று தெரிந்து கொள்ளவில்லையே! அதுவரை க்ஷேமம்.

சட்டென்று ஒரு குறுக்கு யோசனை ஊடுருவிச் சென்றது.

அந்த வீரன், அந்த இளைஞன்,

அவன் சுவர்ணமுகி என்று சொல்லி அவளுக்குச் செய்தி கொண்டு வந்திருக்கிறேன் என்று மரணச் செய்தியைச் சொன்னானே!

அவனுக்கு எப்படித் தெரியும்?

இன்ன இடத்தில் என்னைக்கண்டு பிடிக்கலாம் என்று எப்படித் தெரியும்?

ஒருவேளை இறப்பதற்கு முன் ரங்கப்பாவே சொல்லி அனுப்பியிருப்பார் என்று வைத்துக்கொள்ளலாம். அந்த விஷயம் மட்டும் அவனுக்குத் தெரியுமா, என்னைப்பற்றியவேறு விஷயங்களும் தெரியுமா?

மனம் மெள்ளக் குழம்பியது. சிறிது நேரம் நின்றதில் சுவாசம் மெதுவாக இறங்கி நிதானமாயிற்று. வியர்வைகள் ஆவியாகி உடலைக் குளிர வைத்தன.

இனி என்ன செய்ய?

ஒரு கல்லின் மீது அமர்ந்து யோசித்தாள். மனம் சிறிது தெளிந்தது. எண்ணற்ற நட்சத்திரங்கள் அவளைக் கவிழ்ந்து பார்க்க, ஒருவித பேரமைதி அவளது உள்ள வெளிகளில் இறங்கியது.

சாந்தம் அடைந்த முகத்தை நிமிர்த்தி எங்கும் பார்க்க,

அந்தக் காட்சி, குதிரையில் கடக் கடக் என்று ஓடிவந்து அந்த இளைஞன் நின்ற காட்சி,

அவள் மனத்தில் ஒரு வர்ணச் சித்திரம் போல் வந்தது.

பரந்த நெற்றி. நீண்ட, எடுப்பான நாசி. இரு பெரும் உணர்ச்சிக் கடல்களாகக் கண்கள்.

போர்க்களத்திலிருந்து அலங்கோலமாகி வந்தாலும் என்ன கம்பீரமாகக் கிடந்தான்!

என்ன நிதானமாயும், அழுத்தமாயும் பேசினான்? இதற்குள் இறந்திருப்பானோ?

ஒருவேளை, இறக்காமல் இருந்து, குதிரை மீது டக்டக்கென்று பிரயாணித்து இங்கே வந்தால்.... என்ன ஆசைகள்!

மனம் அங்குமிங்குமாய்த் தாலாட, போது விடிவதற்குள் அவள் அந்த இடத்தை விட்டு வெகு தூரம் போய்விட வேண்டும். எங்கே போவது? யாரிடம் சரண் புகுவது? யார் தான் அடைக்கலம் தருவார்கள்?

எல்லாவற்றையும் ஒரே நாளில் இழந்த ஒரு இளம் அபலைக்கு யார்தான் உதவி செய்வார்கள்?

அவள் உயிர்த்தோழி திருமலாம்பா நினைவுக்கு வந்தாள்.

நாகலாபுரத்தில்தானே இருக்கிறாள்?

இரவுக்குள் நடந்து போய்விடலாம். வழியில் சிறுத்தை பயம் உண்டு. திருடர் பயமும் உண்டு. ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு நடந்தால் என்ன? வேறு வழிதான் என்ன இருக்கிறது?

உடம்பை இழுத்துப் போர்த்தி நடக்க ஆரம்பித்தாள்.

நேராகக் கிழக்காகப் போகும் சாலையில் அந்த நள்ளிரவில் நடப்பது என்பது எவ்வளவு கஷ்டமான வேலை?

அங்கங்கே தங்கி, அங்கங்கே பதுங்கி, மரங்களைக் கண்டு பயந்து, நிழல்களைக் கண்டு பயந்து, நாய்களின் ஊளைகளுக்கு அஞ்சி; திடீரென்று எழுந்த ஒரு பேடையின் வீறலை பிசாசின் கூவலாக எண்ணி நடுநடுங்கி, வழியெல்லாம் கடவுள் நாமத்தை நினைத்த வாறே அந்த ஊர் போய்ச் சேருமுன்...

காலை புலபுலவென விடிந்து கொண்டிருந்தது. ''அக்கா இல்லை?'' என்று கேட்டுக் கொண்டு புன்முறுவலுடன் சுவர்ணமுகி அந்த விஸ்தார வீட்டுக்குள் நுழைந்தாள்.

முன்பு இருமுறை வந்திருக்கிறாள்.

வேதநாராயணர் கோயிலில் சூரிய பூஜை பிரசித்தம். கோடையில் நடக்கும். கோவில் மூர்த்தியின் மீது குறிப்பிட்ட மூன்று நாட்களில் சூரிய ஒளி பாதம், நாபி, நெற்றி இவைகளில் ஒரு அழகான பொட்டாகத் திகழும்.

திருமலாம்பாவின் கணவர் நாராயண ராஜு துணி வியாபாரம் செய்பவர். அருமையான சேலைகளை வெங்கிடகிருஷ்ண விலாசத்தில் கொணர்ந்து விற்றிருக்கிறார்.

நிருபர்: "குஜராத்தில் நடக்கும் ரிசர்வேஷன் தகராறைப் பற்றி உங்கள் அபிப்ராயம் என்ன?"

நடிகை: "பேசாம எல்லா டிக்கெட்டையும் கரண்ட் புக்கிங்குக்கே விட்டிருந்தால் கலவரத்தைத் தடுத்திருக்கலாம்!"

– செல்வபாண்டியன்



இன்று அவள் வீட்டில் நுழைந்து வினவிய போது முதல் பையன் ஓடிவந்தான். சுவர்ணமுகியைக் கண்டதும் தேம்பினான். அவன் உடம்பைப் பார்த்ததும் அவள் கண்கள் விருட்டென்று துள்ளின. எலும்பெல்லாம் தெரிகிறதே! நோயா அல்லது...

கூடத்தைச் சுற்றிப் பார்த்தாள். தஞ்சாவூர்ப் படங்களும், மரப் பொம்மைகளும் கட்டில்களுமாக, கூடம்ஒருசித்திரசாலைபோல இருக்கும். அடுக்கடுக்காகச் சேலைகள் வியாபாரத்துக்குக் காத்திருக்கும்.

இப்போது எதுவுமில்லை.

ஒரு விதவை உடம்பைப் போல் சூனியமாக இருந்தது. நிசப்தம்.

திகிலுடன் நிற்க, நாராயணராஜு வந்தார். இளைஞன்தான். ஆனால் அவனுக்கும் நோயா?...

கலக்கத்துடன் ''அக்கா எங்கே?'' என்று கேட்டாள்.

நாராயணன் மேலும் கீழும் பார்த்தான். அவன் கண்கள் மந்தமாக இருந்தன. பாதி இறந்தது போல் முகக் களை.

''போயிட்டா!'' என்றான்.

''போய்ட்டாளா?''

''ஆமாம். பத்து நாளாச்சு!''

சுவர்ணமுகியின் கால் தரையில் நிற்கவில்லை. இருதயம் பக்கென்று அடைத்தது.

''என்ன காரணம்?''

நாராயணன் பேசவில்லை.

இனிப்பாகவும் சிரிப்பாகவும் வியாபாரம் பேசும் நாராயணனா இப்படி இருக்கிறான்?

சுருக்கென்று அப்போதுதான் நினைவு தைத்தது. முந்திய நாள் உய்யன் சொன்னானே ஒரு வார்த்தை – பஞ்சம்!

அதுதான் நாட்டை ஒரு கொடு நோய் போலப் பற்றியிருக்கிறது.

இந்தக் குடும்பத்தையும் அது பற்றியிருக்கிறது. திருமலாம்பாவைப் பலி கொண்டிருக்கிறது.

நாராயணன் எட்டிப் போக, ''வரேன்'' என்று பலவீனமாக அவள் சொன்னாள்.

சடக்கென்று திரும்பினான்.

யோசனையோடு நிமிர்ந்தான்.

''சாயங்காலம் போகலாம்.''

''இல்லை; இப்பவே புறப்படறேன்.''

''ஒரு நாழி இருங்க!'' அவள் பதிலை எதிர்பாராமல் வெளியேறினான்.

அரை நாழிகையில் அவன் திரும்பி வந்த பிறகு, அவனது நீண்ட மௌனத்துக்கும், அரை வார்த்தை, ஒரு வார்த்தை பேச்சுக்கும் காரணம் புரிந்தது.

இரண்டு வெள்ளை ஒலாந்தியர்கள் (Dutch) உள்ளே வந்து சுவர்ணமுகியையும் அந்தச் சிறுவனையும் கைப்பற்றினார்கள்.

சுவர்ணமுகி திடுக்கிட்டு, ''இது என்ன அநியாயம்?'' என்று சொல்ல ஒலாந்தியர்கள் பெரிதாகச் சிரித்தார்கள்.

நாராயணராஜு அவர்களை அடிமைகளாக விற்றுவிட்டுத் தலைமறைவாகப் போய்விட்டான்.

''என்னை விடுங்கள்! விடுங்கள்!'' என்று சுவர்ணமுகி கதற, வெள்ளையர்கள் அவளை இழுத்து வெளியே போனார்கள். (தொடரும்)

இலவசம்

மங்கையர் மலர்

● லக்ஷ்மி, சுஜாதா, ஸ்ரீவேணுகோபாலன் போன்ற முதல்தர எழுத்தாளர்களின் தொடர் அம்சங்கள் ● மாதம் ஒரு முழுநீள நாவல், ● சிறு கதைகள், ● சினிமா செய்திகள் ● பெண்களுக்கான அழகுக் குறிப்பு, சமையல் குறிப்பு, மருத்துவக்குறிப்பு, தையல்கலை முதலிய பல அம்சங்களைத் தாங்கி வெளிவரும் முதல்தரமான மாத சஞ்சிகை.

வாசகர்களுக்குப் புத்தாண்டுப் பரிசு!

இரண்டு ஆண்டுகளுக்கு மங்கையர் மலர் பிரதிகளை நீங்கள் இலவசமாகப் பெற ஓர் அரிய வாய்ப்பு.

ரூ. 36 பெறுமானமுள்ள மங்கையர் மலர் இதழ்கள் மாதத்துக்கு ஒன்றாக இலவசமாய் உங்கள் வீடுதேடி வரும்.

இந்தப் பரிசைப் பெற நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இது தான்: கல்கிக்கு இரண்டு ஆண்டு சந்தா ரூ 120, செக், மணி ஆர்டர் அல்லது டிராஃப்ட் மூலம் அனுப்புங்கள். வெளியூர் செக்கானால் பாங்குக் கமிஷன் ரூ 1/- சேர்த்து அனுப்பவும்.

இதனால் நீங்கள் இரட்டிப்புப் பயனும் மகிழ்ச்சியும் அடைகிறீர்கள்.


1. இரண்டு வருஷத்துக்குக் கல்கி இதழ்களை ஆனந்தமாகப் படிக்கலாம்.

2. இரண்டு ஆண்டுகளுக்கு மங்கையர் மலர் இதழ்களை இலவசமாகப் பெற்றுப் படித்து இன்புறலாம்.

ஏற்கெனவே கல்கி சந்தாதாரராக இருப்பவர்களும் தங்கள் சந்தாவை மேலும் இரு ஆண்டுகளுக்கு நீடித்துக் கொள்ளலாம்.

"இந்தப் பரிசுத் திட்டத்தின் கீழ் சந்தா அனுப்பக் கடைசித் தேதி ஜூன் 15, 1981.

மானேஜர்,
கல்கி, சென்னை-600 032



வாசியுங்கள்!

ஜகத்குரு

(தெய்வீக மாத சஞ்சிகை)

விலை ரூ.1.50

வருஷ சந்தா ரூ 18.00

வெளிநாட்டு சந்தா விபரத்திற்கு எழுதவும்.

'ஜகத்குரு' ஆபீஸ்
ஸ்டேஷன் ரோடு,
சென்னை-600033

அரியகலை ஜோதிடத்தை அஞ்சலிலே கற்றிடுவீர்

ஜோதிடப்பயிற்சி

(தபால்வழி போதனாமுறைப் பயிற்சி)

வாழ்வு பாதையெல்லாம் வண்ணத்துப் பூங்காவா? அல்லது வரண்ட பாலையா? என்ற எண்ணத்தில் வாழ்வோர் எண்ணற்ற பலகோடி – இக்கலை தேடி வந்து இன்னமுதாய் கற்றுணரில் – தாமேயே வாழ்வறிந்து நடைபோடும் தெஞ்சடைவர்.

தானுங்கற்று – தளர்வோர்க்கும் – இடர்களைந்து – எதிர் காலம் அறிவித்து – இன்னலற வாழ் வழி கூறி – நலம் செய்யும் தரும்தொண்டுக்குகந்த கலை. கற்றவரை நாடினி தேடிவரும். கலங்குவோர் – சரம் கேட்பர். கரைபட்டோர் முறை கேட்பார். கரைசேர. அத்தகைய அரியகலை – பெரியதொரு வாய்ப்பிது. பிறிதொரு நாள் இவ் வாய்ப்பு – பெற்றிட இயலாது.


எவரும் ஏற்கின்ற இனிய நல்லமுறையினிலே எளிய நடையினிலே இன்னமுது அன்னமாக்கி இடுகின்றோம். நெஞ்சினிலே ஏற்றிடுவீர் விரைவினிலே. கற்றிடுவீர் – மகிழ்வுடனே. விளக்கமுறைப் பாடங்கள் விரிவான பக்கங்கள். பயிற்சி முடித்தார்க்கு பட்டமும், சான்றிதழும் பாங்குடனே தருகின்றோம். இதனை தொழிலாக கொள்வார்க்கு – துணை நிற்கும். கலை அறிவு பெறுவோர்க்கு கற்றதற்கு சான்றாக இது மணக்கும்.

சேரும் முறையும் – செலுத்திடும் கட்டணமும் அறிதற்கு – சுயவிலாசமிட்ட 50 **நயா பைசா** தபால் தலை ஒட்டிய கவரினைத்து 23-5-81 தேதிக்குள் மனுச்செய்து கொள்க. வெளிநாட்டவராயின் – பதிலுக்கான இண்டர்நேஷனல் கூப்பன் வாங்கி வைத்து அனுப்பிடுக.

பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்

ஸ்ரீமத் ஜெயவீர தேவா, யோகி

பிளாட் நெ. 204, கதவு எண்: 5, அண்ணாநகர்,
(அண்ணாநகர் தபால்நிலையம் அருகில்) **மதுரை 625 020 தமிழ்நாடு**



நாளைய இந்தியா

இளைஞனே வா — மறந்துவிடு
காதல் எனும் ஏமாற்று சொல்தனை
காதல் என்பது வெறும் அகராதி
வார்த்தை என்பதை உன் தலைமுறை
உணரட்டும் — நம்நாட்டுக்குத் தேவை
இனப்பெருக்கம் அல்ல—வேலைப் பெருக்கமே
இனச் செல்வம்தான் போதிய அளவு
உள்ளதே — அதுபோல் வேலைப் பெருக்கம்
போதிய அளவு உள்ள காலம் வரும்வரை
இரவுகள் வேண்டாம் நமக்கு — பகல்களே
போதும் — இளைஞனே வா.
நாளைய இந்தியா தனக்குத் தேவையான
செல்வங்களைப் பெற இன்று நீ உழை.

—எஸ். சிவஞானம்



BITTER SEVENTEEN

என் வயது பதினேழு. நான் தங்கள் போட்டியில் கலந்து கொள்ள இயலாது. சிறுவயது முதல் காது கேளாது. பேச்சும் சரிவர வராது. படிப்பு இல்லை. என் தந்தை எழுதிக் கொடுத்ததை அப்படியே பார்த்து எழுதுவது இது. இறைவன் எனக்கு நல்ல எதிர்காலத்தை அளிக்க நல்ல வாசகர்கள் பிரார்த்திப்பாராக!

மலர்விழி

பதினேழு ஆண்டு திரையுலகத் தொழிலில் 'ரே' இருபத்தி மூன்று பரிசுகளைப் பெற்றிருக்கிறார்.

★

புகழ்பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் அலெக்ஸாண்டர் டூமாஸ் ஒன்பது வருடத்தில் 329 நாவல்கள் எழுதியுள்ளார். ஒரு தடவை தன்னுடைய நண்பர் ஒருவருடன் சவால் விட்டு 17 மணி நேரத்தில் அவர் ஒரு நாவலை எழுதி முடித்தார்.

— இரணியல் 'ரேவதி'

★

ஆராதனை

இரண்டடங்குலத்தை
உயர்த்தும் ஹீல்கம்
நிறம் மாறிப்போன
பாண்ட்டும்
Every body Play base
ball பனியனும்
தோசைக்கல் குளிர் கண்
ணாடியும்
மலைச் சரிவைப் போல்
மண்டைமுடியும்
ஹெரால்ட்டையும்,
சேனையும்,
கிடைக்காத பட்சம்
சுஜாதாவையும்
ஆராதிக்கும் நானொரு
ஸ்வீட் ஸெவன்டீன்.

என். சுரேஷ்



ஸ்வீட் ஸைவன்டீன்



அடுத்த வீட்டுப் பால்காரன் கதவைத் தட்டும் ஓசை கேட்டுச் சட்டென்று விழித்தாள் வசந்தி. பரபரவென்று காலை வேலைகளை ஆரம்பித்தாள். அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் தம்பி ரவியையும், தங்கை ஜெயந்தியையும் எழுப்பினாள். இரவு முழுவதும் ஆஸ்துமாவுடன் போராடி அப்பொழுதுதான் கண்ணயர்ந்த அம்மாவுக்குக் காப்பியை பிளாஸ்கில் விட்டு வைத்து ''ஜெயந்தி, எனக்கு நேரமாகிவிட்டது. அம்மாவிடம் கேட்டு மீதிச் சமையலை முடித்து விடு. நான் அத்தை வீடு சென்று வருகிறேன்'' என்று சொல்லியபடியே இறங்கி நடந்தாள்.

ரம்யமான காலைப் பொழுதில் நடப்பதற்கு இதமாக இருந்தது. சத்தமின்றி அத்தை வீட்டுக் கேட்டைத் திறந்தவாறே உள்ளே நுழைந்தவளின் நாசியில் பூஜை அறையிலிருந்து கிளம்பிய தசாங்கத்தின் மணம் புகுந்தது. பால்காரன் கொண்டு வைத்த பாலை காஸில் வைத்தாள். அதற்குள் அத்தையும் பூஜை முடிந்து வெளியே வந்தாள். ''என்னம்மா, வசந்தி! வா! அம்மா இரவு தூங்கினாளா, உடம்பு எப்படி இருக்கு?'' என்று விசாரித்தாள். ''எப்பவும் போலத்தான் அத்தை. இந்தாங்க காப்பி. மாமாவுக்கும் ரெடியாக வைத்திருக்கிறேன். சமையலுக்கு என்ன காய் நறுக்கவேண்டும்?'' என்றவளை, ''முதலில் நீ மாடி சென்று பசங்களை எழுப்பு. நேரமாகிவிட்டது'' என்று கூறியபடியே கணவனுக்குக் காப்பியை எடுத்துச் சென்றாள்.

மாடியின் முதல் அறையில் படுத்திருந்த தன் தோழி சாருவின் அறைக்குச் சென்றாள். மயக்கும் குவியலாக நைட் கௌனில் படுத்திருந்த சாருவைப் பார்த்து மகிழ்ந்தாள். ''நீதான் எத்தனை அழகுடி'' என்று குனிந்து அவள் கன்னத்தில் முத்தமிட்டு, ''மணி ஏழு. எழுந்திரு'', என்றாள்.

கண்களைக் கசக்கியபடி, ''ஹாய் வசந்த்!-குட் மார்னிங்! வந்து ரொம்ப நேரமாச்சா?'' என்று கேட்டாள்.

''இப்பத்தான் வந்தேன். நிம்மி, சுந்தர், இருவரையும் விரைவில எழுப்பிக் கூட்டிக் கொண்டு வா. எனக்கு வேலை இருக்கிறது.''



அஜாதா சொன்ன கதை

அடுத்த ஒரு மணி நேரம் அவரவர்கள் அவரவர் வேலையில் ஆழ்ந்து போயினர். எட்டரை மணிக்கு டைனிங் டேபிளில் அமர்ந்த அவர்களுக்கு அத்தை பரிமாறினாள். வெங்காய சாம்பாரும் உருளைக் கிழங்கு ரோஸ்டும் எல்லோரும் விரும்பிச் சாப்பிட்டனர். டைனிங் டேபிளைச் சுத்தம் செய்துகொண்டே ''அத்தை! காலேஜில் வேலை இருக்கு. சாயங்காலம் வரக் கொஞ்சம் லேட் ஆகும். எந்த வேலையாக இருந்தாலும் வைத்திருங்கள். நான் வந்து செய்கிறேன்.'' என்றாள்.

காரைத் துடைத்தவாறே டிரைவர் காத்திருந்தான். ''அம்மா போயிட்டு வரோம்'' என்றவாறே அனைவரும் விடை பெற்றனர்.

சிறுசிறு வேலைகளை முடித்துவிட்டு அத்தை பார்வதி ஊஞ்சல் பலகையில் அமர்ந்தபோது அவள் எண்ணம் பின்னோக்கிச் சென்றது.

இருபது வருடங்களுக்கு முன் திருமணமான புதிதில் சந்தைப்பேட்டையில் ஒரு ஸ்டோரில் அவர்கள்குடியிருந்தபோது அடுத்த வீட்டில் குடியேறினர் வசந்தியின்அம்மா கமலமும் அப்பா சுந்தரராமனும். ஒத்த வயது, ஒத்த மனம் இருவரையும் தோழிகளாக்கின. சுந்தரராமனும், பார்வதியின் கணவர் சந்திரமௌலியும் அதற்குத் துணை புரிந்தனர். கமலம் வசந்தியை உண்டானபோது வாய்க்கு ருசியாகத் தினுசு தினுசாக ஏதாவது செய்து கொடுப்பாள் பார்வதி. மூன்று மாதத்தில் பார்வதி மசக்கையால் அவதியுறும்போது தன் பங்கைக் கமலம் விட்டு வைக்கவில்லை.

மூன்று மாத வித்தியாசத்தில் வசந்தி, சாருமதி பிறந்தபோது இருவருமே மகிழ்ந்து போயினர். சிறு வயதில் சாரு பிடிவாதம் பிடித்தால் வசந்தி விட்டுக் கொடுத்துவிடுவாள். பொறுமையான குணம் வசந்திக்கு இயற்கையிலேயே அமைந்திருந்தது. வசந்திக்குப் பின் மறு வருடம் ரகுவும், அடுத்து ஜெயந்தியும் அடுத்தடுத்துப் பிறந்துவிட்டனர். அடுத்தடுத்த பிரசவம், பணக் கஷ்டம், உடற் கஷ்டம் எல்லாம் கமலத்தை ஆட்டியபோது துணை நின்றனர் பார்வதி தம்பதியினர். அந்தத் துணைதான் உனக்குக் கடைசிவரை சாகவதம் என்பது போல் ஆபீசுக்குச் சென்றிருந்தபோது ஹார்ட் அட்டாக் என்ற கொடூரத்துக்கு ஆளான சுந்தரராமனை நான்கு பேராகத் தூக்கிக் கூடத்தில் கிடத்தியபோது நிலைகுலைந்து போய்விட்டாள் கமலம். வசந்தியைத் தவிர விவரமறியாத குழந்தைகள், ''அப்பா! அப்பா!'' என்று கதறி அழுதது கண்ருவியாக இருந்தது.

அவர் காரியங்கள் முடிந்து ஆபீசிலிருந்து வரவேண்டிய பிடித்தங்களை முறைப்படி வசூல் செய்து பாங்கில் பிக்ஸட் டெபாஸிட்டில் போட்டு மாதம் முந்நூறு ரூபாய் வரும்படி செய்தார் சந்திரமௌலி. தையல் மெஷினில் தைத்துக் கொடுத்து மேல் வரும்படிக்கு ஏற்பாடு செய்து கொண்டாள் கமலம்.

சந்திரமௌலி ஈடுபட்டிருந்த கான்டிராக்டுகளில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டது.

வாய்ப் பூட்டு

விமலா பாலு



(23-11-80 வாசகர் சிறப்பிதழில் சுமித்ராவும் சுஜாதாவும் சந்தித்து உரையாடினர். அப்போது சுஜாதா ஒரு சிறுகதைக்கான கருவைக் கூற சுமித்ரா ''இது பிரமாத ஐடியா. இதைச் சிறந்த சிறுகதையாக எழுதி அனுப்புகிற கல்கி வாசகருக்கு நான் நூறு ரூபாய் பரிசுதரத் தயார்'' என்றார். இதையொட்டி வாசகர்கள் எழுதிஅனுப்பிய ஏராளமான கதைகளில் பரிசுக்குரியது என்று தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தக் கதையை எழுதியவர் விமலா பாலசுப்பிரமணியம், வடலூர். - ஆசிரியர்)



இடைவிடாத உழைப்பும் சேர்ந்து அவளை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு சென்றது. அடுத்த தெருவிலிருந்த காலி மனையை வாங்கித் தன் வசதிக்கேற்றவாறு வீடு கட்டிக் கொண்டு அவர்கள் குடி பெயர்ந்த போது, தன் தோழியின் முன்னேற்றத்தில் மகிழ்ந்தாலும் தன்னை விட்டுப் போகிறாளே என்று கலங்கினாள் கமலம்.

நீண்ட இடைவெளிக்குப் பின் மாதமாக இருந்த பார்வதியும் தோழியின் பக்க பலம் அருகில் இல்லையே என்று கலங்கினாள். இருப்பினும், ''அடுத்த தெருதானே! நினைத்தால் நானும் வருகிறேன், நீயும் வா!'' என்று தோழியைச் சமாதானம் செய்தாள். சொந்த அத்தை என்று யாரும் இல்லாததால் குழந்தைகள் பார்வதியை 'அத்தை, அத்தை' என்று அழைத்தனர். மற்ற விஷயங்களில் அதிர்ஷ்டக் கட்டையாக இருந்த கமலம் குழந்தைகள் விஷயத்தில் புண்ணியம் செய்திருந்தாள். மூவருமே அக்கறையுடன் படித்தார்கள். சந்திரமௌலியும் அவர்களுடைய ஸ்காலர்ஷிப்புக்குப் பெரிதும் உதவினார். வசந்திக்கு வேண்டிய துணிகளையோ கமலத்துக்கு வேண்டிய மருந்துகளையோ அவ்வப்பொழுது பார்வதி வாங்கி வருவாள்.

தன்மானம் மிகுந்த வசந்திக்கு இவற்றைச் சும்மா பெறுவதில் மன உறுத்தல். தன்னால் இயன்ற உதவிகளைப் பார்வதிக்குச் செய்து தரவேண்டும் என்றுகாலைஅடுப்படியில் உதவி, சாருவுடன் சேர்ந்து கல்லூரி சென்று, மாலை வேலைகளை முடித்து பின் வீடு திரும்புவாள். நிம்மி, சுந்தர் பிறந்தபொழுது கமலம் – வசந்தியின் உதவி பார்வதிக்குப் பேருதவியாக இருந்தது. நாளுக்கு நாள் அவர்களுடைய நட்பு இறுகியதே தவிர குறையவில்லை.

சாரு வசந்தியின்மீது உயிரையே வைத்திருந்தாள். எஸ். எஸ். எல். ஸி.யில் பள்ளியின் முதல் மாணவியாக விளங்கிய வசந்திக்கு எச். எம். டி. வாட்ச் ஒன்றைப் பரிசாக அளித்தாள். தான் உண்டு, தன் படிப்புண்டு என்று ஒதுங்கிப் போகும் சுபாவம் வசந்திக்கு. ஆனால் கலகலப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு சாரு. கல்லூரியில் நடைபெறும் எந்தப் போட்டிகளிலும் முதல் மாணவி அவள். சாருவின் அழகும் கம்பீரமும் அவளைக் கல்லூரி ராணியாக்கியது. வசந்திக்குத் தன் தோழியின் அழகில் மிகவும் பெருமை. சாருவும் தான் பணக்காரி என்பதை விட தான் அழகி என்பதில்தான் மிகவும் பெருமை. தலைமுடியிலிருந்து கால் நகம் வரை கவனமாகப் பாதுகாப்பாள். எந்த டிரஸ்ஸும் அவளுக்கு நன்கு பொருந்தும்.

''வசந்த்! இந்த ஜாக்கெட் ஹூக்கை மாட்டிவிடு'' என்று திரும்பிய தோழியின் முதுகில் சிறு வட்டமாக ஒரு வெள்ளைத் தழும்பைப் பார்த்துத் திடுக்கிட்டாள் வசந்தி. ''இது என்னடி சாரு, வெள்ளையாகத் தேமல் மாதிரி'' என்று கேட்டாள்.

''அய்யய்யோ! தேமலா? எங்கே? எங்கே?'' என்று பதறிப்போனாள் சாரு.



..தாங்கள் கூறுவது?

⌘ ஆர். மார்க்கண்டன், விழுப்புரம்

கே: இடுக்கண் வருங்கால் நகுக என்கிறார்களே பிறருக்கு வரும் போதா, நமக்கு வரும் போதா?

ப: பிறர்க்கு வரும்போது நகுக; நமக்கு வரும் போது நடுங்குக!

⌘ சிவ. ராஜகுமார், சிதம்பரம்

கே: சட்டமன்றக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் செய்கைகள் பேச்சுகள் பத்திரிகைகளில் பிரசுரமாவதில்லையே, ஏன்?

ப: அவைகளைப் பற்றிப் பிரசுரிப்பது சட்ட விரோதம்.

⌘ கே. எஸ். குமார், விழுப்புரம்

கே: நீர் குன்றில் இட்ட தீபமா? குடத்தில் இட்ட குத்து விளக்கா?

ப: குன்றின்மேல் உள்ள குடத்தில் உள்ள குத்துவிளக்கின் தீபம்!

⌘ கே. வி. ஹரிகிருஷ்ணன், பெங்களூர் 17

கே: கோமதீஸ்வரர் மஸ்தாபிஷேகத்தைத் தரிசித்தீர்களா? ஜைன மதக் கோட்பாடுகள் என்ன என்பதை விளக்கமுடியுமா?

ப: முதல் கேள்விக்குப் பதில்: இல்லை. இரண்டாவது: தெரிந்தவரை விளக்குகிறேன். வர்த்தமானர் என்னும் மகாவீரரால் ஸ்தாபிக்கப்பட்டது ஜைன மதம். (ஜைன என்றால் வென்றவர் என்று பொருள்.) எட்டுத் தடவை பிறப்பெடுத்த பிறகு ஆத்மா நிர்வாணத்தை அடைந்து உலக பந்தங்களிலிருந்து விடுபடுகிறது என்பது ஜைன தத்துவம். அஹிம்சையின் அடிப்படையில் அமைந்திருப்பது ஜைன மதம். ஜைனத் துறவிகள் ஐந்து பிரதிக்ஞைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். கொல்லாமை, பொய் உரையாமை, திருடாமை, சிற்றின்பம் நாடாமை, இச்சை கொள்ளாமை.

⌘ ச. எஸ். ஸ்ரீதரன், திருநின்றவூர்

கே: 'சிந்தித்துக்கொண்டே இருந்தால் பைத்தியமாகி விடுவார்கள்' என்கிறார்களே?

ப: யார் சொன்னது? பைத்தியக்காரனால் தான் சிந்திக்காமல் இருக்க முடியும் என்று ஆர்தர் கோஸ்லர் சொல்லியிருக்கிறார். பெர்னார்ட் ஷா சொன்னார்: ''வருஷத்தில் இரண்டு மூன்று தடவைகளுக்கு மேல் சிந்திப்பவர்கள் உலகில் வெகு சிலரே. வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு தரம் சிந்தனை பெற்று உலகப் புகழ் பெற்றுவிட்டேன்'' இரவு உறங்கப் போகு முன்பு ஒரு நிமிஷம் யோசித்துப் பாருங்கள்; அன்றைய தினம் புதிதாக என்ன சிந்தித்தீர்கள் என்று. பெரிய பூஜ்யமாக இருக்கும்.

கடுகு பதில்கள்!

⌘ காசிநாதன், அம்மையப்பட்டு

கே: சாராயக் கடைகள் சந்து பொந்துகளில் எல்லாம் சரளமாக இருப்பதைத் தவிர்க்கவே முடியாதா?

ப: முடியும். ஊருக்கு ஊர் சூபர் மார்க்கெட் கட்டி விற்பனை செய்தால், சந்துகளில் ஏன் விற்பனை நடக்கப் போகிறது? சாராயம் ஆண்டவன் அளித்த மிகப் பெரிய சாபக்கேடு.

⌘ மேஜர்நாதன், ஈரோடு 10

கே: கலைமாமணி, பத்மஸ்ரீ. டாக்டர் பட்டம் சர்வ சாதாரணமாக வழங்கப்படுகிறதே?

ப: இது உண்மையாக இருந்தால், 'கலைமாமணி டாக்டர் கடுகு பதில்கள்' என்கிற தலைப்பு அல்லவா இப்பகுதிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும்!

⌘ தோ ராஜகோபாலன், ஜனக்புரி (டில்லி)

கே: சிந்திக்க வைக்கும் ஒரு புதுக்கவிதை ஏதாவது படித்தீர்களா, சமீபத்தில்?

ப: ரசித்த கவிதையைத் தருகிறேன். வாசகர் ஒருவர் அனுப்பியிருந்தார், கவிஞர் முத்துலிங்கம் இயற்றிய புதுக் கவிதையை.

தலைப்பு: வானம்.

மேகக் கப்பல்களின் ஆகாசத் துறைமுகம்
மின்னல் மோகினியின் நாட்டிய மேடை
சூரிய சந்திரரின் தேசிய நெடுஞ்சாலை
மழைச் சம்பளத்தின் ரிசர்வ் பாங்க்
நீர்க் கடன் வழங்கும் நிலவள வங்கி
நட்சத்திர வைரங்களின் வெல்வெட் பெட்டி
பிரபஞ்சப் பெருவெளியின் தூணில்லாக் கூரை.

⌘ இரா. வேலுமணி, மதுரை-1

கே: கமலஹாசன் திருமணம், ரஜினிகாந்த் திருமணம் - தாங்கள் கூறுவது?

ப: மூன்று எழுத்துப் பெயர் உடையவர்கள் (ரஜனி, கமல்) இரண்டு எழுத்துப் பெயர் உடையவர்களை (லதா, வாணி) கல்யாணம் செய்து கொண்டிருக்கிறார்கள். முன்னது பாலாஜி முன்னிலையில். மற்றது பாலசந்தர்ஜி முன்னிலையில்.

பரிசு பெறுபவர்:
கே. வி. ஹரிகிருஷ்ணன், ஏ. எஸ். டி. ஈ
(ஏ. எஃப்) விமான்புரா
பெங்களூர்-17



''ஒன்றுமிருக்காது. பால்தேமலாக இருக்கும். துளசிச் சாறு தடவினால் சரியாகி விடும்'' என்று தனக்குத் தெரிந்த வைத்தியத்தைச் செய்தாள். அத்துடன் அந்த விஷயம் மறந்தே போய்விட்டது அவர்களுக்கு. அம்மாவிடம் கூட தன் அந்தரங்கத்தைப் பகிர்ந்துகொள்ள மறுக்கும் சாரு, வசந்தியிடம் ஒளிவு மறைவின்றி இருப்பாள். எண்ணெய் தேய்த்து விடுவது கூட அவள் தான்.

மறு ஞாயிறு சாருவுக்குத் தலை தேய்த்து விடும்போது மறுபடி ஒரு தழும்பு தொடையில் இருப்பதைப் பார்த்தாள் வசந்தி. தோழிகள் இருவருக்குமே ஒரே குழப்பம்.

''சாரு! இனி இப்படி சும்மா இருப்பது தப்பு. அத்தையிடம் சொல்லி ஏதாவது ஒரு ஸ்கின் ஸ்பெஷலிஸ்டிடம் காண்பிப்போம்.''

''வேண்டாம்! வேண்டாம்! இப்போ அம்மாவிடம் எதுவும் சொல்லாதே. பயந்துவிடுவாள். நாம் இருவருமாகவே சென்று டாக்டரை முதலில் பார்ப்போம்.''

ஊரிலேயே பெரிய ஸ்கின் ஸ்பெஷலிஸ்டிடம் அப்பாயிண்ட்மெண்ட் செய்துகொண்டு இருவரும் சென்றனர். முதலில் சாதாரண டெஸ்ட்களை முடித்துக்கொண்டு, ''எத்தனை நாளாக இருக்கு? அரிப்பு உள்ளதா?'' என்றார் டாக்டர்.

நெர்வஸ்ஸாக இருந்த சாரு, ''இது என்ன வியாதி டாக்டர்? எனக்குப் பயமாக இருக்கு'' என்றாள்.

''டோண்ட் வொரி. டெஸ்ட் ரிஸல்ட்டுகள் வந்த பிறகு தீர்மானிக்கலாம். இரண்டு நாள் சென்று வந்து பாருங்கள்!''

அவர்கள் இருவரும் பயந்தது போலவே இரண்டாம் நாள் டாக்டர் கூறியதுபடி சாருவுக்கு வந்திருப்பது லூகோடெர்மா என்பது தீர்மானமாயிற்று. கண்களிலிருந்து பெருகிய கண்ணீரைச் சாருவால் கட்டுப்படுத்த முடியவில்லை. டாக்டர் ஆறுதலாக, ''நீங்கள் ஆரம்ப நிலையிலேயே வந்திருப்பதால் விரைவில் குணமடையலாம். நீங்கள் ஒரு ஸயன்ஸ் ஸ்டூடன்ட். இப்படிப் பதறலாமா? எல்லோரும் நினைப்பது போல் இது தொத்து வியாதியோ, பரம்பரை நோயோ அல்ல. விடாமல் நான் கொடுக்கும் மருந்துகளைச் சாப்பிட்டு ஊசிகள் போட்டால் குணமடையலாம்'' என்றார்.

டாக்டரிடம் விடை பெற்ற பின் தனது பியட்டை பீச்சுக்கு ஓட்டினாள். இருவரிடையே பெரும் மௌனம் நிலவியது. வாய்மொழியால் ஆறுதல் சொல்ல முடியாத வசந்தி தோழியின் கைகளை இதமாக அழுத்தினாள். ஆள் நடமாட்டமில்லாத பகுதியில் அமர்ந்தனர்.

''வசந்த்! நீ எனக்கு ஒரு சத்தியம் செய்து தரவேண்டும். செய்வாயா?''

''என்ன சாரு? திடீரென்று என்மீது சந்தேகம்? உனக்காக நான் எதையும் செய்வேன், சொல்.''

''நாம் டாக்டரிடம் போனது, எனக்கு வந்திருக்கும் நோய், செய்துகொள்ளப் போகும் ட்ரீட்மெண்ட் எதைப் பற்றியுமே

நீ யாரிடமும், ஏன் என் அம்மா அப்பாவிடம் கூடச் சொல்லக் கூடாது.''

''என்ன சாரு, அத்தை மாமாவிடம் விஷயத்தைச் சொல்லாமல் எப்படி இருப்பது?''

''வசந்த்! என்னைப் பற்றித்தான் உனக்கு நன்கு தெரியுமே! என் அழகுதான் நான் விரும்பும் சொத்து. என் பெற்றோர் கூட என் வியாதியைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்ற நினைப்பே எனக்கு அதிர்ச்சியாக உள்ளது. என் இமேஜை அழித்துக் கொள்ள நான் விரும்பவில்லை. காலம் வரும்போது நானே சொல்கிறேன். அதுவரை நீ பொறுத்துக்கொள்.''

இருட்டிக் கொண்டு வரவே வீடு திரும்பினர். திடீரென்று இருவரிடையே கலகலப்பு குறைந்தது பார்வதிக்குச் சந்தேகத்தைக் கொடுத்தது. ''ஏம்மா வசந்தி? ஏன் எப்படியோ இருக்கீங்க ரெண்டு பேரும்?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை அத்தை. படிப்பு அதிகமல்லவா அதான்.''

ட்ரீட்மெண்ட் தொடர்ந்தது. அவள் எங்கு வரக்கூடாது என்று பயந்தாளோ அது நடந்தே விட்டது. முகத்தில் காதோரத்தில் தோன்றிய தழும்பைப் பார்த்து, 'இனி மறைக்க முடியாது. என்ன செய்வது?' என்று கலங்கி விட்டாள். அன்று வசந்தி வருவதற்கு முன் தானாகவே, ''அம்மா, அவசரமாக ஒரு ஃப்ரெண்டைப் பார்க்க வேண்டியிருக்கிறது. வசந்தியிடம் சொல்லி விடு'' என்று தன் காரைக் கிளப்பினாள்.

மறுநாள் காலை வழக்கம்போல் சாருவை எழுப்ப வந்த வசந்தி சாருவின் நிலை கண்டு பதறிப்போனாள். அவள் இரு கைகளிலும் இரு கடிதங்கள். ஏதோ தீர்மானித்தவள் தன் பெயரிட்டிருந்த லெட்டரை ஜாக்கெட்டினுள் மறைத்து அடுத்த கடிதத்தை நோக்கினாள். ''அப்பாவுக்கு'' என்று ஆரம்பித்திருந்தது. கீ கொடுத்த பொம்மையைப் போல் வாய் பேசாது பரபரவென்று இறங்கி லானில் பேப்பர் படித்துக் கொண்டிருந்த சந்திரமௌலியை இழுத்து வந்தாள்.

''என்னம்மா வசந்தி! ஏன் இந்தப் பதற்றம்?'' என்றவரை சாருவிடம் கொண்டுநிறுத்தினாள். அவர் கடிதத்தைப் பிரித்தார்.

''அன்புள்ள அப்பா, என்னை மன்னித்து விடுங்கள். எதிர்பாராமல் உங்களைப் பெரும் அதிர்ச்சிக்கு ஆளாக்கி விட்டேன். என் தற்கொலையின் காரணத்தை நான் யாரிடமும் சொல்லிக்கொள்ள விரும்பவில்லை. வசந்தியிடம் கூடத்தான். இதனால், என் தூய்மையைச் சந்தேகிக்காதீர்கள். என்றும் நான் உங்கள் சாருதான். இது தற்கொலை என்ற விஷயம் வெளியே தெரிய வேண்டாம். நான் விஷத்தைக் குடித்து விட்டேன். ஊர் உலகத்துக்குப் பாம்பு கடித்து இறந்ததாகத் தெரிவித்து விடுங்கள். அம்மாவைத் தேற்றுங்கள்.

—இப்படிக்குத் துரதிருஷ்டசாலி சாரு.''

''ஐயோ சாரு! மோசம் செய்து விட்டாயே!'' என்று அலறியவரின் குரல் கேட்டு வந்த பார்வதி, நிம்மி, சுந்தரின் நிலைமையைப் பற்றி எதுவும் சொல்வதற்கில்லை.

யார் யாரோ வந்தனர், போயினர். ''இவ்வளவு அழகான பெண்ணுக்கு இப்படியொரு கதியா? சிவந்த உடல் எப்படிக் கறுத்து விட்டது? வாசனைப் பூச்செடிகளை இதனால்தான் வீட்டைச் சுற்றி வைக்கக் கூடாது'' என்று பலரகப்பட்ட அங்கலாய்ப்புக்கள்.

மயக்க நிலையிலேயே கிடந்த வசந்தியைத் தண்ணீர் தெளித்து விழிக்க வைத்தனர். நேரமாகி விட்டதால் பிணத்தைக் குளிப்பாட்ட ஏற்பாடு செய்தனர்.

உசுப்பிக்கொண்டு எழுந்த வசந்தி, ''அம்மா! தயவு செய்து சற்று எல்லோரும் தள்ளிப் போங்கள். அவள் அம்மாவைக் கூடக் குளிக்கும்போது அனுமதிக்க மாட்டாள். நானே அவளுக்குக் கடைசிக் குளியலையும் செய்து விடுகிறேன்'' என்று கூறினாள். அனைவரும் அகன்ற பின், ''சாரு, உன் இமேஜை காப்பாற்றி விட்டேன்'' என்று கதறியவாறு அலங்காரத்தை முடித்தாள்.

அழுது அழுது வீங்கியிருந்த முகத்தைக் கழுவச் சென்றபோது தோழியின் லெட்டர் நினைவுக்கு வந்தது.

''என் இனிய தோழி வசந்தி,

என் திடீர் முடிவை நீ எதிர்பார்த்திருக்க மாட்டாய். நேற்று முதன் முதலில் நீயின்றி நான் வெளியே சென்றேன். எதற்குத் தெரியுமா? என் முடிவைத் தேடிக்கொள்ள விஷம் வாங்கத்தான். நாம் நினைத்தது போல் டாக்டரின் வைத்தியத்தில் என் நோய் குறையவில்லை. முகத்தில்கூடப் பரவ ஆரம்பித்து விட்டது. ஊராரின் கண்களுக்கு அழகு ரதமாக உலவி வந்த நான் அசிங்கத்தின் உருவமாகி விடுவேன். என்னதான், 'இது பரம்பரை வியாதி அல்ல; தொத்து நோயும் இல்லை என்றாலும் நம் மக்கள் இதை அருவருக்கத் தக்கதாகத்தான் நினைக்கின்றனர். இதனால் என் தம்பி தங்கைகளின் வாழ்க்கைக்கு முட்டுக்கட்டை போட நான் விரும்பவில்லை. ஏன்? எனக்கே என் பிம்பத்தைக் காணும் சக்தி இல்லை. இவ்விஷயங்கள் உன்னை விட்டு என்றும் வெளியே வரக் கூடாது. இது என்மீது ஆணை. என் இனிய தோழியே உன்னை விட்டுப் பிரியும் இக்கடைசி நேரம் பொல்லாதது.''

—உன் அன்பு சாரு.

''சாரு! சாரு! உனக்கு இப்படி ஒரு முடிவா? என் வாய்க்குப் பூட்டுப் போட்டு விட்டாயே, அது திறவாமல் இருக்க எனக்கு மன உறுதி கொடு'' என்று தனக்குள் புலம்பிக் கொண்டுதான் இருக்கிறாள் வசந்தி.

சாருவுடைய செயலைக் கோழைத்தனம் என்று சாடுவதா, அல்லது தன் தம்பி தங்கைகளுக்காக அவள் செய்த தியாகம் என்று போற்றுவதா, அல்லது அவள் செயலுக்குக் காரணமாகிய சமுதாய மனப் போக்கை நொந்துகொள்வதா, வசந்திக்குப்புரியவில்லை.

விபீஷணன்

விபீஷணன் என்றால், பயமில்லாதவன் என்று பொருள்.

'ஆண்டவனைச் சரண் அடைபவர்களுக்குப் பயமில்லை' என்ற சரணாகதித் தத்துவத்தின் விளக்கமே விபீஷணன்.


-வாரியார் விரிவுரையிலிருந்து -வ. தேனப்பன்



ஜி. பஞ்சவர்ணம் (வர்ணம், ஓவியர், குமுதம்) அவர்களின் புதல்வி திருவளர் செல்வி ரேவதிக்கும் கால்கழனி திரு ஜெகந்நாதன் அவர்களின் குமாரன் திருவளர்ச் செல்வன் குணசேகரனுக்கும் (New India Maritime Agencies, Bombay) சமீபத்தில் சென்னையில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்

'இலக்கிய புனருத்தாரணம்' என்று ஒரு புதுப் பத்திரிகையைத் துவங்குவதற்காகப் பிரபல எழுத்தாளர் ஏகாம்பரம், பாங்க் ஒன்றை அணுகிப் பணம் கடன் கேட்டார்; கிடைக்கவில்லை. அந்தக் கோபத்தில் சரசர வென்று பாங்குகளைத் தாக்கிக் கட்டுரை எழுதினார். அதை இங்கு தருகிறோம். எழுத்தாளர் ஏகாம்பரத்தின் கருத்துக்கள் ஆசிரியரின் கருத்துகள் அல்ல. பார்க்கப் போனால் அவை ஏகாம்பரத்தின் கருத்துக்களும் அல்ல!



ஹூம், இந்த பாங்குகள்!

உலகில் எத்தனையோ கட்டுப்பாடுகள் உள்ளன. ஆனால் முக்கியமான ஒன்றான 'பாங்க் இனப் பெருக்கக் கட்டுப்பாடு' இதுவரை வராதது ஆச்சரியத்தையும் பயத்தையும் ஏற்படுத்துகிறது.

இன்று மூலைக்கு மூலை பாங்குகள் வந்துவிட்டன. சினிமாக் கம்பெனிகளைவிடப் பாங்குகள் பெரிதாக விளம்பரம் செய்கின்றன. உங்களை வருந்தி வருந்தி அழைக்கின்றன. எதற்கு? பண உதவி அளிக்க. ஆனால் ஒரு ரூபாய் கடன் வாங்க ஒன்பது ரூபாய்க்குக் 'கியாரண்டி' தரவேண்டும்.

குறைந்தவட்டிவிகிதம் என்று சின்னதாகப் பொடி எழுத்தில் போட்டு விட்டால் வட்டி குறைவாகி விடுமா?

ஒரு காலி மனை இருந்தால் அங்கு கட்டிடம் கட்டக் கடன் கொடுக்கிறது பாங்க். ஆனால் அதில் தெருவைப் பார்த்தபடி வசதியான முறையில் உள்ள போர்ஷனை பாங்கிற்கு வாடகைக்குக் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லி விடுகிறார்கள். 'இன்றைய காலி மனை; நாளைய பாங்க்' என்ற புதுமொழி விரைவில் வந்துவிடும்.

இப்படி பாங்குகள் ஒருவித ஃபாமிலி பிளானிங் இல்லாமல் பெருகிக் கொண்டிருக்கின்றன. இது நல்ல அறிகுறியா என்று சீர் தூக்கிப் பார்க்க வேண்டும்.

''நாங்கள் வெற்றிலை பாக்குக்கடைகூடக் கடன் கொடுக்கிறோம்'' என்று ஒரு பாங்க் அதிகாரி பெருமையாகச் சொன்னார். நல்லது. ஆனால் வெற்றிலை பாக்குக் கடைகள் வைக்க இடம் எங்கு இருக்கிறது. அங்கெல்லாம் பாங்குகள் வந்து விட்டனவே! இதற்கு என்ன பதில்?

போகட்டும், நம்முடைய பணத்துக்கு இத்தனை சதவிகிதம் வட்டி கொடுக்கிறோம் என்று 'பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை' டைப்பில் போடுகிறார்களே, அவர்கள் கொடுக்கும் கடனுக்கு எவ்வளவு வட்டி கேட்கிறார்கள் என்றும் போடக் கூடாதா?

பாங்குகளின் மனப்பாங்கு மாற வேண்டும். (இவ்வேடை நயத்தைக் குறைந்தபட்சம் கி.வா.ஜ. வாவது கவனிப்பார் என்று நினைக்கிறேன்.)

வங்கிகளில் கடனை வாங்கி விட்டால், வங்கிகள் நம்மைப் பொறுத்தவரை உயிரை வாங்கிகள் ஆகிவிடுகின்றன. ரத்தத்தை உறிஞ்ச ஸ்ட்ராவைத் தேட ஆரம்பித்து விடுகின்றன. சில சமயம் நமக்கு ஷூரிட்டி போட்டவர் ரத்தத்தையும் சேர்த்து உறிஞ்சுகின்றன. (நமக்கு: ஸ்ட்ரா; அவருக்கு எக்ஸ்ட்ரா!) இதன் காரணமாக மக்கள் பிளட் பாங்க் பக்கமே போகப் பயப்படுகிறார்கள். பாங்க் என்ற சொல்லே பீதியைக் கிளப்புகிறது. (உடனடியாக ப்ளட் பாங்கின் பெயரை மாற்றினால் மக்கள் பயம் நீங்கி ரத்த தானம் செய்ய வருவார்கள்!)

பாங்குகளில் பாஸ் புஸ்தகம் கொடுக்கிறார்களே, அதற்கு ஏன் பாஸ் புக் என்று பெயர்? பொதுவாகப் பலரது புத்தகத்தில் 10, 20 என்றுதான் இருக்கும். 35 இருந்தாலாவது அதைப் பாஸ் புக் என்று சொல்லலாம். மற்றபடி எல்லாம் 'ஃபெயில் புக்'குகள்தான்! (சில சமயம் 'பாங்கு' புத்தகங்கள் 'ப்ளாங்க்' புத்தகங்கள் என்று சொல்லும்படி உள்ளன.)

ஆகவே, அருமை பாங்காளர்களே, உடனடியாக உங்கள் மனப்பான்மையை மாற்றிக் கொண்டு இலக்கியப் பத்திரிகைகள் தோன்ற பண உதவி செய்யுங்கள். இல்லாவிடில் இதை விடக் காரமான கட்டுரைகள் எழுதி ஒரு லட்சம் காப்பி அச்சடித்து நாடெங்கும் விநியோகம் செய்து விடுவேன். குறைந்த பட்சம் இதற்கு ஆகும் செலவுக்காவது கடன் கொடுப்பீர்களா?

இதற்குக் கடன் கொடுப்பதை விட 'இலக்கியப் புனருத்தாரண'த்துக்குப் பண உதவி தந்தால் பாங்குகளும் பிழைக்கும், இலக்கியமும் தழைக்கும்!

—பி. எஸ். ஆர்.

சுவிட்சர்லாந்துநாட்டின்மந்திரி சபையில் ஒரு அங்கத்தினருக்கு என்ன மதிப்பு உண்டோ அதே மதிப்புத்தான் அனைவருக்கும். பிரதம மந்திரி' என்ற பதவி



யாருக்கும் இல்லாது அனைவரும் பொறுப்பு வகிக்கும் இம் முறை அம் மக்களின் சரித்திரத்தில் ஊறிய ஒரு சிறப்பு அம்சமாகும்.

- பி. நாராயணன்

கஸ்தூரிக்கு ஏற்பட்ட குற்ற உணர்வு சடுதியில் அடங்கிவிடவில்லை. எல்லா விதத்திலும் நல்ல விதமாக நடந்து கொள்ளும் ஒரு பெண்ணைத் தானே நன்கு கவனித்து மனத்துக்குள்ளே கணிப்புச் செய்து கொண்ட பின்னரும் — கேட்பார் பேச்சைக் கேட்டுச் சந்தேகித்துக் கலவரப்பட்டது எத்தனை ஒரு பெரிய குற்றமாகும்?

பெண் உரிமைக்காகப் போர்க் கொடி ஏந்துகிறவள் — போயும் போயும் ஒரு பொறாமைக்காரியின் பேச்சைக் கேட்டுத் தன் மருமகளைப் பற்றித் தப்பாக எண்ணிக் கொண்டு விட்டாளே... அவள் செய்தது ரொம்பத் தவறு.

மனச்சாட்சியின் உறுத்தலைத் தாளமுடியாது. அந்தத் தவறுக்கு என்ன ஈடு செய்தாலும் போதாது என்ற நினைவுடன் அவள் தினமும் ஏதாவது ஒரு சிறு பரிசை வரும் வழியில் தன் மருமகளுக்காக வாங்கி வந்தாள்.

"இராட்சைப் பழம் உனக்குப் பிடிக்கும்னு தெரியும். வண்டிக்காரன் பச்சைத் திராட்சையை மலைபோல் குவிச்சுண்டு போறதைப் பார்த்தேன். உடனே காரை நிறுத்தி ஒரு கிலோ வாங்கிண்டு வந்தேன்."

"அத்தை! என்னத்துக்கு உங்களுக்கு இந்தத் தொந்தரவெல்லாம்?"—செல்லமாகச் சிணுங்கியபடி பொட்டலத்தை மாதங்கி தன் மாமியாரிடமிருந்து ஆசையுடன்தான் வாங்கிக் கொண்டாள். அவளுக்கு ரொம்பப் பெருமையாகத்தான் இருந்தது. மாமியாருக்கு அவள் மீது இத்தனை அன்பா?

இன்னொரு நாள்...'அகர்வாலில் உனக்குப் பிடிக்குமேன்னு ஜிலேபி கொஞ்சம் வாங்கிட்டு வந்தேன். ஒண்ணைப் பிட்டு வாயில் போட்டுப் பார்... கரைஞ்சு தேனுக வாயெல்லாம் தித்திக்கும்... உனக்கு இனிப்புப் பண்டம்னு உசிரு என்று கல்யாணத்தும் போதே நான் கண்டு பிடிச்சுட்டேனே!' மிட்டாய்ப் பெட்டியை மருமகள் கையில் கொடுத்துவிட்டுச் சிவந்து போன அவள் கன்னத்தை மெல்லக் கிள்ளி விளையாடினாள்.

மாதங்கிக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

அவள் ஒரு வழியில் மிகவும் கொடுத்து வைத்தவள்.

சொந்த மகளைவிட ஒரு படி மேலான அன்புடன் கஸ்தூரி அவளைக் கவனித்துக் கொள்கிறாளே?

'ஜயந்தி அக்காவுக்குப் புத்தி ஏன் இப்படித் தடுமாறிப் போகணும்? கண் நிறைந்த கணவன் —ஹர்ஷன் - வசதியான வாழ்க்கை— உள்ளங்கையில் வைத்துத் தாங்கும் மாமியார் இப்படி ஒரு நல்ல இடம் கிடைப்பது ரொம்பக் கஷ்டமாச்சே?'

தன் அதிர்ஷ்டத்தை எண்ணி எண்ணி அடிக்கடி வியந்து கொண்டாள். ஆனாலும் நெஞ்சத்தின் ஒரு மூலையில் தாங்க முடியாத வருத்தம் அழுத்திக் கொண்டுதான் இருந்தது.

தன்மேல் பாசமும் நேசமுமாக இருக்கும் மாமியாரின் மனத்தை நோகச் செய்யக் கூடாது என்று பொறுமையாகத்தான் இருக்க முயன்றாள்.

அதே சமயம் அவளையும் மீறித் துயரம் அவள் மனத்தைக் குலுக்கியது. கல்யாணத்தின் போது ஏற்பட்ட ஒரு கலவரத்தை நிவர்த்திக்கப் பெரியவர்கள் செய்த ஒரு திடீர் மாற்றத்துக்காக ஹர்ஷன் அவளை ஏன் இவ்வாறு தண்டிக்க வேண்டும்?

ஜயந்தியை மணந்து கொண்டிருந்தால் மட்டும் அவன் வாழ்க்கை மிகவும் ஆனந்தமாகவோ அமைதியாகவோ இருந்திருக்குமென்பது என்ன நிச்சயம்?


ஜயந்தி அக்கா நினைத்தபோது கோபத்திலே வெடிக்கும் குணம் கொண்டவளாச்சே? யாரையும் துச்சமாகத் தூக்கி எறிந்து விடுவாளே? வீட்டிலே எதையும் செய்ய விரும்பாத படு சோம்பேறியாச்சே?

இவையெல்லாம் ஹர்ஷனுக்குத் தெரியுமா?

பெண் பார்க்க வந்தபோது ஒப்பனையில் அழகாகத் தெரிந்த ஜயந்தி அக்காவைப் பார்த்து மயங்கிப் போனான்.

பெரியவர்கள் ஏற்பாடு செய்தபடி முன்னறையில் உட்கார்ந்து ஒருசில வார்த்தைகள் இருவரும் பேசினார்கள்.

அவன் போன பின்பு உள்ளே வந்த ஜயந்தி அக்கா அவளிடம் வந்து சொன்னது என்ன என்பது அவளுக்கல்லவா தெரியும்?



கழுத்தில்....

அன்று என்ன சொன்னான்?

"ஸ்டுபிட் ஃபெல்லோ! நான் வேலைக்கு இண்டர்வியூவுக்கு வந்து நிக்கறது போல் கேள்வி மேலே கேள்விகளாகப் போட்டுத் தொலைச்சுட்டான்.

"பாடத் தெரியுமா? பரதம் வருமா? சமைக்கத் தெரியுமான்னு ஒரே தொண-தொணப்பு.

"எனக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. நானும் பதிலுக்குச் சில கேள்விகளைப் படபடன்னு கேட்டு வைச்சேன்.

"டென்னிஸ் ஆடத் தெரியுமா? ஏதாவது பந்தயத்திலே ஜெயிச்சுக் கோப்பைகள் வாங்கின மகிழ்ச்சியான அனுபவங்கள் உண்டா? கல்லூரி நாட்களில் நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறீர்களா?

"உற்சாகமாக அவன் எல்லாத்துக்கும் தலையாட்டினபோது எனக்கு ஆத்திரம் பொங்கிண்டு வந்தது.

"நீஞ்சத் தெரியுமா? ஏதாவது போட்டியிலே கலந்து கொண்டிருக்கிறீர்களா? அப்படின்னு ஒரு கேள்வியை எழுப்பினேன். மனிதன் ஆடிப்போயிட்டான்!

"'பந்தயத்தில் கலந்துக்கிற அளவுக்குப் பயிற்சி இல்லே. ஓரளவுக்கு நீச்சல் வரும்' என்றான் அசட்டுச் சிரிப்புடன்.

"'ஓரளவு என்கிற வார்த்தைக்கு இதில் அர்த்தமே இல்லை. ஆற்றில் இறங்கிட்டு ஓரளவு நீஞ்சத் தெரியும்னு தண்ணி கிட்டச் சொன்னா என்ன நடக்கும்? மூழ்கிப்போய் விடுவீங்க. நீஞ்சத் தெரியும் தெரியாது என்கிற இரண்டில் ஒரு பதில்தான் இதுக்குச் சொல்லணும். கிணற்றை ஓரளவு தாண்டுவேன்னு சொல்லிட்டுப் பாதிக் கிணத்தைத் தாண்டினால்....?'

"நான் குபீர்னு சிரிச்சுட்டேன். மாப்பிள்ளைப் பையன் முகம் போன போக்கை நீ பார்த்திருந்தால் விழுந்து விழுந்து கூடவே சிரிச்சிருப்பே. பிள்ளையாண்டான் ஒரு பெரிய 'அம்மாக்கோண்டு'ன்னு கேள்வி. அதான் அப்படி ஒரு அசட்டுப் பார்வை..." என்றாள் ஜயந்தி அக்கா.

மாதங்கிக்கு ஏனோ அவள் மேல் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

உரிமை ஒன்றும் இல்லாதபோது ஹர்ஷனை இப்படிப்பரிகசித்து வேடிக்கை பண்ணுகிறவள் நாளைக்கு மனைவி என்கிற அந்தஸ்து வந்ததும் அவனை எப்படி ஆட்டிப் படைத்து அட்டஹாஸம் பண்ணப் போகிறாளோ! ஐயோ பாவம்... இவளது பொல்லாத்தனத்தை யார் அவனிடம் எடுத்துச் சொல்ல முடியும்?...

தனக்குள்ளே ஹர்ஷனுக்காகப் பரிதாபப் பட்டாள்.


அவனுக்கும் அவளுக்கும் இடையே உறவொன்றும் ஏற்படாததற்கு முன்னர்... அந்தப் பெண் யார் என்று ஹர்ஷன் அவளைப் பற்றித் தெரிந்து கொள்ளக்கூட முயலாத அந்தச் சமயம்... மாதங்கி அவனுக்காக எப்படி உருகித் தவித்துப் போனாள்?

ஜயந்தி செய்த அசட்டையைக் கண்டு கோபமடைந்தாள். வருந்தினாள். தனக்கேற்பட்ட அவமானம் போலத் துடித்தாள். ஆனால் அவன்?

மனைவி என்ற உறவுடன் அவன்வீட்டுக்குள் வந்து விட்டவளுக்கு ஹர்ஷன் தந்த வரவேற்புத்தான் என்ன? தொடர்ந்து அவன் காட்டும் அசட்டைதான் எத்தனை?

எந்தப் பெண்தான் இவைகளை நீடித்துப் பொறுத்துக்கொள்ள இயலும்?

யாரும் வீட்டில் இல்லாதபோது உணர்வுகள் தொய்ந்துவிடும்போது அவள் தனக்குக் கிடைத்திருக்கும் அந்தப் போலியான மண வாழ்க்கையை எண்ணிச் சிலசமயம் கண்ணீர் வடித்தாள். குமுறி அழுதாள். தன்



ளைத் தானே சமாதானம் செய்து கொள்ளவும் முயன்றாள்.

அன்று மாலை அலுவலகத்திலிருந்து கஸ்தூரி திரும்பியபோது கையில் ஒரு பார்சலுடன் காரிலிருந்து இறங்கினாள்.

''என்ன அத்தை இது?'' — உரிமையுடன் கடித்துகொண்ட மாதங்கி ஓடிச் சென்று பிரீஃப் கேஸையும் பார்சலையும் சட்டென்று வாங்கிக் கொண்டாள்.

''ஆபீஸிலே வேலை நடுவே — நாளைக்கு உனக்குப் பிறந்த நாளுங்கிற ஞாபகம் திடீர்னு வந்தது. ரொம்பப் பிரமாதமா வாங்கிடலை. ஒரு சின்னப் பரிசு. ஒரு பிரின்டெட் சாண்டேரி புடவை வாங்கினேன். அவ்வளவுதான்.பார்சலைப் பிரிச்சுப் பாரேன்'' உத்தரவிட்டாள் மாமியார்.

ஆழ்ந்த நீல உடலில் ஜரிகைக் கட்டங்கள்; தலைப்பிலும் கரையிலும் பொடிப் பொடியாக அச்சிட்ட பூக்கள்.... உடலோடு ஒட்டிக்கொண்டு விடும்போன்று லேசாக...

''உன் நிறத்துக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கும்னுதான் வாங்கினேன். ரவிக்கைத் துண்டும் பெட்டிக்குள்ளே அடியிலே வச்சிருக்கான் பார்... நாளைச் சாயங்காலத்துக்குள்ளே கொஞ்ச அவசரப்படுத்தினா மூலைக்கடைத் தையற்காரர் தெச்சுக் கொடுத்துடுவார். இப்பவே வேலைக்காரி கிட்டக் கொடுத்தனுப்பு...'' என்றாள் கஸ்தூரி புன்னகையுடன்.

பெரியம்மாவிடம் வந்து அண்டிக் கொண்ட பிறகு எத்தனையோ பிறந்த நாட்கள் வந்து போயின. யாரும் அவைகளைப் பற்றி நினைத்ததில்லை. மருமகள் என்று வீட்டுக்குள் வந்து மாதம் இரண்டு கூட முடிவு பெறவில்லை. எத்தனை அக்கறையுடன் கஸ்தூரி மருமகளின் பிறந்த நாளைப் பற்றிக் கூட விசாரித்து நினைவும் வைத்துக்கொண்டு இருக்கிறாள் — மறக்காது ஒரு பரிசு வேறு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறாளே!...

''ரொம்ப நன்றி அத்தை!... எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை.'' உணர்ச்சி வசப்பட்டுப் போன மாதங்கி தடுமாறினாள்.

''ஒண்ணும் சொல்ல வேண்டாம். நாளைக்குச் சாயங்காலம் நீ இதை உடுத்திக்கொண்டு நாங்கள்ளாம் ஆபீஸிலிருந்து வந்ததும் பிள்ளையார் கோவிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை பண்ணிட்டு வா... அதுபோதும். பிறகு நாம எல்லாரும்சேர்ந்து உட்கார்ந்து விருந்து சாப்பிடலாம். இப்பவே சொல்லிட்டேன். நாளைச் சாயங்காலம் வந்ததும் சமையலை எங்கிட்ட நீ ஒப்படைச்சுடணும்...'' மாமியார் வேடிக்கையாகப் பேசினாள்.

மாதங்கி பூரித்துப் போய் விட்டாள். உண்மையில் அவள் அதிர்ஷ்டக்காரி என்பதில் சந்தேகமே இல்லை.

கஸ்தூரி ஒரு மாமியார் என்ற அந்தஸ்துடன் நடந்து கொள்வதேயில்லை.

சொந்தத் தாயார் போல — நெருங்கிப் ப ..கின ஒரு சிநேகிதியைப் போல் பரிவுடன் நேசத்துடன் — அன்புடன்...

அவளை எப்படித் தாங்குகிறாள்!

இந்த அன்பான மாமியாருக்காக அவள் எத்தனை கஷ்டங்களையும் பொறுத்துக்கொள்ளக் கடமைப்பட்டவள்.

''அப்படியே செய்கிறேன் அத்தை...'' என்று சிரித்துக்கொண்டு பார்சலுடன் உள்ளே ஓடினாள்.

மறுநாள் மாலை அலுவலகத்திலிருந்து வந்து உள்ளே நுழைந்த கஸ்தூரிக்குச் சட்டென்று அந்த எண்ணம் தோன்றியது.

ஹர்ஷனை அவன் போகிற போக்கில் விட்டு வைப்பது சரியல்ல. தாய் என்று அவள் தன் அதிகாரத்தை ஒரு துளியாவது காட்டாது இருப்பது முறையும் ஆகாது என்று நினைத்தவளாக ஒரு முடிவுடன் முன்னறைக்கு வந்தாள்.

அலுவலக உடைகளைக் களைந்து விட்டு முகத்தைக் கழுவித் தன்னைச் சீராக்கிக் கொண்டு வேஷ்டியும் சட்டையுமாக மாடியிலிருந்து கீழே இறங்கி அங்கு வந்தான்.

''ஒரு சின்ன உபகாரம் பண்ணுவியாப்பா! காப்பியைக் குடிச்சுட்டு மாதங்கியை நீ நம்ப பிள்ளையார் கோவில் வரை காரில் அழைச்சுக்கிட்டுப் போயிட்டு வா.. எனக்கு

1607ல் ஷா-அப்பாஸ் இந்தியாவின் மீது படையெடுத்தபோது ஷா - அப்பாஸை வென்றவன் ஜஹாங்கிர். தோல்வி கண்ட ஷா-அப்பாஸ் தனது தோல்வியை மறைக்கத் தந்திரம் ஒன்றைக் கையாண்டான். தான் ஜஹாங்கிருடன் நட்புப் பாராட்டியே வருவதாகவும் தனக்குத் தெரியாமல் படையெடுப்பு நடந்து விட்டதாகவும் - தன் வீரர்களில் பெரும்பாலோர் தற்போது கூட ஜஹாங்கிருடன் நட்பும் பாராட்டி வருவதாகவும் தனக்குத் தெரியாமல் ஒரு சில வீரர்கள் ஜஹாங்கிருடன் போரிட்டதைத் தான் ஒப்புக்கொள்ளவில்லை என்றும் முஸ்லீமாகிய நான் மற்றொரு முஸ்லீமான ஜஹாங்கிருடன் ஒற்றுமையாக இருக்க விரும்புவதாகவும் ஜஹாங்கிருக்கு ஓலை அனுப்பினான்.

ஜஹாங்கிர், ஷா-அப்பாஸின் புத்தி கூர்மையை மெச்சினான்-தோல்வி தன்னைத் தழுவி இழிவு உண்டாக்கக் கூடாது என்பதற்காக ஷா-அப்பாஸ் கையாண்ட சாணக்கியத்தைப் பாராட்டினான்!

அதுமுதல் மெச்சத்தக்க செயல்களை யார் செய்தாலும் ஜஹாங்கிர் ''ஷா-அப்பாஸ்'' ''ஷா-அப்பாஸ்'' என்று பாராட்டத் தொடங்கினான்!

அதுதான் காலப்போக்கில் ''சபாஷ்'' என்று மாறி இப்போது நடைமுறையில் இருக்கிறது!

- ப. மூர்த்தி




உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
EGG
Halo
SHAMPOO
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தி
யின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும்
காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான
ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம்
நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப்
படியவைத்து அதற்குத் தேவையான எல்லா
ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக
ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரை வளம்
உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும்
தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
HES. G. 4. TM

நெல்லை சங்கீத சபாவில் நாடகப் ப்ரியாவின் 'மகாபாரதத்தில் மங்காத்தா' நாடகம். மாத்திரைகளை விழுங்கி மகாபாரதக் காலத்திற்கு வந்து விட்டார்கள். நாடக நிகழ்ச்சிகளை ஒருவர் அடிக்கடி 'பிளாஷ்' அடித்து போட்டோ பிடித்துக் கொண்டிருந்தார். தர்மராஜனாக நடித்த எஸ். வி. சேகருக்கு ஒரே எரிச்சல். ''ஏனய்யா, மகாபாரத காலத்திற்கே வந்தாலும் நீர் விடமாட்டீர் போலிருக்கிறதே. நீரும் ஏதாவது மாத்திரை கித்திரை சாப்பிட்டுத் தொலைத்தீரா?'' என்று அவர் கத்த அரங்கில் ஒரே கலகலப்பு.



—பாரத்வாஜன்

வீட்டிலே ஒரு முக்கிய காரியம் இருக்கிறதாலே நான் அவளைக் கூட்டிக்கிட்டுப் போக முடியலை'' என்றாள் கஸ்தூரி.

''நான் அவசியம் போகணுமாம்மா...'' ஹர்ஷன் கேட்டபோது தாய் அவனை உற்றுப் பார்த்தாள்.

''இன்னிக்குக் கோவிலில் விசேஷம். கூட்டம் வழிஞ்சுண்டிருக்கும். அவள் இங்கேயிருந்து நடந்து போய்க் காத்திருந்து அர்ச்சனையை முடிச்சுண்டு திரும்பறதுக்குள்ளே நல்லா இருட்டிவிடும். இப்போவெல்லாம் இந்தப் பக்கம் இருட்டு வேளையிலே பெண் தனியா நடக்கிறது அத்தனை நல்லதில்லேங்கறாங்க. பிறகு உன் இஷ்டம்'' என்றாள் அழுத்தமாக.

பிடரியைப் பிடித்து யாரோ வேகமாகத் தள்ளிவிட்டது போன்று ஹர்ஷனுக்கு ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது.

என்னவானாலும் மாதங்கி அவன் மனைவி.

இருட்டில் தனி வழி நடந்து — அவளுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால்?

நெருப்பாக மனத்தை ஒரு நூதன உணர்வு சுடுவதை உணர்ந்தான்.

அவசரமாகக் காப்பியைப் பருகிவிட்டுக் கார் சாவியுடன் வெளியேறினான்.

அவர்கள் இருவரும் தனியே வெளியே செல்வது அதுதான் முதல் தடவை. அந்த அனுபவம் அவளுக்கு மிகவும் இனித்தது.

கையில் தேங்காய்ப் பழத் தட்டுடன் புதுப் புடவை சரசரக்க நடந்து வந்து காரில் அவனருகே ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

கோவிலைச் சமீபிக்கும்வரை அவன் பேசவில்லை. ஆனாலும் அவன் மனத்திலே ஏற்பட்ட அந்தப் புதுமையான உணர்வின் இனிமையை அவனால் ஒதுக்கிடவும் முடியவில்லை.

''ஆமாம்! இன்னிக்கு என்ன விசேஷம்?'' மெல்லக் கேட்டுவிட்டு அவளை லேசாகத் திரும்பிப் பார்த்தான்.

காற்றுவாக்கில் அவளது கூந்தலிலிருந்து முகத்தில் மோதிய மல்லிகையின் மணம் சுகமாகத்தான் இருந்தது. வழக்கமான முரட்டுத்தனமில்லாது மென்மையானதொரு புன்னகை, அவன் முகத்திலே படர்ந்து ஒளி விட்டதைக் கண்டு மாதங்கிக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி.

அவளைப்பற்றி ஒரு சிறிதளவு உணர்விலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? அவள் பார்த்தது உண்மையா?

''இன்னிக்கு என் பிறந்த நாள். அத்தை அதுக்காக எனக்கு இந்தப் புடவை ரவிக்கை இதுகளைப் பரிசாக வாங்கித் தந்திருக்காங்க. விநாயகருக்கு அர்ச்சனை செய்துட்டு வரச் சொன்னாங்க... கேட்க மாட்டேன்னு பிடிவாதமாச் சமையலை அவங்க இன்னிக்குப் பிடிச்சிக்கிட்டாங்க...''

''இந்தப் புடவை உனக்கு ரொம்ப அழகா இருக்கு....'' — காரிலிருந்து இறங்கிக் கோவிலுக்கு முன் நின்றவளிடம் மெல்லிய குரலில் சொன்னான்.

முகம் சிவந்து போன மாதங்கி நெஞ்சு மகிழ்ச்சியில் படபடவென்று துடித்துக்கொண்டது.

இது உண்மையா? அவளது புருஷன் ஹர்ஷன் அவளிடம் அப்படி அன்பாகப் பேசுகிறானா?

''தாங்க்யூ!...'' மெலிதாச் சிரித்துக் கொண்டு அவனுடன் கோவிலுக்குள் மகிழ்ச்சியுடன் சென்றாள்.

அர்ச்சனையை முடித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பும்வரை அவன் மீண்டும் மௌனமாக இருந்தான்.

ஆனாலும் அவள் மனம் இன்ப வசத்தில் அலைபாய்ந்து கொண்டிருந்தது.

காரேஜில் காரை வைத்துவிட்டு இறங்கியவன் பிரசாதத் தட்டை எடுத்துக் கொண்டான்.

''உன் பிறந்த நாளுக்கு என் வாழ்த்துகள்! அம்மா அழகான ஒரு புடவை எடுத்துக் கொடுத்திருக்காங்க... நான் ஒண்ணும் உனக்குத் தரலையே?...'' அவன் உல்லாசமாகப் பார்த்து உரத்த குரலில் சிரித்தான்.

'இந்தச் சிரிப்பு ஒண்ணே எனக்கு இந்த உலகத்தையே நீங்க பரிசாக் கொடுத்த மாதிரி ரொம்ப மகிழ்ச்சியா யிருக்கு...' சொல்ல வேண்டும் போன்று நா துடித்தது அவளுக்கு.

''அத்தை வேறு... நீங்க வேறு... யார் கொடுத்தாலும் ஒண்ணுதானே?...'' சாமர்த்தியமாகக் கேட்டுவிட்டு, ''தட்டை இப்படிக் கொடுங்க... அத்தைக்கு முதல்லே பிரசாதத்தைக் கொடுத்து வணங்கிட்டு வரேன்'' சிரித்துக்கொண்டே அவனுடன் ஜோடியாக உள்ளே சென்றாள்.


தனக்கு ஒரு வருங்காலம் இருக்கிறது என்ற நம்பிக்கையில் அவளது நெஞ்சு கட்டுக்கடங்காது மகிழ்ச்சியுடன் தீவிரமாகத் துடித்துக் கொண்டிருந்தது. (தொடரும்)

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1981

அமரர் கல்கி அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் வழக்கம் போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

முதல் பரிசு	**ரூ. 1000**
இரண்டாம் பரிசு	**ரூ. 500**
மூன்றும் பரிசு (இரு கதைகளுக்கு தலா ரூ. 250 வீதம்)	**ரூ. 500**

ஆகமொத்தம் ரூ. 2000 பரிசுகளாக வழங்கப்பெறும். தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளருக்குப் போனஸ் உண்டு.



- கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தரவேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.
- முடிவு தேதி ஜூன் 15.
- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர் கல்கி, சென்னை-600 032

சிரிப்பு டாக்டர்!

ஒருவர்: ''திடீர்னு உங்க டிஸ்பென்ஸரிக்குக் கூட்டம்வர ஆரம்பிச்சே....எப்படி?''

டாக்டர்: ''ஐம்பது ரூபாய்க்கும் மேலே தந்து எங்கிட்ட வைத்தியம் பார்த்துக்கிறவங்களுக்குப் பரிசுக் குலுக்கல் திட்டம் உண்டுன்னு அறிவிச்சேன்...!''

•

ஒருவர்: ''பீச் ரோட்டில் இருந்த டிஸ்பென்ஸரியை டி. நகருக்கு மாத்திட்டீங்களே, ஏன்?''

டாக்டர்:''டிஸ்பென்ஸரி காத்து வாங்குதுன்னு கிண்டல் பண்ணிட்டிருந்தவங்க வாயை அடைக்கத்தான்....!''

•

ஒருவர்: '''மாஸ்டர் ஆப் சர்ஜரி' படிக்காம, 'மாஸ்டர் ஆப் மெடிசன்' படிச்சதுக்கு ஏதேனும் விசேஷ காரணம் உண்டா...?''

டாக்டர்: ''அப்புறம் எல்லாரும் என்னை 'அறுவை' டாக்டர்னு கேலி பண்ணுவாங்களே....!''

•

டாக்டர்: ''நான் இப்போ உங்களுக்குச் செய்யப் போவது மேஜர் ஆபரேஷன்;...நீங்க செய்ய வேண்டியது என்ன தெரியுமா...?''

பேஷண்ட்: ''சொல்லுங்க டாக்டர்...''


டாக்டர்: ''கோ — ஆபரேஷன்....!''


— கிணத்துக்கடவு ரவி












சைக்கிள் - மோட்டார் சைக்கிள்

பரிசு ரூ 500/-





கமல் – ராஜப்பா – விஸ்வம் – ரஜனி
படம் : நினைத்தாலே இனிக்கும்

மதுரை ஜெயந்தி – சரிதா – சுதாகர்
படம் : பொண்ணு ஊருக்குப் புதுசு

ஜெயலட்சுமி – விஜயகுமார்
படம் : புலி வருது புலி

கமலஹாசன் – சங்கீதா
படம் : ஆடு புலி ஆட்டம்

சைக்கிள்கள் நடித்த படங்கள் தெரிகின்றன.

இந்த மோட்டார் சைக்கிள் நடித்த படம் எது? ஓட்டிச் செல்பவர் யார்?

ஒரு தபால் கார்டில் எழுதி அனுப்புங்கள்.

சரியான விடைகளைத் தருபவருக்குப் பரிசு ரூ 500/-

ஒருவருக்குமேல் சரியான விடைகளை எழுதினால் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

''சைக்கிள்–மோட்டார் சைக்கிள்'' என்று தலைப்புத் தரவும்

முடிவு தேதி : மே 6

கருத்து : சவன்

காமாட்சிக்குக் கண்களை இருட்டிக்கொண்டு வந்தது. கால்கள் துவண்டு நிற்கக்கூட முடியாமல் தள்ளாடினாள். மயங்கி விழுந்துவிடக் கூடாதே என்றிருந்தது அவளுக்கு. நல்ல வேளையாகக் கைக்கெட்டினாற்போல் தரையில் பதிக்கப்பட்டிருந்த உயரமான உண்டியல் பெட்டி இருந்தது. ஆதாரமாக அதைப் பிடித்துக் கொண்டாள். மனத்தில் உறுதியை வரவழைத்துக் கொண்டாள். சோர்ந்து விழுந்து விடக் கூடாது. இதயத்தின் கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளும் வரை மனோ திடத்தைக் கைவிடக் கூடாது.

முந்திய தினம் முழுதும் பல்லில் தண்ணீர் கூடப் படாமல் அவள் உபவாசம் இருந்திருந்தாள். இன்று அதிகாலையில் எழுந்து குளித்து விட்டு அப்படியே இங்கு விரைந்து வந்து விட்டாள். அப்படிப் பறந்து பறந்து ஓடி வந்தும் கியூ வரிசையில் எத்தனையோ பேருக்குப் பின்னால்தான் அவளுக்கு இடம் கிடைத்தது. அத்தனை பேரும் முன்னே நகர்ந்து அவளுடைய முறை வருவதற்கு எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டியிருக்குமோ! எவ்வளவு நேரமானாலும் சரி, கண்ணாரத் தேவி தரிசனம் செய்து வேண்டுதலை நிறைவேற்றிக் கொண்டு பிரசாதத்துடன்தான் வீட்டுக்குத் திரும்ப வேண்டும்.

கிழித்த நாராய்ப் படுக்கையில் கிடந்த மூர்த்தியைப் பற்றியே அவள் மனம் அல்லல் பட்டுக் கொண்டிருந்தது. மூன்று மாதமாயிற்று அவன் படுக்கையில் விழுந்து.



பார்க்காத வைத்தியமில்லை. வேண்டாத தெய்வங்கள் இல்லை. நாளுக்கு நாள் உடம்பு உருகித் தேய்ந்து கொண்டிருந்ததே ஒழிய நோய் குணமாவதற்கான அறிகுறி எதுவும் காணோம். கையிலிருந்த பணமெல்லாம் கரைந்து போனதுதான் மிச்சம். மூர்த்திக்கு நிரந்தரமில்லாத வேலை. படுத்த படுக்கையானால் பரிகாரம் ஏது? அவன் பிழைத்து எழுந்திருந்து மறுபடியும் வேலைக்குப் போகும் வரை இருக்கிற நகை நட்டுக்களை விற்றுத் தான் குடித்தனம் நடத்தியாக வேண்டும்.

போன வருஷம்தான் அவனுக்குக் கல்யாணமாகி மருமகப் பெண் வீட்டுக்கு வந்திருந்தாள். அவள் அடியெடுத்து வைத்த வேளைதானோ? ஆனால் பாவம், அவளைக் குற்றம் சொல்ல என்ன இருக்கிறது? எல்லாம் வேளைக் கோளாறு. பிள்ளைத்தாச்சி பாவம், சதா சர்வதா கட்டில் தலைமாட்டிலேயே உட்கார்ந்து மூர்த்திக்குச் சேவை செய்து



வேண்டுதல்

உமாசந்திரன்

கொண்டிருக்கிறாள். ராத்திரியெல்லாம் கண் விழித்துக் கணவனைக் கட்டிக் காத்துக் கொண்டிருக்கிறாள்.

இந்தத் தேவி மிகுந்த சக்தியுள்ள தெய்வம் என்று எல்லோரும் சொன்னார்கள். தெய்வத்தில் சக்தி உள்ளது, சக்தி இல்லாதது என்று உண்டா என்ன? ஏதோ அஞ்ஞானம் எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் என்ற தவிப்பு. எப்படியாவது என் மூர்த்திக்கு உடம்பு சரியானால் போதும். மூன்று வாரமாக ஒரு வேளை சாப்பிட்டு, மூன்று வெள்ளிக் கிழமை உப்பு, புளி எதுவும் சேர்த்துக் கொள்ளாமல் விரதம் இருந்து, நேற்று கடைசி வெள்ளிக் கிழமை ஒட்ட ஒட்ட உபவாசமும் இருந்தாயிற்று. கண் குளிரத் தேவியின் தரிசனம் கிடைத்து, பிரசாதமும் பெற்றுக் கொண்டு விட்டால் போதும். தேவி பிரசாதம் மூர்த்தியின் நோயைத் தீர்க்கும் மருந்தாக இருக்காதா?

ஆனால் இந்தக் கியூ வரிசை ஏன் நகரவே மாட்டேனென்கிறது? யாரோ சகஸ்ரநாம அர்ச்சனைக்குக் கொடுத்திருக்கிறார்கள். அது முடிந்து தீபாராதனை ஆன பிறகுதான் கியூ வரிசையில் இருப்பவர்களைத் தரிசனத்துக்கு அனுமதிப்பார்கள்போலிருக்கிறது.

இதோ வருபவர் கோவிலுக்கு முக்கியஸ்தர் என்று பார்த்தாலே தெரிகிறது. தர்மகர்த்தா ஜம்புநாதன் இவராகத்தான் இருக்க வேண்டும். இவருடைய முயற்சியால்தான் இந்தக் கோவிலே இங்கு உருவாக முடிந்தது என்று பேசிக் கொண்டார்களே! அதற்கேற்ற கம்பீரமான தோற்றமும் அதிகார மிடுக்கும் இவரிடம் இருக்கிறது. இவரைக் கேட்டுப்பார்த்தால் என்ன?

''ஐயா, தர்மகர்த்தா நீங்கதானே?''

''ஆமாம். என்ன வேணும்?''

''பிள்ளை உயிரோடு போராடிண்டு படுத்த படுக்கையா இருக்கான். தேவி அருளைத்தான் நம்பி வந்திருக்கேன். தரிசனமும் பிரசாதமும் சீக்கிரம் கிடைக்கிறதுக்கு ஏற்பாடு செய்தேன்னா....''

''அதெப்படியம்மா முடியும்? உங்களுக்கு முன்னால் இத்தனை பேர் கியூவில் நிக்கிறாங்களே! உங்களுக்குச் சலுகை காட்டினா மத்தவங்க சும்மா இருப்பாங்களா?'' என்று நறுக்குத் தெறித்தாற்போல் கூறிவிட்டு ஜம்புநாதன் சன்னதியை நோக்கி நடந்து சென்று விட்டார்.

''என்ன நிர்தாட்சண்யம்! கடுகளவு கூட இரக்கம் காட்டலையே அந்த மனுஷர்! யார் யாருக்கு என்னென்ன குடுத்து வச்சிருக்கோ அதுதானே கிடைக்கும்!'

மணி ஒலிக்கிறது. சகஸ்ரநாம அர்ச்சனை முடிந்து தீபாராதனை நடக்கிறது. நல்லவேளை! இனிமேல் கியூவுக்கு விமோசனம் உண்டு. மெள்ள மெள்ள நகர ஆரம்பிக்கும்.

நைவேத்யம் செய்த பிரசாதப் பொங்கலை எல்லோருக்கும் விநியோகம் செய்து கொண்டு வந்தார் ஒருவர். கியூவில் நின்றவர் ஒவ்வொருவரும் கை நீட்டிப் பக்தியுடன் பிரசாதத்தை வாங்கி வாயில் போட்டுக் கொண்டார்கள்.

காமாட்சி கைநீட்டவில்லை.

இதென்ன! பிரசாத விநியோகம் முடிந்த பிறகும் கியூ இன்னும் நகராமலே நிற்கிறதே! அதோ தர்மகர்த்தா ஜம்புநாதன் சந்நிதி அருகே நின்று வெளியே, தலையை நீட்டி நீட்டிப்பார்த்துக் கொண்டிருக்கிறாரே! யாரையாவது எதிர்பார்க்கிறாரா?, ஆனால் அதற்கும் கியூ நகராததற்கும் என்ன சம்பந்தம்?

தரிசனத்துக்கு நின்றவர்களிடையே கசமுசா பரவியது.

''ரொம்பப் பெரிய புள்ளிங்க. கஸ்தூரி மில் முதலாளியும் அவர் சம்சாரமும். இந்தக் கோவிலைக் கட்ட லட்சக் கணக்கில் பணத்தை வாரி வழங்கினவங்களாச்சே! அவங்களுக்கு இல்லாத தரிசனமா?''

''வெறும் தரிசனத்தோட நிறுத்த மாட்டாங்களே! அர்ச்சனை தீபாராதனை எல்லாம் அமர்க்களமா நடக்கும்னு சொல்லுங்க!''

''நம்ம பாடுதான் தகராறு! இன்னும் அரைமணி நேரமாவது காத்திருந்தாகணும்!''

இந்த வார்த்தைகள் காமாட்சியின் செவிகளில் விழவில்லை. அரை மயக்க நிலையில்தான் அவள் உண்டியல் பெட்டியின் மீது சாய்ந்தவாறு நின்றிருந்தாள். ''கியூ எப்போது நகரும்? எப்போது என் முறை வரும்?''— இந்தக் கேள்விகளே அவள் மனத்தில் சுழன்று கொண்டிருந்தன.

சட்டென்று அவள் முழுமையான உணர்வு பெற்று அதிர்ச்சியுடன் பார்த்தாள். ஜம்புநாதன் ஏன் அப்படி பரபரப்புடன் படிகளில் இறங்கி வருகிறார்! அப்போதுதான் கோயில் பிராகாரத்தில் வந்து கொண்டிருந்த நடுத்தர

வயதுள்ள தம்பதிகளை நோக்கி விரைந்து சென்ற அவர் மிகுந்த மரியாதையுடன் குழைந்து குழைந்து அவர்களைவரவேற்கிறாரே! அந்தத் தம்பதிகளின் தோற்றத்திலேயே செல்வச் செழிப்பு அலைமோதுகிறது. அவர்களை முன்னே செல்லவிட்டு அவர்களுக்கு இரண்டடி பின்னாலேயே ஜம்புநாதன் பவ்யமாக நடந்து செல்கிறார்.

இருவரையும் தேவியின் தரிசனத்துக்காகவா அழைத்துச் செல்கிறார்? கியூ வரிசையில் இத்தனை பேர்நின்று கொண்டிருக்கும்போதா? மற்றவர்களுக்கு இல்லாத உரிமை இவர்களுக்கு மட்டும் எப்படி வந்தது?

கியூவிலிருந்து விலகி வந்து நடு மையமாக நின்றுகொண்ட காமாட்சி உரத்த குரலில் கத்தினாள் — ''ஐயா, தர்மகர்த்தா பெரியவரே! இதென்ன அக்கிரமம்? தெய்வ சந்நிதானத்தில்கூட பாரபட்சமா? ஏழைக்கு ஒரு நியாயம், பணக்காரர்களுக்கு இன்னொரு நியாயமா? ஜரிகைப் புடவையும் வைர நகைகளும்தான் மதிப்பா இருக்கா உங்களுக்கு? உண்மையான பக்திக்கும் நியம நிஷ்டை உபவாசத்துக்கும் இங்கே மதிப்பே கிடையாதா?''

கஸ்தூரி மில் முதலாளியும் அவரது மனைவியும் சற்றே திரும்பிப் பார்த்தனர். ஜம்புநாதன் பரபரப்புடன் காமாட்சி அருகே விரைந்து வந்தார்.

''இந்தாங்க பெரியம்மா, எதுக்காக இப்படிக் கண்டபடி கத்தி ஊரைக் கூட்டறீங்க? என்ன நடந்திடுத்து இப்போ?''

''இன்னும் என்னய்யா நடக்கணும்? என் பிள்ளை உசிரோடு போராடிண்டு படுத்த படுக்கையா கிடக்கறான்! நான் நிக்கக் கூடச் சக்தி இல்லாம மயங்கி விழற நிலையிலே இருக்கேன். அவ்வளவையும் சொல்லிமுறையிட்டும் என்கிட்டத் துளிகூடக் கருணை காட்டத் தோணலியே உமக்கு? ஏன்? நான் இப்படி பஞ்சைக் கோலத்தில் நிக்கறேனே! அந்த அலட்சியம்தானே? யாரோ பண மூட்டைகள் வந்துட்டான்னதும் நீசத்தனமா அவா பின்னாலே வாலைக் குழைச்சிண்டு ஓடறதுதான் உமக்குப் பெருமையா இருக்கு. அப்படித்தானே!''

ஜம்புநாதன் வெலவெலத்துப் போனார். கோயில் சிப்பந்திகள் சிலர் அங்கு ஓடி வந்தார்கள்.

''ஏம்மா கூச்சல் போட்டுக் கலாட்டா பண்ணறே? மத்தவங்கல்லாம் ஒழுங்கா கியூவிலே நிக்கலே? நீயும் தகராறு பண்ணாம நிக்கறதா இருந்தா நில்லு. இல்லாட்டி போயிடு இங்கிருந்து!''

''போகத்தான் போறேன்! எனக்குத் தரிசனமும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம்! கோவிலா நடத்தறீங்க நீங்க? வெறும் சந்தைக்கடை! தேவியோட அருளுக்கு விலை பேசற வியாபாரக் கூட்டம் நீங்களெல்லாம்!''— ஆத்திரத்துடன் கத்திய காமாட்சி விடுவிடென்று அங்கிருந்து நடந்தாள்.

திடீரென்று அவளது உடம்பில் அவ்வளவு பலம் எங்கிருந்துதான் வந்ததோ! பசி மயக்கமும் தள்ளாமையும் எங்குதான் பறந்து போயிற்றோ! ஆவேசம் கொண்டவள் போல் வேகமாக நடை போட்டு வீட்டை அடைந்த அவள், மறு கணமே தொய்ந்து சுருண்டு சரிந்தாற்போல் தரையில் உட்கார்ந்தாள். ஆவேசமெல்லாம் அழுகையாய் மாறியிருந்தது இப்போது. குமுறிக் குமுறி அழுதாள்.

''அம்மா, நீங்க கோயில்லேயிருந்து வந்தாச்சா? தரிசனம் நன்னாக் கிடைச்சுதா? பிரசாதத்தைக் குடுங்கோ, அவருக்கு இட்டு விட்டுடறேன்!'' என்று கூறியவாறு மருமகள் அகிலா ஆவலுடன் அவளருகே வந்தாள்.

''என்னை ஒண்ணுமே கேக்காதே! ஒண்ணுமே கேக்காதே!'' என்றாள் காமாட்சி விம்மலிடையே.

''அம்மா, ஏன் இப்படி அழறேள்! நிராசையோட பேசறேள்? சித்த முன்னேதான் உங்க புள்ளை கண் முழிச்சுப் பார்த்தார். தெளிவா நாலு வார்த்தை பேசினார். 'அம்மா எங்கே' ன்னு விசாரிச்சார்!''

மருமகளை வியப்புடன் பார்த்தாள் காமாட்சி. துவண்டு உட்கார்ந்திருந்த அவள் துள்ளி எழுந்தாள்.

''மூர்த்தி கண்ணை முழிச்சுட்டானா? பேசினானா? என்னைப் பத்திக் கேட்டானா? என்னால நம்பவே முடியலியே!'' — மூர்த்தி படுத்திருந்த கட்டிலருகே விரைந்து சென்றாள் அவள்.

மூர்த்தி அவளை பய பக்தியுடன் பார்த்தான். ''எனக்காக விரதமிருந்து... கோவிலுக்குப் போய்.... அம்மா உன்னோட பிரார்த்தனைதான் என் உசிரைக் காப்பாத்திக் குடுத்திருக்கு. நான் பிழைச்சுட்டேம்மா! இனிமே பயமில்லேம்மா!''

''மூர்த்தி, என் பிரார்த்தனையை நான் நிறைவேத்தவே இல்லேடா! தேவியைத் தரிசனம் பண்ணாமலே கோவில்லேயிருந்து திரும்பி வந்துட்டேண்டா! பிரசாதம்கூட இல்லாம வெறுங் கையோடன்னா வந்திருக்கேன்!''

வாயிலில் நிழல் ஆடுகிறது. யார் வந்திருக்கா! தர்மகர்த்தா ஜம்புநாதன்! கூடவே பிரசாதத்துடன் அர்ச்சகர்!

''பெரியம்மா! தேவிக்கு உங்க பிரார்த்தனையைச் செலுத்தியாச்சு. பிரசாதம் வாங்கிக்குங்க.''

ஒன்றுமே புரியாமல் யந்திரம் போல் பிரசாதத் தட்டைக் கையில் வாங்கிக்கொள்கிறாள் காமாட்சி. அப்போது...



ஜெர்மன் நாட்டுக்காரர்கள் அருகம்புல்லை சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ரொட்டியை மிகவும் பிரியமாகச் சாப்பிடுகின்றனர். காரணம் என்ன தெரியுமா? ஜெர்மன் நாட்டு விஞ்ஞானிகள் அருகம்புல்லை ஆராய்ந்து, அதில் இரு நூறுக்கு மேற்பட்ட உயிர் சத்துக்கள் இருப்பதாகக் கண்டு பிடித்துள்ளனர். ஆகவே ஜெர்மன் நாட்டு ரொட்டிக் கடைக்காரர்கள் அருகம்புல் சேர்த்துத் தயாரித்த ரொட்டிகளை அதிக விலைக்கும், சாதாரண ரொட்டிகளைக் குறைந்த விலைக்கும் விற்று வருகின்றனர்.

- பி. நாராயணன்



உங்கள் அழகுக்கு
அழகூட்டும் குங்குமம்
புதிய சுமங்கலி டீலக்ஸ் குங்குமம்
இன்று தன் இயற்கை எழிலை எந்த மங்கையும்
மேலும் பொலிவுறச் செய்யலாம். உங்கள் ஒப்பனைக்கு
மேலும் மெருகூட்டுவது சுமங்கலி குங்குமம்.
கொஞ்சம்கூட வெளியே சிந்தாத சிறந்த பாக்கிங்கில்
வரும் குங்குமம் அது ஒன்றே. ஆகவே அது உங்கள்
கைப்பையிலோ அல்லது டிரஸ்ஸிங் டேபிள் மேலோ
வைத்துக்கொள்ள உகந்தது. சுமங்கலி உங்களுக்குப்
பிடித்தமான பலவித வண்ணங்களில் கவர்ச்சியான
ஜாடிகளிலும், பௌடர் உருவிலும் மற்றும் டீலக்ஸ்
பர்ஸ் பாக்கிங்குகளிலும் கிடைக்கிறது.
டீலக்ஸ் குங்குமம்
சுமங்கலி
ஒரு கேசவர்த்தினி தயாரிப்பு
OBM 4952/TM



மலர்க்கனா ரணங்கள்

கே. வெங்கடேசரவி

அன்று நீ
மழைக்கால
'ஐஸ்' வியாபாரம்போல்
மந்தமாகச் சிரித்தாய்.

உன் கண்ணீர்க் கர்ப்பம் கண்டேன்.
நீ
பேசிய வார்த்தைகளும்
உன்
சின்ன இதழ் தடுக்கியே
தரையில் விழுந்து விட்டன
காதுகள் காத்திருந்ததுதான்
மீதம்!

ஆம், அன்பே!
அன்றுதான்
நம் காதல் வாக்கியத்தில்
எழுத்துப்பிழை ஏற்பட்டது.
அது
சாதியெனும் சாட்டையடி—
ஒட்டியிருந்த நம்
இதயத்தின் இடையே
ரத்தக் கோடிட்ட நாள்.

நீர்ப்பரப்பில் சலனத்தை
வைரக்கல் மட்டுமல்ல
வெற்றுக் கூழாங்கல்லும்
உண்டாக்கலாம் என்பதை
உலகம் என்றுதான் உணருமோ!

என் இதயம்
உன் சிரிப்பையும்
முகச் சுளிப்பையும்
பத்திரப் படுத்தி
கனவுகளில் காட்டி
ஆறுதல் சொல்ல
ஆசைப் பட்டது.
ஆனால் அவை
வைக்கோல் கன்றென்னும்
விவரம் தெரியுமே எனக்கு!

இந்த உலகம்—
ஆதாயம் என்றால்
கருங்கல்லுக்கும்
கற்பூரம் காட்டும்.
அவசியம் தீர்ந்தால்
கண்ணீரிலும் உல்லாசக்
கப்பல் ஓட்டும்.

இங்கே
அனுபவ உளிகள்
இதயத்தில் ஏற்படுத்திய
எழுத்துத் தழும்புகள்
இவை—

'இந்த பூமியின்
சாதித்திரை கிழியும்வரை
காதல்
சினிமாத் திரைக்கு
வெளியே சித்தினால்
சமூகம் ஏற்காது!'

சாதிவெறியில்
கண் விழுந்த சமூகம்
இந்த
இதயத் தழும்புகளை
ஒருநாள்
தடவியேனும் படிக்காதா?
தவறுக்குக்
கண்ணீரை வடிக்காதா?

"பெரியம்மா, எம்மேலே உங்களுக்குக் கோபம் வந்தது நியாயம்தான். நான் பாரபட்சமாக நடந்திட்டேன்னு நீங்க நினைச்சது தப்பில்லே. ஆனா தர்மகர்த்தாங்கற முறையில கோவிலுக்கு நான் செய்ய வேண்டிய கடமை இருக்கில்லையா? அதைக் கருதித் தான் மனுஷத் தன்மையைக் கொஞ்ச நேரத்துக்கு மூட்டை கட்டி வைக்கும்படி ஆயிடுத்து...."

"அந்தப் பெரிய மனுஷா...."

"கோவிலைக் கட்டினதே அவங்கதான். இன்னும் எவ்வளவோ திருப்பணிகள் அவங்களோட உதவியால்தான் நடந்து வருது. அவங்களுக்கு முதல் மரியாதை செய்ய நான் கடமைப்பட்டவன் இல்லையா? கோவில் சரியா நடக்கலேன்னு தேவிக்கு மகிமை ஏது? ஆனா அவங்க உண்மையிலேயே பெரிய மனுஷங்க. உங்க கோபத்துக்குக் காரணம் தெரிஞ்சதும் ரொம்ப வருத்தப்பட்டாங்க. உங்க பிள்ளைக்கு உடம்பு குணமாகணும்னு வேண்டிண்டு விசேஷப் பிரார்த்தனை அர்ச்சனை எல்லாம் செய்யச் சொன்னாங்க. பிரசாதத்தை உடனேயே கொண்டு வந்து கொடுக்கச் சொன்னதும் அவங்கதான். உங்க கிட்ட மன்னிப்புக் கேக்கறதுக்காக அவங்களே இப்ப நேரிலே இங்கே வந்திருக்காங்க..."

நெகிழ்ந்து பொங்கும் நெஞ்சத்துடன் வாயடைத்து நின்ற காமாட்சி வாயிலை நோக்கினாள். அந்தத் தம்பதியர் இருவரும் பணிவு நிறைந்த புன்னகையுடன் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தனர்!

உ

ஸ்ரீரஸ்து, சுபமஸ்து, ஸ்ரீ லக்ஷ்மி வெங்கடேச ப்ரஸன்ன

ஆடி மாத அமாவாசைக்கு சூரிய கிரஹணம் - இது தக்ஷிண பாரதத்தில் காக்ஷி இல்லை - ஆர்யாவர்த்தத்தில் தெரியும். எனவே ஜகத்குரு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஆசியுடன், சூரிய கிரஹணத்திற்கும், ஆடி அமாவாசைக்கும் ஸ்ரீகாசியில் இருக்கும்படியாக 20-7-81ல் பம்பாய் வழியாக 19 நாள் கொண்ட யாத்திரையும் 23-7-81ல் இடார்சி வழியாக 16 நாள் கொண்ட யாத்திரையும் III Tier Sleeper பெட்டிகளில் புறப்படுகிறது. நபர் 1க்கு ரூ. **750 - 700.**

வழக்கம் போல இந்த வருஷமும் அமரநாத தரிசனம் உண்டு. 7-8-81ல் புறப்பட்டு சிராவண பௌர்ணமிக்கு அமரநாத மஹாதேவர் தரிசனம் மற்றும் காஷ்மீர், க்ஷீர பவானி, ஸ்ரீ வைஷ்ணவி தேவி, ஜ்வாலாமுகி, டில்லி, மதுரா, ப்ருந்தாவனம், கோகுலம், ஆக்ரா முதலிய இடங்கள் 20 நாட்கள். III Tier Sleeper பெட்டி நபர் 1க்கு ரூ. **1250/-**

★

விவரங்கள் தெரிந்து முன்கூட்டி ரிசர்வ் செய்து கொண்டால் வசதியான பெர்த்துகள் கிடைக்கும்.

★

: மேலும் விவரங்களுக்கு :

ஸ்ரீ மஹாலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ்
21, அய்யாபிள்ளை தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை — 600 005
போன் : 841957

ஸ்ரீமதி நீலா சுப்ரமண்யம்
w/o திரு. கே.ஏ.எஸ். மணி
G. 429 ரிசர்வ் பாங்க் குவார்ட்டர்ஸ்
எம்.எம். மார்க், பம்பாய் — 400 008
போன் : 891522

1-5-81ல் புறப்படும் எங்களுடைய பத்ரி, கேதார், காஷ்மீர் யாத்திரையில் இன்னும் 10 இடங்கள் மட்டுமே காலி உள்ளன.



அவன் — சந்துரு. 28. சின்னக்கம்பெனியில் சின்ன வேலை. சின்னச் சம்பளம். சின்னக் குடும்பம் சிதம்பரத்தில். சின்ன அறையில் இவன் சென்னையில்.

அவள்...அவள்... என்ன சொன்னாள்?

''சத்தியமாச் சொல்றேன். பத்தினி வயிறெரிஞ்சி சொல்றேன். இன்னும் ஆறு மாசத்திலே நீங்க அழிஞ்சு போவீங்கடா!''

கர்ச்சீப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டான் சந்துரு.

அந்த 'போவீங்கடா'வுக்கு அர்த்தம்— சந்துருவும், சின்னய்யனும்.

அந்தச் சின்னையனுடன் இணைந்த சம்பவத்துக்காக நாம் திருவனந்தபுரம் செல்கிறோம்.

''எந்தா ஸாரே, நினக்கு மலையாளம் வருமோ?'' என்று முதல் வசனம் பேசித் தோழனானான் சின்னையன். சந்துருவின் சரித்திரத்தில் எந்த வேலையிலும் ஸ்திரமாக நின்றதாகக் கிடையாது. யாதும் ஊரே பாலிசி.

இரண்டு பேரும் ஒன்றாக ஒரு பீடி குடித்து, ஒரு கிளாஸ் சாராயத்தை மாற்றி மாற்றிச் சப்பினார்கள்.

அன்றைக்குத் திட்டம் சொன்னான் சின்னையன்.

''காசு இல்லாம காரியம். கொஞ்சம் தைரியம் போதும். ரெண்டாவது... அடுத்தவன் பொண்டாட்டின்னு அதிலே த்ரில் இருக்கு'' என்றான்.

''சின்னையா, நான் கற்புள்ளவன் இல்லே. தொட்டிருக்கேன். தூங்கியிருக்கேன். பலாத்காரம் கிடையாது. உன் திட்டம் எனக்குப் பிடிக்கலே...'' என்ற சந்துருவுக்குச் சின்னையனின் அரை மணி சொற்பொழிவுக்குப் பிறகு திட்டம் பிடித்தது.

இரவுக் காட்சி சினிமா விட்டு அந்தத் தம்பதி சாலையில் நடந்து போயிருக்கக் கூடாது, போனார்கள்.

அந்த ஆட்டோ வந்தது அருகாக. முதல் குத்திலேயே மூர்ச்சையானான் கணவன். தடித்த தாலியுடன் மனைவி வளைந்து, வளைந்து திமிர... வேகமாக ஓட்டினான் சின்னையன். சந்துரு அவள் வாய் பொத்தி மயக்கமடைய வைத்தான்.

தொலை தூரம் சென்று ஓரங்கட்டி அவள் துணிகளைத் தொட்டபோது, மறுபடி விழித்தாள். நான்கு ஆண் கைகளுக்கு மத்தியில் இரண்டு வளைக் கைகள் எதிர்க்க முடிந்தது மிகக் கொஞ்சமாகத்தான்.

இரண்டு பேரும் பாண்ட் அணிந்தபோது, அவள் கத்தினாள்.

''சத்தியமாய்ச் சொல்றேன். பத்தினி வயிறெரிஞ்சு சொல்றேன். இன்னும் ஆறு மாசத்திலே நீங்க ஒழிஞ்சு போவீங்கடா''...

சந்துரு நடந்து கொண்டிருந்தான். சாபம்! புடலங்காய்! ஒருவேளை பலிக்குமோ? சேச்சே... இது நடந்துதான் ஆறு மாதமிருக்குமே... இருக்குமா? இருக்காது. அஞ்சு மாசம்தான் இருக்கும். அட! நான் என்ன பயப்படுகிறேனா?

உடனே மனத்தில் கணக்குப் போட்டான். ஆமாம். இன்றோடு அஞ்சு மாசம், பத்து நாளாச்சி... ஆறு மாதம் டைமா? அப்படியென்றால் என் உயிருக்கு இன்னும் இருபது நாள்தானா? ஹாஹ்ஹா! பத்தினி! சாபம்!

அறைக்கு வந்து உறங்கிப் போனான்.

மறுநாள் காலையில் மெஸ்ஸில், இட்லிக்கு மிளகாய்ப் பொடி கேட்டுவிட்டு இதையும் கேட்டான்.

''ஏன் அய்யரே, பத்தினி சாபம் பலிக்குமா?''

''சத்தியமாப் பலிக்கும். என் கிராமத்தில் இப்படித்தான்... மகாலக்ஷ்மி மாதிரி இருந்த ஒரு பொண்ணை, அதுவும் கல்யாணமான பொண்ணைக் கையைப் பிடிச்சி இழுத்துட்டான். அவ சாமி பக்தி ரொம்ப உள்ளவ. என்னைத் தொட்ட நீ சீக்கிரம் செத்துப் போயிடுவேடா பாவின்னு... நாலாம் நாளு ஆத்துக்குக் குளிக்கப் போனவன் பாதி தூரத்திலே செத்துக் கிடந்தான். ஒரு பாம்போ, தேளோ கொத்தலே. எல்லாம் அந்தப் பத்தினியோட வாக்கு பலம்...''

சந்துருவுக்கு உள்ளே கலக்கல் நடந்தது. கொஞ்சம் கொஞ்சமாக ஒரு பயப் போர்வை அவன் மேல் படர்ந்தது. ஜுரம் வருவது போலிருந்தது.

அறையில் யோசித்தான். தென்னை மரம் அவனைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது. சாபம் எனக்கும், சின்னையனுக்கும் சேர்த்துத் தானே? அவன் என்ன ஆனான்? இடம்





தெரியும். அட்ரஸ் தெரியாது. போய்ப் பார்த்தால் என்ன?

நான் என்ன இவ்வளவு தூரம் பயப்படுகிறேன்? சாபம் பலிப்பது மாதிக் ஷோ மாதிரி கேலியாய்ப் படவில்லையா? ஆனாலும் ஆனாலும்... கொஞ்சம் பயமாக இருக்கிறதே. போய்ப் பார்த்து விடலாம்.

மறுநாள் திருவனந்தபுரத்தில்...

''இங்கே சின்னயன்னு....?'' என்றான்.

''ஒரு மாசம் முன்னாலே பந்தர் தெருவுக்குப் போயிட்டான்.''

பந்தர் தெரு நாறியது. வீட்டுக்கு வீடு நாய் இருந்தது. குழந்தைகள் சத்தம் மைனஸாகி, விளையாடி, காற்றில் புழுதி கலந்து கொண்டிருக்க... விசாரித்து வந்தான்.

''சின்னையன் வீடு?''

''இதான்...''

''நீங்க?''

''அவர் சம்சாரம்.'

நெற்றியில் பொட்டில்லை. பதறினான்.

''எங்கே அவர்? '

ரெடியாய் வைத்திருந்தது போல் கண்ணீரைத் தந்தன கண்கள்.

''ஒரு மாசம் முன்னாடிப் போயிட்டாருங்க. கல்லு மாதிரி இருந்தாரு. பத்து பேரை அடிப்பாரு. ஒரு தலைவலி கூட வந்ததில்லை. நோவு இல்லாம, ஒரு விபத்தில்லாம, என்ன காரணம்னே தெரியாம பொக்குன்னு போய்ட்டாருங்க...''

சந்துரு எச்சில் விழுங்கினான்.

'பத்தினி வயிறெரிஞ்சி சொல்றேன்...'

முகம் வெளுத்தது. திரும்பினான் சென்னைக்கு.

அப்படியென்றால்... அது...அது...பலித்து விடுமோ? நானும் செ...செ...த்து விடுவேனோ? இன்றைக்கு என்ன தேதி? 3. வரும் இருபதாம் தேதியோடு ஆறு மாத கெடு முடிகிறது. இந்த விஞ்ஞான உலகத்தில் இது சாத்தியமா?

காவியங்கள் பொய்யா? அய்யர் சொன்ன உண்மைச் சம்பவம் பொய்யா? ஒரு தலைவலி கூட வராத சின்னையாவுக்குச் சாவு எப்படி வந்தது?

பயம் அவனுள் என்லார்ஜ் ஆகிக் கொண்டிருந்தது. சட், சட்டென்று வியர்த்தது. இதயம் வேக வேகமாக இயங்கியது.

நோ! நான் சாகக் கூடாது. வாழணும், சாபம் பலிக்கக் கூடாது. பலிக்க விட மாட்டேன்.

மறுநாள் தன் கம்பெனியில் ஒரு மாத லீவு எடுத்துக் கொண்டான்.

"சந்துரு" என்றழைத்தான் அட்டெண்டர்.

எழுந்து கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றான். ஏ. சி. அறை. டெட்டால் மணம் இல்லை. டாக்டரின் தலையில் டேபிள் டென்னிஸ் விளையாட இடமிருந்தது. சுவர் முழுக்கப் படங்களில் மனித உறுப்புகள்.

"யெஸ், என்ன ப்ராப்ளம்?" என்றார்.

"சார்... நான் நல்லாத்தான் இருக்கேன். ஆனா சீக்கிரம் செத்துப் போயிடுவேனோன்னு ஒரு பயம் வந்திருக்கு...."

"அடடா! நீங்க பார்க்க வேண்டியது ஒரு சைக்யாட்ரிஸ்ட்டை. நான் ஜெனரல் பிஸிசியன். சர்ஜன். அவ்வளவுதான். விட்டமின் டாப்லெட்ஸ் வேணும்னா தர்றேன்."

"புரியுது டாக்டர். சத்தியமா என் மன நிலையில் எந்தப் பாதிப்பும் இல்லே. நான் பார்க்கவேண்டியது உங்களைத்தான். நீங்க என் வேண்டுகோளைக் கேட்டுச் சிரிக்கக் கூடாது. உங்க ஆஸ்பத்திரியிலே என்னை அட்மிட் பண்ணுங்க. தினம் தினம் என்னை எல்லா டெஸ்ட்டும் எடுத்து டெஸ்ட் பண்ணுங்க. ஒரு பதினாறு நாளைக்கு என் உயிரைக் காப்பாத்தி எனக்குத் தரணும்."

டாக்டர் சிரித்தார்.

"தயவு செய்து சிரிக்காதீங்க. என் பயத்துக்குப் பலமான காரணம் இருக்கு. உங்க ஃபீஸ், பெட் சார்ஜ் எல்லாத்தையும் அட்வான்ஸாக் கட்டறதுக்குக்கூட நான் தயார்."

திருக்குற்றாலநாதர் ஆலயம். கோபுரக்குள் அருவி வாய்க்கால் போல் சிறியதாக ஓடுகிறது.

குற்றால நாதருக்கு இரவு நைவேத்தியம் கடுக்காய் கஷாயம்தான்.!

அர்ச்சகர் கூறினார்: "நீர் அபிஷேகம் மட்டுமின்றி சிவனுக்கு இங்கே தினம் ஒருமுறை வெந்நீராலும் அபிஷேகம் செய்வதுண்டு!"

-ஏ. சுவாமிநாதன்



"நீங்க நல்லா இருக்கறப்போ எதுக்கு அட்மிட் ஆகணும்?"

"காரணம் இருக்கு டாக்டர். ஆனா சொல்ல விரும்பலே."

"ஓ.கே. தினம் உங்களை டெஸ்ட் பண்ணிப் பார்க்கணும். அவ்வளவுதானே? செய்யறேன்" என்றார்.

"இன்னிக்குத் தேதி என்ன?" என்றான் நர்ஸிடம்.

"பத்து" என்றாள்.

"இன்னும் பத்துநாள் ஓடிவிட்டால் போதும். டாக்டர் வந்தார்.

"நான் எப்படி இருக்கேன் டாக்டர்?"

"வித்தையான பேஷண்டப்பா நீ. உன் உடம்புல எந்தக் கோளாறும் இல்லே."

பெட்டில் நாவல் படித்தான்.

ஆனாலும் இரவுகளில் போர்வைக்கடியில் குளிர் காரணமில்லாமல் நடுங்கினான் சந்துரு.

டாக்டரின் டெலிபோன் பேசியது.

எடுத்து அவர் பேசினார்.

"குட் மார்னிங் டாக்டர். நான் பூபதி பேசறேன்."

"குட் மார்னிங். நல்லா இருக்கியா? உன் பத்திரிகை எப்படி இருக்கு?"

"குட் கோயிங். நீ என் பத்திரிகையிலே ஒரு தொடர் கட்டுரை எழுதறே."

"எனக்கு டைம் இல்லேயேப்பா."

"அதெல்லாம் தெரியாது. எழுதறேன்னு எழுதறே. தலைப்பு என்ன தெரியுமா? 'மனிதனும் – மரணமும்'. அப்புறம் ஈவினிங் உன் வீட்ல மீட் பண்ணி விவரமாச் சொல்றேன். ஓ.கே?"

டெலிபோனை வைத்தார் டாக்டர்.

"சார், நாளைக்கு நான் டூட்டிக்கு வர மாட்டேன். வேறே நர்ஸ் வருவாங்க" என்றாள் சந்துருவிடம்.

"சரி. வெளியூர் பயணமா?"

"ஆமாம். என் ஃப்ரெண்டு மாரேஜுக்கு."

"பத்தொன்பதாம் தேதியில்ல சொன்னீங்க?"

"நாளைக்குத்தான் பத்தொன்பது."

சந்துருவுக்குச் சடாரென்று நரம்புகள் முறுக்கிக் கொண்டன. இன்னும் இரண்டே இரண்டு நாட்கள் கெடு முடிய. இத்தனை நாளில் ஒரு இருமல் கூட வரவில்லை. இரண்டு நாளில் என்ன வந்துவிடும்?

ஆனாலும் சந்துரு பயந்தான்.

தேதி: 20.

காலையில் காகம் கரைந்தபோது கவலையைத் துவக்கினான். இன்னும் ஒரே ஒரு நாள். ஓடிவிட்டால் நம்பிக்கை வந்து விடும். சாபம் பொய்த்துவிடும். இந்த ஜன்னலின் கண்ணாடியை உடைத்துக் கொண்டு சாவு வருமா? சின்னையா ஏன் செத்தான்?

வராந்தாவில் உலாத்தினான். அதோ சாலையில் எத்தனை ஆயிரம் பேர் தைரியமாய், தெம்பாய்ப் போகிறார்கள்? நான் மட்டும் இப்படி பயந்து நடுங்கிக் கொண்டு...

மாலையில் படுக்கையில் படுத்தவன் சிஸ்டரை அழைத்தான். "சிஸ்டர், என் பெட்டை நகர்த்திப் போடுங்க."

''ஏன்?''

''ஃபானுக்கடியிலே இருக்கு.''

''இருந்தா என்ன?''

''திடீர்னு கழண்டு விழுந்திடுச்சின்னு?''

அவனிடம் வந்த டாக்டரின் கையைப் பிடித்துக் கொண்டான்.

''டாக்டர், இன்னிக்கு ஒரு நாள். என்னைக் காப்பாத்திடுங்க டாக்டர். எனக்கு ரொம்பப் பயமா யிருக்கு டாக்டர்.''

''நத்திங் டு வொரி. நீ நல்லா இருக்கே. கொஞ்ச நேரம் புத்தகம் படி, தூங்கு.''

புஸ்தகம் எடுத்தான். படிக்க மனமில்லை. புரண்டு புரண்டு படுத்தான். உயிர் போவ தென்றால் என்ன? உயிர் என்றால் என்ன? அதற்கு என்ன வடிவம்? என்ன நிறம்? திடப் பொருளா? திரவமா? வாயுவா? எப் படி வெளியே போகும்? போன பின்னால் எங்கே போகும்? அப்புறம் எனக்குச் சொரணையே இருக்காதா?

சட்டென்று எழுந்து உட்கார்ந்தான். உடல் எங்கும் வியர்வை வெள்ளம். நான் நல்லா யிருக்கேன். எனக்கொண்ணுமில்லை. நான்சாகக் கூடாது. நான் சாக மாட்டேன். விரல்கள் நடுங்கின. நர்ஸை முறைத்தான் சந்துரு.

இந்த நர்ஸ் திடீரென்று என் மேல் பாய்ந்து என் குரல்வளையைக் கடிப்பாளா? கவரோர மாகச் சத்தமில்லாமல் ஊர்ந்து வந்து என் மார்பில் ஏறி நாகம் கொத்துமா? திடீ ரென்று யாராவது உள்ளே நுழைந்து கத்தி யால் குத்துவார்களா? இந்தக் கட்டிடம் இந்த நிமிஷம் டமார்னு இடிஞ்சு விழுமா? தீ பிடிச்சுக்குமா? டாக்டர் மறந்து விஷஊசி போட்டிருப்பாரா? சாயங்காலம் சாப்பிட்ட சாம்பாரில் பல்லி விழுந்திருக்குமா?

நான்...நான்... செத்து விடுவேனா?

''கல்லு மாதிரி இருந்தார். பொக்குன்னு போயிட்டார்.''

''இப்படித்தான் எங்க கிராமத்திலே...''

''வயிறெரிஞ்சி பத்தினி சொல்றேன்...''

''டாக்டர்! டாக்டர்!'' என்று கத்தினான் சந்துரு.

டாக்டர் ஓடிவந்தார். ''என்ன... என்ன? நீ நல்லா இருக்கே... அநாவசியமா எதையா வது நினைச்சுக் குழப்பிக்காதே.''

''நீங்க என் பக்கத்திலேயே இருங்க டாக்டர். எனக்கு பயமா இருக்கு டாக்டர். ரொம்பரொம்பப் பயமா இருக்கு டாக்டர்.''

''ஒரு ஊசி போடறேன். அமைதியாத் தூங்கு.''

''ஊசி போட்டுக்க மாட்டேன்.''

''எனக்கு வேலை இருக்குப்பா. இத பாரு, நான் என் ரூம்லதான் இருக்கேன். நீ வம்பு பண்ணாமத் தூங்கு. ஏதாச்சும்னு கூப்பிடு. வர்றேன்.'' என்று டாக்டர் சொன்னார்.


சந்துரு தூங்கத் தொடங்கினான்.

மறுநாள் காலையில்...

நர்ஸ் வந்தாள். சந்துருவை எழுப்பினாள். ''சார், எழுந்திருங்க. மணி எட்டு.''

சந்துரு எழுந்திருக்கவில்லை.

'**ம**ரணத்தை விட மரண பயம் மிகக் கொடுமையானது...' என்று தமது கட் டுரையை ஆரம்பித்தார் டாக்டர்!



வேறு பார்வை!

நுனி வெளுத்த
கைத்தடி ஏந்தி
அண்ணா சாலையின்
ஒலிக்கடல் நீந்திக்
கரையேறியவனை
நிறுத்தி
'இரக்கம்' தெரிவித்தேன்.
அவனோ—
பரிதிக் கரங்களை
ஒடித்து அடுக்கிய
பற்கள் தெரியச்
சிரித்துச் சொன்னான்:
''நேற்று
நெரிசலில்
என்மேல் ஒருவர்
இடித்துக் கொண்டார்.
காய்ச்சல் கரங்களால்
தோளைத் தட்டி
வருந்தி
மேற்கே செல்ல
வழி கேட்டார்.
கொதிக்கும் அவரது
விரல் பற்றிக் கொண்டு
கூட்டம் கடத்தி
விட்டு வந்தேன்
சூரியன் என்றவர்
பெயரும் சொன்னார்!''
ஓ....
நமது விழிகள்
ஒளியின்
குப்பைக் குழிகள்
திரும்பிப் பார்த்தேன்
நகர நெரிசலில்
எவர் மீதும் உரசாமல்
விரையும் அவனை...
நகக்கண்
இருபது
மட்டும் அல்ல
உரோமக் கண்ணெல்லாம்
உள்ளொளி மூளக்க
ஆயிரம் விழி கொண்ட
அவனைப்
பா...ர்...க்...கி...றே...ன்!

—இக்பால்




® is the registered trademark of Reliance Textile Industries Ltd.



Mudra/RTI/219 Tam.

கீழே ஓ.ஏ.கே.தேவர்;





✖ ''அன்று இந்த அறைக்கு ஓடு வேய்ந்த கூரைதான்...'

''வழியெல்லாம் டிராம் லைன் அழியாமல் தெரிந்தது. இப்பொழுது இருக்கும் மிட்லண்ட் தியேட்டருக்குப் பெயர் அப்பொழுதுவெஸ்ட் எண்ட் டாக்கீஸ்.''

"பட்டிக் காட்டான் பட்டணத்தைப் பார்த்தது போல்' என்ற பழமொழி என்னை நினைத்துத்தான் உருவானதோ என்னவோ! 1958ம் வருடம் வேலையில் சேர என் மாமாவுடன் சென்னைக்கு வந்து உட்லண்ட்ஸ் ஓட்டலில் தங்கினேன். சென்னை மன்றோ சிலை, மவுண்ட் ரோடு ஆகியவைகளை எல்லாம் சுற்றிப் பார்த்தபோது ஏதோ வெளி நாட்டுக்குவந்து விட்டது போன்ற எண்ணம். உட்லண்ட்ஸ் அறை அன்று அறுபது ரூபாய். இன்று அதுவே நூற்றி ஐம்பது ரூபாய்.

''உட்லண்ட்ஸில் வந்து தங்கியதும், 'சிவாஜி கணேசனைப் பார்க்கப் போகிறோம்' என்று மாமா கூறியவுடன் சந்தோஷம் தாங்க முடியவில்லை. ஏதோ சொர்க்கமே நமக்குச் சொந்தமாகி விட்டது போன்ற ஒரு எண்ணம். அங்கிருந்து நான் இடம் மாறிய வீடு கோபாலபுரத்தில்நார்த் ரோடில் உள்ளது. நாற்பத்தி நான்கு ரூபாய் வாடகை.

''மாடியில் நான் தங்கியிருக்க, கீழே கவிஞர் கே. டி. சந்தானம், ஓ.ஏ.கே. தேவர் ஆகியோரும், எதிர் போர்ஷனில் சாண்டோ எம். கிருஷ்ணனும் இருந்தார்கள். மேலே இருந்து . கீழே பார்த்தால் காலையில், சாண்டோ கிருஷ்ணன் கஸரத் செய்து கொண்டிருப்பார். என்னைப் பார்க்கும்போதெல்லாம், 'நீயும் செய்யப்பா. உடம்பு நல்லாகும்' என அறிவுரை கூறுவார். காலையில் வீட்டிலிருந்து கிளம்பி ராயப்பேட்டை வழியாக வெலிங்டன் அருகில் மோகன் ஆர்ட்ஸ் என்ற விளம்பரக் கம்பெனிக்கு வருவேன். மாலை திரும்பும்போது நடராஜா சர்வீஸ்தான். அன்று வெலிங்டனில் ''வஞ்சிக்கோட்டை வாலிபன்'' ஓடிக்கொண்டிருந்தது. 'பதி பக்தி' திரைப்படம் நூறுவது நாளைக் கொண்டாடியது.

இப்படிப் பழைய வீட்டை நோக்கி நாங்கள் காரில் செல்லும்போது பழைய நினைவுகளைக் கூறிக் கொண்டு வந்தார் சிவகுமார்.

காரை விட்டு இறங்கி வியப்புடன் தாம் இருந்த வீட்டைப் பார்த்தார். அவருக்கே அடையாளம் தெரியாத அளவுக்கு அது மாறிப் போயிருக்கக் கண்டார். அந்த வீட்டின் சொந்தக்காரர் மீனாட்சி அம்மாள் சிவகுமாரை வரவேற்று இவர் இருந்த அறையில் தற்போது குடியிருக்கும் சுவாமிநாதன் குடும்பத்துக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

''நாங்கள் 1958ம் வருடம்தான் இந்த வீட்டைச் சொந்தமாக வாங்கினோம்'' என்றார் மீனாட்சி அம்மாள்.

''அப்படியென்றால் அன்றைக்கே என்னை உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே?'' என்றார் சிவகுமார்.

''நீங்கள் எல்லாம் காலி செய்த பிறகு தான் நான் இந்த வீட்டை வாங்குவேன் என்று சொன்னேன். காலியான பிறகுதான் வீட்டை வாங்கினேன்.''

''என் அறையைப் பார்க்கலாமா?'' என்றார் சிவகுமார் ஆர்வத்தை அடக்க முடியாமல்.

''ஓ'' என ஏகோபித்து எல்லோரும் கூற, தாம் இருபத்தி மூன்று வருடங்களுக்கு முன் இருந்த அறையைச் சுற்று முற்றும் பார்க்க ஆரம்பித்தார்.

''சலன்! அப்பொழுது இந்த அறைக்கு மேல் ஓடுகள்தான் இருக்கும். இப்பொழுது போல் மாடிப் படிக்கட்டுகள் வெளியிலல்ல; உள்ளேயே இருக்கும். அடேடே! இதுதான் இந்த அறைக்குள் நுழைவதற்கு அன்று இருந்த வாசல்'' என ஓரிடத்தைக்காண்பிக்க

எதிரே சாண்டோ கிருஷ்ணன்!



✖ ''அன்று மாடிப்படிகள் வெளியே இராது; வீட்டுக்குள்ளேயே இருந்தது!''

அது இப்பொழுது சுவர் எழுப்பி மூடப்பட்டு, ஆனால் வெள்ளை அடிக்கப்படாமல் இருந்தது.

''சமீபத்தில்தான் இந்த வாசலை மூடினேம்'' என்றார் மீனாட்சி அம்மாள்.

''கிணற்றுப் பக்கம் போய்ப் பார்க்கலாமா?'' என்றார் சிவகுமார்.

''அதே கிணறுதான். அப்படியேதான் இருக்கிறது! தண்ணீரைப் பக்கெட்டில் நிரப்பி மொண்டு மொண்டு ஊற்றிக்கொள்வேன்.''என சிவகுமார் கூறிக்கொண்டிருக்கையில், ''என்ன தம்பி, சௌக்கியமா?'' என ஒரு வயதான மூதாட்டியின் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார் சிவகுமார்.



✖ ''வா, ஆயா நல்லாயிருக்கியா?''

''வா ஆயா, நல்லாயிருக்கியா?'' எனக் கேட்டவாறே தம் பாக்கெட்டிலிருந்து ஒரு தொகையை எடுத்து அம்மூதாட்டியிடம் கொடுத்துவிட்டு, என்னைப் பார்த்து, ''நான் அறையில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இந்த ஆயாதான் காலையில் பெருக்கிச் சுத்தம் செய்து தண்ணீர் எடுத்து வைத்து விட்டுப் போகும்'' என்றார்.

அறைக்குத் திரும்பினேம். சிறிது நேரம் அமர்ந்து எல்லோருடனும் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் புறப்பட்டார். திடீரென்று நினைவுக்கு வந்தவராக, ''இந்த அறைக்குள்தான் நான் அலிபாபாவும் 40 திருடர்களும் படத்தில் ஓ.ஏ.கே. தேவர் பானை வைத்துக் கொண்டிருக்கும் ஒரு படத்தைப் பார்த்து அதை அப்படியே வரைந்து அவருக்கு ஞாபகார்த்தமாகக் கொடுத்தேன்'' என்றார்.


அந்த அறையில் சிவகுமார் தங்கியிருந்தது முப்பது நாட்கள்தான். அதன் பிறகு அவர் வேறு இடத்துக்கு மாறிவிட்டார்.

பேட்டி : ''சலன்''

படங்கள்: ஏ.வி. பாஸ்கர்

✖ ''அன்றைக்கே என்னை உங்களுக்குத் தெரிந்திருக்கவேணுமே!''
சுவாமிநாதன் நடுப்பக்கத்தில் சிவகுமார் - கண்ணாடி அணிந்திருப்பவர் மீனாட்சி அம்மாள்




மோகினி
மிக்ஸி
தயாரிப்புகளிலே
முற்றிலும்
மாறுபட்டது
Mohini
மூன்று சைஸ்களில்
கிடைக்கிறது
ISI
IS: 4250
சீகோ மாவரைக்கும் இயந்திரங்கள்
CEECO
பலவித
சைஸ்களிலும்
கிடைக்கிறது
OSR
வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன

[redacted]



● கோடைச் சிறப்பிதழுக்குக் கோடை வாசஸ்தலங்களில் ஏதாவதொரு எழிலான காட்சியை அட்டைப் படத்தில் போட்டிருப்பீர்கள் என எதிர்பார்த்தேன். அந்தக்குளுமையான காட்சியை விட இந்த இதமான காட்சி அழகு என்று போட்டுவிட்டீர்களா?
பெங்களூர் ப. மூர்த்தி

● கோடைச் சிறப்பிதழில் இடம்பெற்ற அத்துணைக் கார்ட்டூன்களும் பிரமாதம். குறிப்பாக ''மதுவிலக்குப் பிரசார விழா'' பற்றிய கார்ட்டூன் ரொம்பப் பிரமாதம்.
மதுரை-1 ப. சந்தானம்

● தமிழக அரசு சட்டப் புத்தகத்தில் 'மதுவிலக்கை' வைத்துக் கொண்டே எல்லோரும் குடிக்கும் வகையில் சட்டத் திருத்தம் செய்தது போன்ற துக்ளத்தனம் வேறு எதுவும் இருக்க முடியாது. இதை உங்கள் தலையங்கம் எதிர்க் கட்சித் தலைவர்களின் கூற்றுக்களைக் கொண்டே 'சடையராக' இடித்துக் கூறியிருப்பது மிகவும் போற்றத் தக்கது.
மேலப்பாலையூர் சுமாலி

● ஆணைப்பட்ட திராவிட நாட்டுக் கோரிக்கையையே ''தேறாத கேஸ்'' என்று அறிந்த நிலையில் கைகழுவிவிட்ட ராஜரீகம் அண்ணா அவர்களுடையது. மதுவிலக்கு வெற்றி பெறாது என்று தெரிந்த பின்னரும் அதைத் தொடர்ந்து அமல்படுத்தாமல் கைவிடுவது அண்ணாவின் தம்பிமார்களுக்கு உகந்த செயலே!
திருச்சி டி. ஆர். அலமேலு

● ஸ்ரீவேணுகோபாலன் அவர்கள் படைத்திருக்கும் 'சுவர்ணமுகி' கதைத் தொடர் ஆரம்பமே விறுவிறுப்புடன் வித்தியாசமான படைப்பாய்ச் செல்கிறது. முதல் அத்தியாயம் முடியும் தருவாயில் இதேபோல் இறுதிவரை விறுவிறுப்புக் காணலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி விடுகிறார். 'கோபுலு'வின் ஓவியம் கதைக்கு மேலும் மெருகூட்டியிருக்கிறது.
தஞ்சாவூர் ரத்தன்

● 'கம்ப்யூட்டர்கள் உலகை ஆண்டபோது' முழு நாவல் படித்தேன். — வழிதவறித் திடுமென்று ஏதோ ஒரு விஞ்ஞான உலகுக்குள் நுழைந்து, தட்டுத் தடுமாறி, மலைத்து, பிரமித்து, வியந்து, திகைத்து — கதை முடிந்ததும் அந்த உலகுக்குள் இருந்து தடால் என்று தூக்கி எறியப்பட்டது போல் விழித்தேன்.
சென்னை-11 மணிமகன்

● மற்றைய காதல் கதைகளைப் போல் இல்லாமல், வித்தியாசமாகவும், மிகவும் புதுமையாகவும் இருந்தது பாராட்டுக்குரியது. நாவலுக்கு ஜெயராஜின் கைவண்ணம் அருமை. சித்திரைச் சிறப்பிதழில் அழுத்தமான தன் முத்திரையைப் பதித்து விட்டார் செம்பியன்.
வேலூர் வேணுகோபால்

● மிஸ்டர் செம்பியன்! நான் அதிகம் எதிர்பார்த்தேன் உங்களிடம்! அது என் தவறு!
கொச்சின் எஸ். இராமமூர்த்தி

● ''பங்களா தேசத்தின் புதிய இளம் தலைவி' பேட்டிக் கட்டுரை மிக அருமை. அந் நாட்டின் எதிர்காலம் இந்தப் பெண்மணியின் மூலம் நல்லமுறையில் மலர்ந்தால் அது பங்களா தேச மக்களுக்கு மட்டுமல்ல, உலக மக்களுக்கே சந்தோஷம் தரும்.
நங்கநல்லூர் கா. மு. பாரூக்

● நண்பர்களை ஏப்ரல் முட்டாளாக்கவேண்டுமா? 88ம் பக்கம் பார்க்கவும்... என்பதைப் படித்தவுடன் அப்பக்கத்தில் ஒன்றும் இருக்காது என்று புத்திசாலித்தனமாகத் திருப்பினேன். பிறகுதான் 88ம் பக்கமே இல்லை எனத் தெரிந்தது!
சென்னை-49 வி. வெங்கடாசலம்

● நீங்கள் ஏப்ரல் பூல் பண்ணினீர்கள் அல்லவா? எனக்கு வந்த கோபத்தில் கல்கி வாங்குவதை நிறுத்திவிடலாம் என்று தோன்றிற்று. சிறிது நேரம் கழித்து நானே நினைத்துக்கொண்டேன். ''இவ்வளவு அருமையான விஷயங்களைத் தரும் கல்கியையா என்னால் நிறுத்த முடியும்'' என்று!
சேலம் சுப. சாத்தப்பன்.


● கராத்தே பயிற்சி இவ்வளவு சீக்கிரம் முடிந்து விட்டதில் வருத்தமே. எளிதில் புரிய உதவிய படங்களுடன் என்னைக் கவர்ந்தது. 'டோஜோ'வில் சேர்ந்து பயிலத் துவங்கிய எனக்குப் பெரிதும் உதவியாக அமைந்திருந்தது.
திருச்சி-4 க. விஜயராகவன்

● சல்லிப் பயல் என்பதற்குவிளக்கம் தவறு. சல்லி என்பது நாணயத்தின் மிகக் குறைந்த மதிப்பைக் குறிக்கும். தரக் குறைவாக, முட்டாள்தனமாகப் பேசுபவர்களைச் சல்லியுடன் ஒப்பிட்டுச் சொல்வது வழக்கம். சல்லியனுடைய பேச்சைக் கர்ணன் யுத்த களத்தில் கேட்டிருப்பானேயானால் அர்ஜுனன் கதை முடிந்திருக்கும் என பாரதம் கூறுகிறது. சல்லியன் யுத்த யுக்திகள் தெரிந்த மகா திறமைசாலி.
தஞ்சை உஷாதேவி

வட்டமேஜை

வஸந்த்! வஸந்த்!

16. சின்னதாய் ஒரு வஸ்து



"**மை** காட்! ஃபுட் பாய்ஸனிங்! ஏன் ஸார், ரெண்டு நாளைக்குள்ளேயே நான் கத்துண்டதெல்லாம் பிராக்டீஸ் பண்ணணுமா? என்ன ஸார் நடக்குது இந்த டவுன்ல?''

''டாக்டர்! ஆசாமி போயிடப்போறான்னு பாருங்க மொதல்ல!''

''சாப்டதெல்லாம் வெளியே வரணும். அப்புறம்தான் சொல்ல முடியும். என்னத்தைத் தின்னாரு?''

''டாக்டர் ப்ளீஸ்! டு சம்திங் க்விக்'' என்றான் கணேஷ்.

''பாய்ஸன் என்னன்னு தெரிஞ்சா அதுக்கேத்தாப்ல ட்ரீட் பண்ணலாம். பட்டை அடிச்சாரா? இப்ப ஸ்டமக் வாஷ் பண்றேன். பொட்டாசியம் பர்மாங்கனேட் யூஸ் பண்றேன் அது எதாவது ஒப்பியமா இருந்தா நியூட்ரலைஸ் ஆயிடும். பாருங்கோ அப்புறம் என்னைக் கோர்ட்டுல போட்டு வாட்டிடுவாங்க!''

''ஸார் இது சிம்பிள் ஃபுட் பாய்ஸனிங். இட்லி சாம்பார்ல எதோ கலந்து கொடுத்திருக்காங்க!''

''கிரிமினல் கேஸ் இருக்கா? லாபுக்கு வாமிட் சாம்பிள் அனுப்பணும். டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசருக்கு ரிப்போர்ட் பண்ணணும். பையா! சட்னு போய் ஒரு பொட்டலம் பொடி உப்பு வாங்கிட்டு வா! ஓடு!''

கணேஷ் தவித்தான். நேரமாக நேரமாக வஸந்த் சோர்ந்து போய்க் கொண்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது. ''ஏய் வஸந்த்!'' என்று அடிக்கடி அவன் கன்னத்தைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தான். அவன் மத்தியானப் பூனை போல மறுபடி மறுபடி கண்ணயர்ந்து கொண்டிருந்தான்.

''உயிருக்கு ஒண்ணும் பயமில்லை. ஏற்கனவே நிறைய வாந்தி எடுத்திருக்கார். பூரத்தைக் கிரத்தை கரைச்சுக் குடுத்திட்டாங்களோ எப்படி ஸார்?''

இன்ஸ்பெக்டர் கணேஷிடம் வந்தார். ''நீங்க வேறு ஒண்ணு செய்யுங்க. இந்த டிஸ்பென்சரியிலே அவ்வளவு தீர்மானமாச் சொல்ல முடியாது. இவருக்கு அனுபவம் இருக்கிறதாகவும் தெரியலே. வாந்திக்குத்தான் மருந்து கொடுப்பாரு போல இருக்கு. எனக்கு என்னவோ உயிருக்கு ஆபத்து இல்லேன்னு தோணுது. பனிச்சனு டவுனுக்கோ மெட்ராஸுக்கோ கூட்டிக்கிட்டுப் போய் வைத்தியம் பார்த்துருங்க. அப்புறம் இங்க வாங்க. நீங்க ரெண்டு பேரும் இங்க இருக்கிறதாலேயே கொஞ்சம் சிக்கல்கள் இருக்காப்பலத் தெரியுது. நான் அந்தக் கடைக்காரப் பயலைப் பல்லைத் தட்டி விசாரிக்கிறேன். முயற்சி உங்க ரெண்டு பேரையும் கொல்லறதுக்குத்தான்னு க்ளீனாத் தெரியுது. நான் உடனே சூப்ரண்டுக்கு மெஸேஜ் சொல்லிட றேன். என்னால ஒண்டியா இதைச் சமாளிக்க முடியாது.''

''உவேக்!'' என்றான் வஸந்த். கணேஷ் உள்ளே செல்ல அவனைப் பரிதாபமாகப் பார்த்தான். என்னவோ சொல்ல நினைத்துப் பேச முடியாமல் கஷ்டப்பட்டான்.

''கவலைப்படாதே வஸந்த். இன்ஸ்பெக்



சுஜாதா

டர் கிளியரன்ஸ் கொடுத்திட்டார். உனக்குக் கொஞ்சம் பெட்டரான உடனே நாம ஊருக்குப்புறப்பட்டுப் போயிடலாம்.''

வஸந்த் புன்சிரிப்பில் கண் மயங்கினான். நெற்றியைச் சுருக்கிக் கொண்டுமறுபடி 'உவேக்!'.

''பத்திங்களா மஸ்டு எல்லாம் வெளியே வருது. எதோ பாக்டிரியல்பாய்ஸனிங் மாதிரித்தான் தெரியுது. எதுக்கும் கெமிக்கல்எக்ஸாமினேஷனுக்கு நாலு அவுன்ஸ் வாமிட்எடுத்துத் தனியா பாட்டில்ல வெச்சிருக்கேன். அவங்க கண்டு பிடிச்சுருவாங்க. என்ன வஸந்த் எப்படி இருக்கீங்க?''

இன்ஸ்பெக்டர், ''நீங்க அழைச்சுக்கிட்டுப் போயிட்டுக் குணமானதும் சீக்கிரம் திரும்பி வந்திருங்க. கேஸு பாதில நிக்குது. உங்க ஸ்டேட்மெண்ட் எல்லாம் பதிவு பண்ணிக்கணும் என்றார்.''

''நிச்சயம் வருவோம் ஸார். எங்க மேலே ரெண்டு முறை முயற்சி நடந்திருக்கு. யாரு அந்தப் பார்ட்டின்னு கண்டு பிடிக்க எனக்கு ரொம்ப ஆவலா இருக்குதுங்க!''

''அந்த காளிதாஸ் பொட்டியைத் திருப்பிக் கொடுத்த ஆள் வந்திருவான் இப்ப.''

''அவங்கிட்ட இது மட்டும் கேட்டு வெச்சுக்குங்க. அந்தப் பெட்டியை எக்ஸாக்ட்டா எந்த இடத்தில, எந்த ஸ்பாட்ல கண்டு எடுத்தான்னு கேட்டு விசாரிச்சுக்குங்க. இப்போதைக்கு அது போதும்.''

''நீங்க வரதுக்குள்ள உங்களுக்கு விஷம் கொடுக்க முயற்சி பண்ணவன் யாருன்னு கண்டு பிடிச்சு வச்சுக்கறேன். கவலைப் படாதீங்க.''

''எவ்வளவு சீக்கிரம் முடியுமோ வந்துர்றேம். இந்தாங்க என் கார்ட். அப்படி ஏதாவது அர்ஜண்டா வேணும்னா கான்



சதா இப்படி சண்டை போட்டுக் கிட்டே இருந்தா எப்படி? ஒரு மாறுதலுக்காக வாவது . . .

62ம் பக்கம் பார்க்க

டாக்ட் பண்ணுங்க. டெலிபோன் நம்பர் கூட இருக்கு.''

மறுபடி அவர்கள் சென்னைக்குக் கிளம்பும் போது மணி மூன்றாகி விட்டது. கணேஷ் காரை ஓட்டிக் கொண்டு செல்ல வஸந்த் பின்னால் விஸ்தாரமாகப் படுத்திருந்தான்.

''அதிர்ஷ்டசாலிடா நீ.''

''இட்லி தின்னதுக்கா?''

''இல்லே. செத்துக் கித்துப் போகாம பொழைச்சதுக்கு. ராத்திரியே நம்ம மேல கரு கட்டிண்டு கத்திக் குத்துக்கு வந்து தலையணையைக் குத்திட்டுப் போயிருக்காங்க. காலேல...''

''காலேல நம்மை ஃபாலோ பண்ணிக்கிட்டு வந்திருக்காங்க பாஸ். அந்தப் பையனை விசாரிச்சீங்களா ஏதாவது?''

''எந்தப் பையனை?''

''அதான். அழகான இட்லி சாம்பார் வாங்கிட்டு வந்தானே சோக்ரா.''

''எல்லா விசாரிப்பும் திரும்பி வந்ததுக்கு அப்புறம்தான்; இன்ஸ்பெக்டர் பார்த்தார். அவருக்கு உள்ளூர் டாக்டர் மேலே நம்பிக்கை இல்லே. போய்க் குணமானதும் வந்தாப் போதும்னு அனுப்பிச்சுட்டார்.''

''மெட்ராஸ் போயிட்டுத் திரும்பி வர்றமா பாஸ்?''

''ஆமா. வந்தாகணும்.''

''எக்கேடு கெட்டுப் போகுதுன்னு விட்டுட்டா என்ன?''

''அவங்க என்ன நடத்தறாங்கன்னு தெரிஞ்சுக்க வேண்டாமா? தோல்வியை ஒப்புக் கொண்டுடறதா?''

''லோகத்தில எத்தனையோ கெட்ட காரியங்கள் நடக்கறது. எல்லாத்தையுமா நாம கவனிக்க முடியும்?''

''இந்தக் காரியம் நம்ம பாதையில குறுக்கிட்டதால அதுல நமக்கு ஒரு இன்வால்வ்மெண்ட் வந்துடுத்தே.''

''பார்க்கலாம். முதல்ல பாடி ஒழுங்கில வரட்டும். இப்பத்தான் பாஸ் புரியுது எனக்கு.''

''என்ன?''

''ஒரு சப்பிப்போட்ட மாங்கொட்டை எப்படி ஃபீல் பண்ணும்கிறது.''

''வாத்தியெல்லாம் நின்னு போச்சோல்லியோ?''

''சொல்லாதீங்க. 'வா'ன்னு ஆரம்பிச்சாலே வயத்தைச் சங்கடம் பண்றது.''

''கரப்பாம்பூச்சி மாதிரிடா நீ! உன்னே லேசிலே கொல்ல முடியாதுடா.''

''ஏதோ முதல் தடவையாவது நீங்க காப்பாத்தினீங்க.''

''இரண்டாவது முறையும் கலபமா சந்தேகப்பட்டிருக்கலாம். ஆனா இவ்வளவு கிட்ட வந்து போலீஸ் ஸ்டேஷன்லேயே முயற்சி ஒண்ணு நடக்கும்னு எதிர்பார்க்கலே.''

''பாஸ்! ஒரு சமயத்தில நான் அந்தக் கக்கூஸ்ல இருக்கறப்போ ஏறக்குறைய செத்தே போயிட்டேனா? எமனை கூடப் பார்த்தேன். எருமை மாட்டில ஒண்ணும் கன்னங் கருக்க வரலே. நல்லா டை கட்டிண்டு 'என்னங்க கொஞ்சம் சீக்கிரம் வந்துட்டிங்களே. ரிஸர்வேஷன் இல்லியே உங்களுக்கு'ன்னு கேட்டாங்க. பாஸ்! போன உடனே இனியாவுக்குப் போன் பண்ணிக் கொஞ்சம் சிசுருஷை பண்ண வரச் சொல்லிடுங்க, என்ன?''

''இன்னிக்குத்தான் அவளைப் பொண் பார்க்க வந்திருப்பாங்கன்னு சொன்னதா ஞாபகம்.''

''ஓ! அது வேறே சிக்கல் இருக்கு இல்லே? பாஸ்! நீங்கதான் எனக்குக் காதல் பாதையில இருக்கிற கரடு முரடை நீக்கி ஒத்தாசை பண்ணணும். ஏற்கனவே இட்லியைச் சாப்பிட்டு நொந்து போயிருக்கேன்.''

''முதல்ல உடம்பு குணமாயிடட்டும். அப்புறம் உன் காதலைப் பார்க்கலாம்.''

''அதுகூடச் சரிதான். கவத்தை வெச்சுண்டுதானே ஒண்ணுக்கடிக்க முடியும்?''

''ஆரம்பிச்சுட்டியா உன் பழமொழிகளை? அப்பன்னா உனக்குச் சரியாய்க்கிட்டு வரதுன்னு அர்த்தம்.''

''இனியாவை நெருங்க நெருங்கவே எனக்கு இம்ப்ரூவ் ஆய்க்கிட்டே வருதுபாஸ்.''

வஸந்தைப் பிரைவேட் நர்ஸிங் ஹோமில் அட்மிட் செய்துவிட்டு அங்கிருந்து கணேஷ் பேராசிரியர் வீட்டுக்குப் போன் செய்தான்.

''என்ன கணேஷ்?''

''ஸார், உங்க ராஜ ராஜன் கிணறு விவகாரம் ரொம்ப ஆழமாப் போய்டுத்து.''

''என்ன ஆச்சு? வேற ஏதாவது சம்பவங்கள் நடந்ததா?''

''நிறைய ஸார்! அதுக்கப்புறம் ஒரு ஆள் அடிபட்டு, நாங்க ரெண்டு பேரும் கத்திக் குத்துப்பட இருந்து. இன்னிக்கு காலேல ரெண்டு பேரும் 'பாய்ஸன் ஆக இருந்து. வஸந்த் விஷத்தைச் சாப்பிட்டதில தப்பிச்க, என்ன ஸார் இதெல்லாம்?''

''ஐ ஆம் ஸோ ஸாரி. ஹௌ இஸ் ஹி நவ்?''

''பெட்டர். என்ன ஸார் அந்தக் கிணத்தில மாயம்? 'ஒரு பாசி படிஞ்ச கிணத்துக்காக இத்தனை ரகளை நடக்குமா'ன்னு எனக்கு ஆச்சரியமா இருக்கு. இல்லே நாம் முக்கியமா ஒரு விஷயத்தைத் தப்ப விட்டிருக்கோமா?''

''நானும்தான் எல்லா ரிக்கார்ட்ஸையும் பார்த்துட்டேன் கணேஷ். கிணத்தில ஏதும் டிரஷர் இருக்கிறதாப் பேச்சே இல்லே.''

''ராஜன் ராஜன். கிணறுன்னு அது ஒண்ணுதானே?''

''அது ஒண்ணுதான், எனக்குத் தெரிஞ்ச வரைக்கும். ஏன்?''

''வேற ஜில்லால வேற ஏதாவது கிணறு?''

''எனக்கென்னவோ அது சரித்திர சம்பந்தமான விவகாரம் இல்லேன்னு தோணுது.''

''யு ஆர் ரைட்! எதுக்கும் பார்க்கலாம். இனியா இல்லையா? வஸந்த் மெஸேஜ் கொடுக்கச் சொன்னான்.''

''இருக்கா. கூப்பிடட்டுமா?''

''மாப்பிள்ளைப் பையன் வரலையா?''

''இல்லே. பிளேனை மிஸ் பண்ணிட்டானாம். இனியாவோட பேசுங்க.''

''ஹாய் கணேஷ்! எப்படி இருக்கீங்க? நல்லா இருக்கீங்களா?''



அருள்வாக்கு

குருடன் கையில் விளக்கு!

குருடன் ஒருவன் கையில் லாந்தருடன் போய்க் கொண்டிருந்தானாம். எதிரில் வந்த ஒருவன், "உனக்குத்தான் கண் தெரியவில்லையே, லாந்தர் ஏன் எடுத்து வருகிறாய்?" என்று கேட்டான். அதற்குக் குருடன், "எனக்குக் கண் இல்லாவிட்டாலும் உனக்குக் கண் இருக்கிறதல்லவா? அதற்காகத்தான் இதை எடுத்து வருகிறேன். இல்லாவிட்டால் இந்த இருட்டில் நீயே என்மேல் தடுக்கி விழுந்திருப்பாயே!" என்றானாம். அது போல, பழைய சாஸ்திரங்கள் நமக்குப் புரியாவிட்டாலும், எதிர்காலத்தில் யாருக்காவது புரியலாம், பயனாகலாம் என்பதனாலாவது அவற்றை நாம் ரட்சித்தாக வேண்டும் "வசதியே இல்லாத காலங்களில் யுகாந்தரமாக ரட்சிக்கப்பட்ட சாஸ்திரங்களை நமக்கு முதல் தலைமுறையினர் எல்லா வசதி இருந்தும் காப்பாற்றாமல் அழித்து நம்மை வஞ்சித்து விட்டார்கள்" என்று வருங்காலத் தலைமுறையினர் நம்மைக் குற்றம் சொல்ல இடம் வைக்கலாமா?

பழைய காலங்களில் சாஸ்திர ரட்சணம் அரசர்களின் பொறுப்பில் இருந்தது. இப்பொழுது ராஜாக்கள் இல்லை; ராஜ்ய மத்ய சர்க்கார்கள்தாம் உள்ளன. அவற்றுக்கு நிம்மதியே இல்லை. ஒரு பக்கம் பாஷைசண்டை, ஒருபக்கம் எல்லைச் சண்டை. ஏகப்பட்ட பாலிடிக்ஸ், ஊழல் இப்படிப் பல கஷ்டங்கள். அந்தக் காலத்தில் ஒரு ராஜாவுக்கும் இன்னொரு ராஜாவுக்கும் சண்டை நடந்தது என்றால், இப்பொழுது ஒரு ராஜ்யத்துக்கும் இன்னொரு ராஜ்யத்துக்கும் சண்டை. ஒரு வர்க்கத்துக்கும் இன்னொரு வர்க்கத்துக்கும் சண்டை. ஒரு கட்சிக்கும் இன்னொன்றுக்கும் மண்டை உடைகிறது. எனவே அரசாங்கத்தை சாஸ்திர ரட்சணத்துக்கு எதிர்பார்த்துப் பிரயோசனமில்லை. 'சுற்றுப்புறத்தில் எல்லாம் ஒரே பூசல்; குடும்பத்திலும் தொல்லை' என்று நாம் தட்டிக் கழிக்கக் கூடாது. வனவிலங்குகளைப் பாருங்கள். சிங்கம் புலியை அடிக்கிறது; புலி மானை அடிக்கிறது. இருந்தாலும் காட்டிலே சிங்கக் குட்டியும், புலிக் குட்டியும், மான் குட்டியும் வளர்ந்துகொண்டும் விளையாடிக் கொண்டும் தான் இருக்கின்றன. அப்படி இருக்க நாம் பழக வேண்டும். எத்தனை இடையூறுகள் இருப்பினும் நமக்கு எதிர்காலத்தினரிடம் உள்ள கடமையையும், பொறுப்பையும் உணர்ந்து, பழைய சாஸ்திரங்களை ரட்சித்துத் தரவேண்டும்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

"நல்லாத்தாம்மா இருக்கேன்."

"வஸந்த் நல்லா இருக்காரா?"

"அவர் நல்லா இல்லை. ஆஸ்பத்திரியில படுத்திருக்கார்."

"அப்படியா? என்ன ஆச்சு?"

கணேஷின் தோளருகே இருந்த வஸந்த் "சொல்லுங்க பாஸ்! குத்துயிரும் குலை உயிருமாப் படுத்திண்டிருக்கான். டாக்டர் இது ஒரு விஷ ஜுரம், ராத்திரி பன்னண்டு மணிக்கப்புறம்தான் பிழைக்குமா இல்லையான்னு சொல்ல முடியும்னு..."

கணேஷ், "ஷட் யுவர் மவுத். ஐ வில் டேக் யு.... ஹீ கேவ் மி ஸம் அன்க்ஸைட்டி. முடிஞ்சா வந்து பாரேன்" என்றான்.

"வரேன் கணேஷ்! நிச்சயம் வரேன்னு சொல்லுங்க. அதுவரைக்கும் அவரைப் பாத்துக்குங்க."

டெலிபோனை வைத்தான். "என்ன பாஸ் ஸ்ட்ராங்காவே சொல்லை நீங்க."

"பொய் சொல்லி வரவழைக்கிறது நல்லால்ல வஸந்த். எனக்கு ராஜேந்திரனைக் கொஞ்சம் பார்க்கணும்."

"உடனே வரேன்னாளா?"

"வருவா வருவா. ஏன் அவசரப் படறே?"

இனியா வரும்போது வஸந்த் கண் மூடிப் படுத்திருந்தான். "வஸந்த்! வஸந்த்!"

பதில் இல்லை. கிட்ட வந்து தொட்டுப் பார்த்தாள். "ஸிஸ்டர்! ஸிஸ்டர்!" என்று கூப்பிட்டாள். மூக்கருகில் கைவைத்துப் பார்த்தாள். என்ன இது மூச்சு இல்லையா... "ஸிஸ்டர்!"

"என்னம்மா?"

"இந்த பேஷண்டைப் பாருங்க."

"இந்த பேஷண்டு அப்பவே இறந்து போயிட்டாருங்களே."

"அய்யய்யோ!" என்று திரும்ப, வஸந்த் எழுந்து உட்கார்ந்து "ஹாய்!" என்றான்.

"போங்க வஸந்த்! என்னைப் பயமுறுத்திட்டீங்க."

"நிஜமாவா இனி பயந்தியா?"

"ஆமாம்."

"படக்கு படக்குன்னு உன் மார் அடிச்சுண்டுதா?"

"பின்னே?"

"எங்க, நான் பார்க்கலாமா? எப்படி புறா மாதிரியா? தொட்டுப் பார்க்கலாமா?"

"என்ன ஆச்சு வஸந்த்?"

"ஏன் கேக்கறே? உக்கல் பூரா ஒரே வெட்டுப் பழி குத்துப் பழி. போதாக் குறைச்சுப் பாய்லன்கள். ஏதோ பாதாள பைரவிலவரமாதிரி எந்த மூலையை எடுத்தாலும் டேஞ்சர். ஆமா மெட்ராஸ் டேஞ்சர் என்ன ஆச்சு?"

"ப்ச்! அந்த ஆள் வரலையாம். பிளேனை மிஸ் பண்ணிட்டாங்களாம்."

"ஹைஜாக் பண்ணலையா? அப்ப இன்னும் பொண் பாக்க வரலை?"

"இல்லை."

"எனக்கு இன்னும் சான்ஸ் இருக்கு?"

"உனக்குத்தான் சான்ஸ் வஸந்த்!"

வஸந்த் வாயில் இரு விரல்களைப் பின் பக்கமாகச் சொருகிக் கொண்டு "உய்யு

டய்'' என்று அழுத்தமாக விசில் அடித்தான். வார்டே திரும்பிப் பார்த்தது.

''அய்யோ என்ன இது டெண்ட்டுக் கொட்டாய் மாதிரி?''

''இனியா, உக்காந்துக்கோ! ஆஸ்பத்திரியில படுத்துண்டிருக்கேன். என்ன நீ ஒரு இளனி வாங்கிண்டு வராம வந்திருக்கே. அட ஒரு சாத்துக்குடி?''

''அவசரத்தில அலறி' அடிச்சுண்டு ஓடி வந்தேன் வஸந்த்.''

''அப்ப நான் செத்துப் போனா நிச்சயம் அழுவியா நீ?''

''அய்யோ! நிறைய.''

''உண்மைக் காதல்னு இதுதானே இன்னி!''

''ஆமா வஸந்த்.''

''எனக்கு மருந்து வாங்கறதுக்குக் காசில்லேன்னு மோதிரம் என் தாலி எல்லாத்தியும் வித்து எனக்கு பிஸ்மத் மிக்சர் வாங்கிண்டு வருவியா இன்னி?''

''எனக்கு உடம்பு சரியில்லேன்னு நீ எதை விப்பே?''

''நானு? என் வலது கையை! ஹ!'' என்றான் வஸந்த். ''இனியா, ராத்திரி எப்படி சவுகரியம்? இங்கயே தங்கறப்பலதானே? பிரைவேட் நர்ஸிங் ஹோம். அலவ் பண்ணுவா. வேற ஒண்ணும் இல்லே. ஆசாமி பார்க்கறதுக்கு பியர்ஃபுல்லா இருந்தாலும் ஸிம்ப்டம்ஸ் எல்லாம் இன்னும் இருக்கு. ராத்திரி பன்னண்டு மணி போனப்புறம்தான் சரியா நிச்சயமாச் சொல்ல முடியும்னு சொல்லிட்டுப் போயிருக்கார் டாக்டர். இந்த நிலையில என்னைத் தனியா விட்டுட்டுப்போறது எவ்வளவு தூரம் ஸேஃப்புன்னு யோசிச்சுப் பாரு.''

''கணேஷ் இல்லையா?''

''அவர் எங்கயோ வெளில போயிருக்காரு. வரதுக்கு ராத்திரி ஒரு மணியாகும்னு சொன்னார்.''

''ஹாய் இனியா!'' என்று கணேஷ் வந்தான். ''ஏன் பேஸ்த் அடிச்ச மாதிரி இருக்கே வஸந்த்?''

''கணேஷ்! வஸந்துக்கு நிஜமாகவே சீரியஸா இருக்கா? ராத்திரி பன்னண்டு மணி கெடு வெச்சிருக்காரா டாக்டர்?''

''இல்லியே?''

''பாஸ் நீங்க இல்லே அப்ப!''

''ஒண்ணுமில்லே. குத்துக் கல்லாட்டமா இருக்கான்!'' வஸந்த் தன்னை முறைப்பதைக் கவனிக்காமல் ''வஸந்த்! ஒரு முக்கியமான விஷயம் கண்டு பிடிச்சேன். நீ அந்த சதாசிவத்தின் வீட்டுப் பின்கட்டில கிடந்ததுன்னு சின்னதாய் ஒரு வஸ்துவைப் பொறுக்கிக்கொண்டு வந்த பாரு? அதை கெமிக்கல் அனலிஸிஸ் பண்ணி அது என்னதுன்னு கண்டுபிடிக்க வெச்சுட்டேன். ஸம்திங் வெரி இண்ட்ரஸ்டிங்'' என்றான். (தொடரும்)



கண்ணீர்ப் பூக்கள்

▫ மு.மேத்தாவின் அழகான தலைப்பை 'இதயம்' காரர்களுக்குப் பின் இவர்களும் உபயோகித்துள்ளார்கள். சிவசங்கரியின் 'ஆயுள் தண்டனை' என்ற நாவல் கண்ணீர்ப் பூக்களாகியிருக்கிறது. இதுபோன்று நாவல்களை நிறையப் படமாக்கினால் செத்துக் கொண்டிருக்கும் தமிழ்ப் படம் மெல்லத் தலைதூக்கும். மனைவியை இழந்த கணவன் குழந்தைக்காக இரண்டாம் திருமணம் புரிகிறான். அவளோ சந்தர்ப்பத்தால் விபப்பு விளக்கைத் தற்காலிகமாக எரிய விட்டவள். என்னதான் பெரிய மனத்துடன் இருந்தும் நிஜங்களை எதிர்கொள்ள முடியாத கணவன் வார்த்தைகளை விரயம் செய்ய அவள் குழந்தையுடன் ஓடிவிடுகிறாள். குழந்தையையும் தவறான வழியில் வளர்த்துக் காட்டுவதாக மிரட்டுகிறாள். எல்லாம் பேச்சுக்காகத்தான். ஆனால் கணவன் படும் அவஸ்தை அவனுக்கு ஆயுள் தண்டனை. விஜயனும் ஸ்ரீப்ரியாவும் பொருத்தம். உணர்ந்த நடிப்பு. விஜயனின் தீர்க்கமான சந்தேகங்கள், பார்க்கும் குழந்தைகளைத் தன் குழந்தையாக நினைப்பது உருக்கம். பரிதாபத்தைச் சம்பாதிக்கும் ஸ்ரீப்ரியா. ரூபா கௌரவ வேடத்தில் தலைகாட்டுவதால் தப்பிக்கிறோம். மனோரமா அனுமந்துவின் ஒரு நாள் அக்கவுண்டண்ட் கூத்து தொடர்ந்திருக்கலாம். பல வருடங்களை விழுங்கும் பாடல் சோதிக்கிறது நிறைய இடங்களில் குறிப்பாகக் குழந்தை பேசும் இடங்களில் ஒட்டாத ஒலிப்பதிவு. ரங்காவின் சிறப்பான கேமரா-உழைப்பு. எ ஃபிலிம் பை ராஜசேகர். படம் நமக்கு ஆயுள் தண்டனையாக இல்லை. பாராட்டு என்னமோ சிவசங்கரிக்குத்தான்.

—நளினி சாஸ்திரி

வாழையும், தென்னம்பாளையும், கமுகும் வழியும் கல்யாண மண்டப வாசல்!

வரவேற்புக்காக — கையில் பன்னீர் செம்போடு நின்றிருந்த அந்த நடுத்தர வயது மனிதர் தேவு வருவதைப் பார்த்ததும் அவன் மேல் பன்னீர் தெளிப்பதா வேண்டாமா என்று ஒரு விநாடி தயங்கிய பிறகு, சட்டென்று முடிவுக்கு வந்தவராய், பன்னீர் செம்பைக் கீழே தாழ்த்திக் கொண்டார். சந்தனப் பேலாவை கையில் வைத்தபடி நின்றிருந்த அந்தப் பெண்ணும் தேவுவைப் பார்த்துவிட்டு முகம் சுளித்துப் பேலாவை நீட்டாமல் விட்டாள்.

தேவு தனக்குள் சிரித்தபடியே அவர்களைக் கடந்து மண்டபத்துக்குள் நுழைய ஆரம்பித்தான்.

பன்னீர் செம்பு கிசுகிசுத்தது. ''அவன் வந்த ஜோரைப் பார்த்திங்களா ராமசாமி?''

''உம்...உம்... பார்த்தேன், பார்த்தேன். வெக்கம், மானம், சூடு, சொரணை ஒண்ணுமே இல்லாத ஜென்மம் அது. எல்லாத்தையும் விட்டு விட்டு நெஞ்சை நிமிர்த்திக்கிட்டு வர்றான்! கல்யாணத்துக்கு வரச் சொல்லி இவனை யாரு வெத்திலே பாக்கு வெச்சு அழைச்சா?''

''அப்படியே அழைச்சிருந்தாலும் இவன் வந்துடறதா? கல்யாணப் பெண்ணுக்கு இவன் தாய் மாமன் என்கிற உறவுல ஏதோ ஒப்புக்கு ஒத்தை வெத்திலையையும், சொத்தைப் பாக்கையும் வெச்சு வாய் வலிக்காம அழைச்சிருப்பாங்க... நம்மளையும் மதிச்சு அழைச்சிருக்காங்கங்கற மமதையிலே இவனும் வந்துட்டான்...''

இவன் எதற்காக?

ராஜேஷ்குமார்

தேவுவின் காதுகளில் ஒரு அட்சரம் பிசகாமல் வார்த்தைகள் துல்லியமாய் விழுந்தன. விடுவிடுவென்று உள்ளே போனான்.

கல்யாண மண்டபத்தின் சரி பாதியை ஆண்கள் அடைத்துக் கொண்டு அமர்ந்திருக்க — மீதிப் பகுதியைப் பெண்கள் ஆக்கிரமித்திருக்க — நடுவில் மணவறை பூக்குவியலாய்த் தெரிந்தது.

அவன் உள்ளே நுழைந்து உட்கார இடம் தேடினான்.

தேவுவைப் பார்த்ததும் பெண்கள் பகுதி கிசுகிசுப்பான குரல்களில் சளசளக்க ஆரம்பித்தன. அத்தனை ஜோடி விழிகளும் அவன் மீதே மொய்த்தன.

தேவு அந்தச் சலசலப்பைப் பொருட்படுத்தாதவனாய் — ஆண்கள் பகுதியில் காலியாய் இருந்த இடத்தில் உட்கார்ந்தான். அவன் உட்கார்ந்த அடுத்த விநாடியே—

அவனுக்கு அருகில் உட்கார்ந்திருந்த ஒருவன் அவசர அவசரமாய் எழுந்து வெளியே போய் நின்று கொண்டான். அவனைத் தொடர்ந்த தேவுக்கு முன்புறமும், பின்புறமும், பக்கவாட்டிலும் அமர்ந்திருந்தவர்கள் திடீரென்று காணாமல் போனார்கள்.

கூட்டம் நெரியும் அவ்வளவு பெரிய கல்யாண மண்டபத்தில் அவன் உட்கார்ந்திருந்த இடம் மட்டும் ஒரு தீவு மாதிரி தெரிந்தது.

''இப்படியெல்லாம் சபையிலே வந்து உட்கார ஒரு தில்லு வேணும்...''

''பாரேன்...மனசிலே கொஞ்சம் கூட உறுத்தலே இல்லாமே 'ஜம்'ன்னு உட்கார்ந்திருக்கான்...'' தேவுவின் காதுகளில் எல்லா வார்த்தைகளும் பட்டு, மனசுக்குள் போகாமல் வெளியே நின்றன.

''பெண்ணையும் மாப்பிள்ளையையும் மணையில உட்காரச் சொல்லுங்க... உம்... நாழியாறது...'' — மணவறையில் இருந்த அய்யர் சத்தம் போட்டார்.

பெண்ணை அழைத்து வருவதற்காக எழுந்த தேவுவின் அக்கா — மகாலட்சுமி — தேவுவைப் பார்த்ததும் சட்டென்று ஒரு விநாடி முகம் மாறினாள். பெண்ணை அழைத்து வருவதற்காகத் தன் நாத்தனாரை அனுப்பிவிட்டு அவனை நெருங்கினாள். அவனுக்கருகே குனிந்து கிசுகிசுத்தாள்.

''ஏண்டா தேவு? முகூர்த்தம் முடிஞ்ச பின்னாடி வந்திருக்கலாமே? இந்தக் கூட்டத்தில நீ அவசியம் வந்திருக்கணுமா?''

அக்கா மகாலட்சுமியின் வார்த்தைகள் மனசுக்குள் சாட்டை அடியாய்ச் சுரீரென்று பட்டாலும் தேவு அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் புன்னகைத்தான். ''அக்கா! எனக்கு நீ வெத்திலே பாக்கு வெச்சுக் கல்யாணத்துக்கு 'வா'ன்னு அழைச்சப்ப இந்த வார்த்தையை நீ சொல்லலியே...? சொல்லியிருந்தா முகூர்த்தம் கழிஞ்சு மண்டபம் காலியா இருக்கிற நேரத்தில வந்திருப்பேன்.



ம்... பரவாயில்லே. வந்தது வந்துட்டேன். ஒரு மூணும் மனுஷனு இருந்து – ருக்மிணியோட கழுத்திலே தாலி ஏர்றதைப் பார்த்துட்டு உடனே புறப்பட்டுப் போயிடறேன்.''

மகாலட்சுமி மனக் கசப்போடு எழுந்து மணவறைப் பக்கம் போனாள்.

கல்யாணப் பெண்ணும் மாப்பிள்ளையும் மணவறையில் வந்து அமர்ந்தாயிற்று.

மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்த அய்யர் அப்போதுதான் அதைக் கவனித்தார். புஷ்பமும் பழமும் இருந்த தட்டில் இன்னமும் திருமாங்கல்யம் வைக்கப்படவில்லையே?

மஞ்சள் நீரில் நனைக்கப்பட்ட 'மொட மொட'வென்ற வேஷ்டியிலும் மேல் துண்டிலும் மணவறைப் பக்கமாக நின்றிருந்த மகாலட்சுமியின் கணவர் நாகரத்தினத்தை அழைத்தார். சொன்னார்.

''மாங்கல்ய சூத்திரத்தைக் கொண்டு வாங்கோ.''

நாகரத்தினம் மகாலட்சுமியைப் பார்த்தார். அவள் புரிந்து கொண்டு மண்டப அறையில் இருந்த காட்ரேஜ் பீரோவை நோக்கி பட்டுச் சேலை சரசரக்க வேகமாக நடந்தாள். நேற்றைக்குச் சாயந்திரமே சம்பந்தி அம்மாள் வெற்றிலை பாக்கு புஷ்பத்தோடு மாங்கல்ய சூத்திரத்தை மகாலட்சுமியிடம் கொடுத்துப் பீரோவில் பத்திரமாய் வைக்கச் சொல்லியிருந்தாள்.

அரக்கப் பரக்க அறைக்குள் ஓடி பீரோவை நெருங்கிய மகாலட்சுமிக்கு அப்போதுதான் உறைத்தது. சாவி அவள் கணவரிடம் அல்லவா இருக்கிறது?

திரும்பவும் கணவரிடம் வந்தாள். ''என்னங்க... பீரோ சாவி குடுங்க...''

நாகரத்தினம் திரும்பினார். புருவங்களை உயரக் கேட்டார்.

''பீரோ சாவியா? எங்கிட்ட ஏது? ருக்மணிக்கு நகை எடுக்கணும்னு சொல்லிக் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதானே நீ சாவியை எங்கிட்டயிருந்து வாங்கிண்டே!''

மகாலட்சுமிக்குத் திக்கென்றது.

'ஆமாம்... அவர் சொல்றது வாஸ்தவம்தான். நான்தான் அப்பவே சாவியை வாங்கிட்டேனே!' – படபடப்பாய் வந்தது அவளுக்கு. சாவியைச் செருகி வைத்த இடுப்பைத் தொட்டுப் பார்த்தாள். அது வெறிச்சென்றிருந்தது. இந்தக் கூட்டத்தில் அங்குமிங்கும் அல்லாடியதில் அந்தச் சாவி எங்கே விழுந்ததோ?

''என்னடி முழிக்கிறே?'' – நாகரத்தினத்துக்குக் கோபம் வந்தால் கண்மண் தெரியாமல் வார்த்தைகள் வரும்.

''சாவியைக் காணோங்க...'' – வியர்த்த முகத்தோடு குழறினாள் மகாலட்சுமி.

''என்னடிஉளர்றே?சாவியைக் காணோமா? இடுப்பிலே செருகி வச்சிருந்த சாவிக்கு றெக்கை முளைச்சுப் பறந்து போயிடுச்சா?''– அவளை நெருங்கினார் நாகரத்தினம்.

அய்யர் கோபமாய்க் குறுக்கே புகுந்தார். ''என்ன 'குசுகுசு'ன்னு பேசிட்டு நேரத்தைக் கடத்தறேள்? மாங்கல்ய சூத்திரத்தைக் கொண்டாரச் சொல்லி எத்தனை நாழி ஆயி

வந்தான்?



டுத்து? சட்டுப் புட்டுனு போய்க் கொண்டு வராமே என்னத்தைப் பேசிட்டு நிக்கறேள்? இன்னிக்கு திங்கட் கிழமையாக்கும். ராகு காலம் ஏழரை மணிக்கு வந்துடுமே! அப்பவா தாலியைக் கட்டுவேன்?''

நாகரத்தினம் அய்யரிடம் குனிந்தார். ''இதோ சாமி! ரெண்டு நிமிஷத்திலே கொண்டாந்துடறேன்...'' – என்றவர் மனைவியின் பக்கமாய்த் திரும்பி ''ரூமுக்குப் போ. நான் வர்றேன்'' என்றார்.

மகாலட்சுமிக்கு அடிவயிற்றைப் பிசைய ஆரம்பித்தது. 'அம்மா! தாயே! சாமுண்டேஸ்வரி! முகூர்த்த நேரத்திலே இதென்னம்மா சோதனை!' மனசுக்குள் புலம்பினாள்.

அறைக்குள் நுழைந்த நாகரத்தினம் மகாலட்சுமியைப் பார்த்து உறுமினார். ''நல்லாத் தேடிப் பாருடி!... சேலையை அவுத்து உதறிப் பாரு!''

''பார்த்துட்டேங்க... கூட்டத்திலே எங்கியோ விழுந்துடிச்சு...''

நாகரத்தினம் பற்களைக் கடித்தார். ''உன்னை யெல்லாம்....'' – கோபத்தில் வார்த்தைகள் வராமல் தவித்தார். ''சே! மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்குத்தெரிஞ்சா எவ்வளவு கேவலம்? சாஸ்திர சம்பிரதாயங்களை அதிகமாப் பார்க்கிற அவங்களுக்கு இந்த விஷயம் தெரிஞ்சா இதையே ஒரு

அபசகுனமா நினைப்பாங்க! பின்னாடி ஏதாச்சும் ஒண்ணு விரும்பக் கூடாத வகையில நடந்தா அதுக்கு இந்தச் சம்பவத்தை எடுத்துக்காட்டிப் பேசுவாங்க...'' — அவர் பேசப் பேச...

மகாலட்சுமிக்குக் கண்களில் நீர் முட்டிக் கொண்டு நின்றது.

''இப்ப என்னங்க செய்யலாம்? அதே மாதிரியான சாவி வேற யார் கிட்டயாவது இருந்தாக் கேட்டுப் பார்க்கலாமா?''

''மண்டபம் பூரா விஷயம் பரவிடும்''— அவர் பயந்தார்.

கைகளைப் பிசைந்தார் நாகரத்தினம். ஸ்டீல் பீரோவின் கைப்பிடியை மேலும் கீழும் முறுக்கிப் பார்த்தார். ஹூம்.. அது அசைய மறுத்தது.

''அக்கா!''

குரல் கேட்டுத் திரும்பினார்கள் இருவரும்.

தேவு நின்றிருந்தான்.

மெல்லப் புன்னகைத்தபடியே பீரோவை நெருங்கினான். ''மச்சான்... நீங்க இப்படி வாங்க!''

நாகரத்தினம் நகர்ந்தார்.

தேவு பீரோவை நெருங்கி அதன் கைப்பிடியைப் பற்றிக் கொண்டு வலது கையை உயர்த்திக் குறுக்காக வைத்தபடி 'பட்' டென்று ஒரு வெட்டு. கைப்பிடியைத் திருகி இழுத்தான்.

பீரோ 'ஆ'வென்று பிளந்துகொண்டது.

பீரோவின் கீழ்த் தட்டில் மாங்கல்யம் மின்ன — நாகரத்தினம் முகமெல்லாம் மலர பாய்ந்து எடுத்துக் கொண்டார். தேவுவை ஒரு நன்றிப் பார்வையால் குளிப்பாட்டிக் கொண்டே அய்யரிடம் ஓடினார்.

''தேவு...! தேவு...!'' — மகாலட்சுமிக்குத் தொண்டையை அடைத்தது. பேச முடியாமல் அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டாள். தேவு கைகளை உருவிக்கொண்டே சொன்னான். ''அக்கா! நீ நம்பினா நம்பு... நம்பாட்டிப் போ... இந்த ரெண்டு வருஷத்தில இன்னிக்குத்தான் ஒரு பீரோவோட லாக்கரை உடைச்சிருக்கேன். சின்ன வயசுல சேரக் கூடாதவங்க கூடச் சேர்ந்து பூட்டை உடைச்சுத் திருடற திருட்டுத் தொழிலைக் கத்துக்கிட்டேன். ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி ஜெயில்லேயிருந்து வந்ததுமே அம்மன் கோயில்ல கற்பூரத்தை ஏத்தி இனிமே இந்தத் திருட்டுத் தொழிலைச் செய்ய மாட்டேன்னு சத்தியம் செஞ்சேன். செஞ்ச சத்தியம் பிரகாரம் இன்னிக்கு வரைக்கும் நடந்துக்கிட்டு வர்றேன். அந்தத் தெய்வம் கூட என்னை மன்னிச்சிடுச்சு.. ஆனா இந்த ஜனங்க என்னிக்கும் என்னை மன்னிக்க மாட்டாங்க போலிருக்கு! எனக்குப் பன்னீர் தெளிக்க ஒரு தயக்கம்... சந்தனம் கொடுக்க ஒரு தயக்கம்... அவங்களை விடு! உன்னை எடுத்துக்க... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீ என்னக்கா சொன்னே? முகூர்த்தம் கழிஞ்சு வந்திருக்கக் கூடாதுன்னு கேட்டே!... ஆனா இப்ப இந்த நிமிஷம் இங்கே... நான் இல்லாம இருநதிருந்தா முகூர்த்தமே நடந்திருக்காதே...!''

குரல் உடையப் பேசிக் கொண்டே போன தேவு சட்டென்று பீரிட்ட கண்ணீரையும் ஏக்கத்தையும் அடக்க முடியாமல் சுவரில் முகம் புதைத்து விசும்ப ஆரம்பித்தான்.

அவனைச் சமாதானப்படுத்தும் வழி தெரியாமல் திகைத்தாள் மகாலட்சுமி.

கருணையே உன் விலை என்ன?

● கல்கத்தா. 3—4—81. இந்திரா காங்கிரஸ் நடத்திய பங்களா பந்த். அன்று வெளியே கிளம்பிவிட்டேன். அதுவும் தனியாக அல்ல. ஏழுவயதான என் அண்ணன் குழந்தையுடன். போகும் போது ஒன்றும் இல்லை. நகரம் அமைதியாகவே இருந்தது. வெளியே சென்று வேலையை முடித்துக் கொண்டு திரும்பும் நேரத்துக்குள் திடீரென்று கிளர்ச்சி மூண்டு கொஞ்சம் கொஞ்சமாக வலுக்க ஆரம்பித்து விட்டது. மிரண்டு போன நான் சட்டென்று ஒரு ரிக்ஷாவை நிறுத்தி ஏறி அமர்ந்து என் இருப்பிடத்தைக் கூறி அவன் கேட்ட கூலிக்கு வாய் பேசாது ஒப்புக்கொண்டேன். வழியெல்லாம் ஒரே கலவரம். கல்லடி அடிதடி ரகளை பெருகி விட்டது. குழந்தை பயத்தில் என்னை இறுக அணைத்து, என்னுடன் ஒட்டிக்கொண்டு விட்டான். இந்நிலையில், திடீரென்று எங்கிருந்தோ விர்ரென ஒரு கல் பறந்து வந்தது. நானும் குழந்தையும் தப்பித்துக் கொண்டோம். ஆனால் பரிதாபம். ரிக்ஷாக்காரரின் நெற்றியை அந்தக் கல் நன்கு பதம் பார்த்து விட்டது. நெற்றியிலிருந்து ரத்தம் பெருகிவழிய ஆரம்பித்தது. பதறிப்போன நான் வண்டியை நிறுத்தும்படி எவ்வளவோ சொல்லியும் அவன் நிறுத்தாமல் ஓட்டிக்கொண்டு போனான். வீடு வந்து சேரும்வரை அவன் வண்டியைநிறுத்தவேயில்லை. காயத்திலிருந்து பெருகிய உதிரத்தால் அவன் போட்டிருந்த மேல் துண்டெல்லாம் நனைந்துவிட்டிருந்தது. பச்சாதாபத்தாலும் நன்றி உணர்வினாலும் என் நெஞ்சமெல்லாம் கரைய, பேசிய கூலிக்கு மேல் ஓர் ஐந்து ரூபாய் நோட்டை அவனிடம் நீட்டியபோது ''வேண்டாம் சார். உழைப்புக் கூலி தந்தால் போதும். மனிதாபிமானத்துக்குக் கூலி வேண்டாம். என் கடமையை நான் செய்தேன். உங்களையும் இந்தக் குழந்தையையும் பத்திரமாக வீடு சேர்த்த மகிழ்ச்சி ஒன்றே எனக்குப் போதும்.''எனக்கூறி மெல்ல ரிக்ஷாவை ஓட்டியவாறு சென்றுவிட்டான்.



ஒரு பக்கம் கலகக்காரர்களும், வெறியர்களும் நிறைந்திருந்தாலும் அவர்களுக்கிடையில் இப்படியும் சில நல்லவர்கள் கல்கத்தாவில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

—கல்கத்தா 'மிக்கி'

இரண்டே வருடங்களில் விற்பனையில் முதல் இடம்

JOHNSON®

மிக்ஸர் கிரைண்டர்

25 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமும், இந்தியாவிலே சமையலறைச் சாதனங்களில் ஏராளமான வகைகளும் கொண்ட ஜான்சனின் சீரிய படைப்பு ஜான்சன் மிக்ஸர் — கிரைண்டர். எங்கெங்கும் அறிமுகப் படுத்தினாலும் ஐயமின்றி தலை சிறந்ததென இரண்டே வருடங்களில் பீடு நடை போடுகிறது.

ஏன் எனக் கேட்பின் :

இலவசம்! தனி எவர்சில்வர் கிண்ணம்! உலர்ந்த அரவைக்கென தனியான எவர்சில்வர் கிண்ணமிருப்பதால் மசாலாக்களின் மணமும், ருசியும் மில்க் ஷேக்குகளில கலக்காமல் பாதுகாப்பு அளிக்கிறது.



அதிக சுகாதாரம் பாகங்களை எளிதாக கழட்டும்படி தயாரிக்கப் பட்டிருப்பதால் நீங்கள் துப்புரவாகக் கழுவ முடிகிறது. உணவுப் பண்டங்களின் துகள்கள் உள்ளே நின்று விடும் சந்தர்ப்பம் இல்லை.

முழுமையான பாதுகாப்பு. பிளேட் பாகங்கள் இரு கிண்ணங்களிலும் உறுதியாக இணைக்கப் பட்டிருப்பதால் இயக்கத் தில் பிளேட் பறந்து விடாமல் பாதுகாப்பு அளிக்கிறது.





கன ரக ஓட்டம் அதிக உறுதியான 450 வாட் மோட்டார் நமது இந்திய சமையலுக்கென்றே சிறப்பாக அமைக்கப் பட்டிருக்கிறது.45 நிமிடங்கள் நிறுத்தாமல், தடையின்று ஓட்டலாம்.

மற்ற சிறப்பு அம்சங்கள்:


- மோட்டார் குளிர்ச்சியாக இருப்பதற்கென தனியான காற்றோட்டம்
- சீரிய கலவை மற்றும் அரவைக்கென மேம்படுத்தப்பட்ட பிளேட் அமைப்பு
- ஒரு வேகத்திலிருந்து மற்றொரு வேகத்திற்கு செம்மையாக மாற்ற இஞ்சர் ஸ்விட்ச்
- ஒரு வருடத்திற்கு உத்திரவாதம் ஜான்சன்



BE-8301A

JOHNSON®

இயக்கத்திலும், ஆற்றலிலும் இணையிலாச் சிறப்பு கொண்டது





ரசிகமணி ரசித்த மணிகள்

மீ.ப.சோமு

முதலாவது ரசிக அனுபவம்!

டி.கே. சிதம்பரநாத முதலியார் என்றால் தமிழ் நாட்டின் இலக்கிய அரசர்களிலே அவர் ஒரு வேந்தர்! வேந்தர் என்று அழைப்பதற்குரிய அத்தனை இலக்கணங்களும் அவரிடம் குடிகொண்டிருந்தன.

டி.கே.சி. என்ற அந்த மூன்று எழுத்துக்களுக்குள்ளே அப்படி என்ன தத்துவம் பொதிந்து கிடக்கிறது?

எத்தனையோ தமிழறிஞர்கள் செங்கோல் ஓச்சிய மாநிலமாகும் நமது தமிழகம்! அந்த இலக்கிய மன்னர்களுக்கும் இந்த இலக்கிய வேந்தருக்கும் அப்படி என்ன வித்தியாசம்?

சமுதாய வாழ்வில் எத்தனை ஆயிரம் ஏற்றத் தாழ்வுகளை வைத்துக்கொண்டிருக்கிறோம் நாம்! சூரபதுமன் தலையைப் போல ஒரு வகையான ஜாதி வித்தியாசத்தின் தலையைக் கிள்ளினால் வேறொரு புதிய ஜாதி வித்தியாசம் தலை தூக்குகிறது! ஒரு இன வேற்றுமை மறைந்தால் உடனே இன்னொரு இன வேற்றுமை முளைக்கிறது! இப்படிப்பட்ட சூரபதுமச் சமுதாயத்தில் எல்லா வேற்றுமைகளுக்குள்ளும் தமிழ் என்ற ஒரு பெரிய ஒற்றுமையை நிலைநாட்டினவர் டி.கே. சி.

பல துறைகளில் பல மாறுபட்ட கொள்கைகளோடு நவக்கிரகங்களைப் போல, ஒருவர் முகத்தை இன்னொருவர் பாராமல் குந்திக் கொண்டிருக்கும் பல்வேறு தமிழ்ப் பிரமுகர்கள் எல்லாம் டி.கே.சி. சந்நிதானத்தில் கூடிக் குலாவிச் சிரித்து மகிழ்ந்து உறவாடிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன்! ஒரு தனிமனித ஆற்றல், இப்படி ஒரு அதிசயத்தை நிகழ்த்தியது என்றால் அது எப்பேர்ப்பட்ட அமர சாதனை என்பதை எண்ணிப் பாருங்கள்!

ஜாதி, சமய, மொழி எல்லைகளை யெல்லாம் தாண்டி, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் வயது வித்தியாசங்களையும் கூடக் கடந்து அனைவரும் டி.கே.சி.யின் இலக்கிய அரங்கமாகிய வட்டத் தொட்டி என்ற ரசிக மணியரங்கிலே சரிநிகர் சமானமாக உட்கார்ந்து, தமிழ்க் கவிதையிலும், தமிழ் மொழியிலும், தமிழ்நாட்டுக் கலைகளிலும், தமிழர் பண்பாட்டிலும் ஒரு காதல் வெறியே கொள்ளும்படி மனித இதயங்களிலே ஒரு ரசவாதம் செய்த அற்புத மனிதர் ரசிகமணி!

ராஜாஜி ஒரு சமயம் எழுதினார்:

''தமிழ் என்றால் என்ன, கவிதை என்றால் என்ன என்பதை எனக்கு ஓரளவு புகட்டிய ஆசிரியரிடத்தில் எனக்கு வரம்பற்ற அன்பும் பட்சபாதமும் இருக்கத்தான் செய்யும். ஆகையால் நான் அவருக்காகப் பரிந்து பேசினால் அதற்கு ஒருவேளை மதிப்பு இராது. ஆயினும் என் பேச்சல்ல, நானே ஒரு அத்தாட்சியாவேன், டி.கே.சி.யின் தமிழ்ப் பணிக்கும் பெருமைக்கும்! பேச்சை விடப் பொருட்சான்றே வலியதாகும். என்னைப் போன்ற ஒருவனையும் கூடத் தமிழாசை கொள்ளச் செய்தவர் டி.கே.சி.தான்! இதை இப்போது பலர் அறியச் சொல்கிறேன். உபசாரமல்ல, உண்மை!

என்னைத் தள்ளுங்கள். தமிழ் நாட்டில் தமிழ்ப் பணிக்கு நல்ல வீரச் சேனை சேருமாறு

✠ டி. கே. சி. சாய்ந்த நிலையிலிருந்து நிமிர்ந்து வந்து சிரிக்க வேண்டுமென்றால் விஷயம் ரொம்ப சுவாரஸ்யமானதாகத்தான் இருக்க வேண்டும் - அவர் எதிரே மீ. ப. சோமு, நீதிபதி மகராஜன்- 1949ல் திருக்குற்றாலத்தில் எடுத்த படம். ✠ தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்.

இக்காலத்தில் உண்டாக்கியவர் டி. கே. சி. என்றே சொல்லுவேன். பலர் பல அரிய பணிகள் செய்திருக்கிறார்கள். செய்தும் வருகிறார்கள். ஆனால் டி.கே.சி.யின் தமிழ்ப் பணி ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. இதை வேறு யாரும் செய்ததில்லை!''

இது ராஜாஜியின் குறிப்பு. ஒவ்வொரு சொல்லையும் அடைமொழியையும் தங்கத்தை நிறுக்கிற நுட்பமான தராசில் வைத்து நிறுத்துப் பேசுகிறவர் ராஜாஜி! அவருடைய பொன் மொழிகளைத்தான் மேலே கொடுத்திருக்கிறேன்.

தமிழுக்கு நல்ல வீரச் சேனையை உருவாக்கியவர் டி.கே.சி. என்றால் எப்படி?

நெல்லை வண்ணார் பேட்டையில் அவர் இருந்தபோதிலும் சரி, சென்னையிலும் சரி, திருக்குற்றாலத்திலும் சரி, அவர் எங்கு போனாலும், இருந்தாலும், அங்கே ஒரு நல்ல வீரச் சேனை அவரைச் சூழ்ந்து வட்டமிட்டுக் கொண்டிருக்கும்! அதுதான் வட்டத் தொட்டி! பத்திரிகை அதிபர்கள், கவிஞர்கள், பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், அரசியல் தலைவர்கள், சங்கீதக் கலைஞர்கள், வள்ளல்கள், அமைச்சர்கள், நீதிபதிகள், ஆளுநர்கள் என்று அந்த வீரச் சேனையில் மணி மணியான வீரர்களைப் பார்க்கலாம்!

டி.கே.சி. ஒரு பெரிய செல்வச் சீமான். செவிக்கும் நாவுக்குமாகச் சேர்ந்து ஒரே விருந்து மயமாக இருக்கும்' அவருடைய வீடு. அங்கே ஒருமித்துக் கூடுகிறவர்கள் எல்லாம் வெளியே தங்களுக்குள் மல்யுத்தம் செய்கிறவர்கள்! ஆனால் வட்டத் தொட்டிக்குள் ஒரே ஆனந்த ஒருமைப்பாடு! ராஜாஜி பெரியார் ஈ.வே. ரா., காமராஜர், பி.டி. ராஜன், ஆர். கே. சண்முகம் செட்டியார், குமாரசுவாமி ராஜா, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் இப்படிப் பல தலைவர்கள்; கல்கி, வ.ரா, டி. எஸ். சொக்கலிங்கம், பி.ஸ்ரீ., ஹிந்து சீனிவாசன் இப்படிப் பல பத்திரிகையாளர்கள்; பண்டிதமணி, நாவலர் பாரதி. வி. எஸ். சீனிவாச சாஸ்திரி, வையாபுரிப் பிள்ளை, ரா. பி. சேதுப்பிள்ளை இப்படிப் பல்கலைக் கழகச் சிங்கங்கள்; பி. வி. ராஜமன்னார், ஜஸ்டிஸ் என். சோமசுந்தரம், டி. எம். கிருஷ்ணசுவாமி அய்யர், வி. கிருஷ்ணசுவாமி அய்யர் இப்படி நீதிபதிகள்; செம்மங்குடி, பாலசரஸ்வதி, ஜயம்மாள், எம்.எஸ். போன்ற இசை விற்பன்னர்கள்; இவர்களுக்கு நடுவிலே நானும் என்னைச் சேர்ந்த பள்ளி மாணவர்கள் சிலரும்!

ஜஸ்டிஸ் கட்சி, அதன் பக்கத்தில் காங்கிரஸ், அதன் பக்கத்தில் திராவிடக் கழகம், அதன் அருகில் அதன் பல கிளைகள் என்று ஒரே வீர ஐக்கிய சேனைச் சம்மேளனமாக இருக்கும் அது! இன்று நாள்தோறும் புதிது புதிதாக முளைத்து அரும்பி வருகிற இத்தனை கட்சிகளும் அன்று இருந்திருந்தால் அத்தனையும் வட்டத் தொட்டியிலே கூடியிருக்கும்! எல்லாருக்கும் ஒரே குறிக்கோள். தமிழ், தமிழ், தமிழ்! தமிழ் என்ற ஒருமைப்பாடு ஜாதிகளையும் ஏற்றத் தாழ்வுகளையும்தாண்டிச் சென்று மயிலாப்பூரையும், நொச்சிக்குப்பத்தையும் இணைக்கிற ஒரு சாலையாக வட்டத் தொட்டியிலே போய்க் கூடியது!



திருநெல்வேலியில் ஒரு வழக்கறிஞராகப் பதிவு செய்துகொண்ட சிதம்பரநாத முதலியார் இப்படி ஒரு ரசிகமணியாக எப்படி மாறினார்? தமிழ் இலக்கிய இலக்கணங்களை எவ்வாறு கற்றார்?

ரசிகமணிக்குக் கலியாணமான புதிதில் ஒரு ரசமான அனுபவம் ஏற்பட்டது. அதுதான் அவருடைய முதலாவது இலக்கிய அனுபவம் என்று சொல்ல வேண்டும். ஆங்கில இலக்கியங்களைக் கருத்தூன்றிப் படிப்பதற்கும், தமிழ்க் கலைகளை இனங்கண்டுகொள்வதற்கும் டி.கே.சி.க்கு ஓர் ஆரம்ப இன்பமாக அமைந்தது அது!

விளாத்திகுளம் என்று நெல்லை மாவட்டத்தில் ஒரு சிற்றூர். அங்கே டி.கே.சி.யின் அம்மான் (மாமனார்) உதவி தாசில்தாராக இருந்தார். அந்த மாமனார் புதிதாகக் கலியாணமான மாப்பிள்ளையையும் பெண்ணையும் தமது இல்லத்துக்கு அழைத்து. ஒரு மாதம் தங்கியிருக்கச் செய்து, பெரிய மாப்பிள்ளை மரியாதைகள் எல்லாம் புரிந்தார். அந்தப் புது மாப்பிள்ளை அனுபவத்தை ஒரு சமயம் டி.கே.சி. ஒரு கடிதத்தில் நினைவுகூர்ந்தார். என் நண்பர் பாஸ்கரத் தொண்டைமான், டி. கே.சி.க்கு மிக மிக நெருங்கிய சீடர், அதே விளாத்திகுளத்தில் அதே உதவித் தாசில்தாராக நியமனம் பெற்றுச் சென்ற போது ரசிகமணி விளாத்திகுளத்துக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் ஒரு பகுதியைப் பாருங்கள்:

''விளாத்திகுளம் ஒரு அந்தமான் தீவு என்று உத்தியோகஸ்தர்கள் சொல்வதுண்டு. ஆனால் எனக்கு அந்த ஊரினிடத்தில் ஒரு பிரியம்: எனக்குக் கலியாணமான 1908ம் வருஷம் ஒரு மாச காலம் பலவிதமான உபசாரங்களுக்கெல்லாம் உள்ளாகி வசித்த இடம் அது! என்னுடைய அம்மான், தாங்கள் பார்க்கும் டிப்டி தாசில்தார் வேலையை அப்போது பார்த்து வந்தார்கள். ஏதோ கிடையாத மாப்பிள்ளை கிடைத்துவிட்டது போலஎண்ணி இல்லாத உபசாரம் எல்லாம் செய்து புரட்டி எடுத்துவிட்டார்கள் என்னை! அதை எப்படி மறக்க முடியும்?

மேலும், மாப்பிள்ளை ஏதோ தீவாந்திரத்துக்குள் அகப்பட்டுவிட்டதாக எண்ண ஆரம்பித்துவிடக்கூடாது என்று எண்ணி, அங்குள்ள

புஸ்தகசாலையை அநேகமாக என் வசமே ஒப்புவித்துவிட்டார்கள் என்று சொல்லலாம். சாப்பிடுகிற நேரம் போகக் காலைஎட்டு மணி முதல் சாயங்காலம் காப்பி சாப்பிடுகிற நாலரை மணி வரை, புஸ்தகசாலையிலே இருந்துகொண்டு ஆங்கில ஆசிரியர்கள் தமிழ் ஆசிரியர்களோடு அளவளாவிக் கொண்டே இருந்தேன். அவைகளில் பிற்காலத்திலும் நின்று உதவும்படி படித்த புஸ்தகங்கள் இரண்டு. பாஸ்வெல் எழுதிய ஜான்ஸன் வரலாறு ஒன்று. ஆர அமர இரண்டு காண்டங்களையும் படித்தேன். அதிலிருந்து ஆங்கில இலக்கியங்களைக் கருத்தான்றிப் படிக்கும்படியானமுறை எனக்கு ஏற்பட்டது.

மற்றப் புத்தகம் எது என்றால் அது தண்டியலங்காரம். விளாத்திகுளத்தில் 1908ல் தண்டியலங்காரம் இருந்தது என்றால் வியப்பாய் இருக்கும்! தண்டியலங்காரத்தைப் பற்றித் தமிழ் ஆசிரியர்கள் பலவாகப் பேசியதைக் கேட்டதுண்டு. ஆனால் புத்தகத்தைப் பார்த்ததில்லை. அங்கேதான் முதன் முதலாகப் பார்த்தேன். அப்போதே மூலத்தில் விஷயம் இல்லை, உரையிலும் விஷயம் இல்லை என்று தெரிந்து கொண்டேன். ஆகவே மேற்கோள் செய்யுள்களை மட்டும் படித்தேன். தமிழ் இன்னது என்று தெரிய வந்தது! தமிழ் பாஷையின் அழகையும், தூய்மையையும், வளத்தையும் கண்டபோது பாபநாசம் தீர்த்தத்துக்குப் போயிருந்தபோது, தெள்ளத் தெளிந்த தண்ணீர்ப் போக்கும், பாறைகளுக்கிடையே தாவியும் வட்டமிட்டும் வலசாரி இடசாரி பாய்ந்தும் போகிற அழகெல்லாம் மனசுக்கு முன் வந்தது. இருபது முப்பது கவிகளை அப்போதே மனப்பாடம் பண்ணிக் கொண்டேன். தமிழ்க் கவியை உய்த்துணர்வதற்கு இன்றைக்கும்' அவை உபயோகப்படுகின்றன. அடிக்கடி மேற்கோள்ச் செய்யுள்களை வாசித்து அனுபவிப்பதுண்டு.

இப்படி அந்நியோன்யமா இருந்து மகிழலாமே!

(முரட்டுக்காளை 100வது நாள் விழாவில்)



தாதளவி வண்டு
        தடுமாறும் தாமரைகொல்
மாதர் விழி உலவு –
        வாண்முகங்கொல் – யாதென்று
இருபாற் கவருற்று
        இடையூசல் ஆடி
ஒருபாற் படாதென்
        உளம்!

என்ற பாட்டு அவைகளில் ஒன்று. நான் வாசித்து அனுபவித்த புஸ்தகம் புஸ்தகசாலையில் இன்னும் இருக்கும் என்று நம்புகிறேன். பிறகு ஒரு புஸ்தகம் எனக்கு வாங்கினேன். அது எப்படியோ எங்கேயோ போய்விட்டது. தொலைப்பதற்குக் காரணம் நானாகவே இருந்திருக்க வேண்டும். யாருக்காவது ஒன்றிரண்டு செய்யுள்களை வாசித்துக் காட்டியிருப்பேன். அவர் புஸ்தகத்தைப் படிக்க வாங்கிக்கொண்டு போயிருப்பார். அவ்வளவு தான். அதற்குச் சிறகு முளைத்திருக்கும். புஸ்தகம் வேறொன்று விலைக்கு வாங்க வேண்டும் என்று எண்ணியதுண்டு பலதடவை! ஆனால் காலம் கடந்து கொண்டே வந்தது. கடைசியாக இரண்டு மாதத்திற்கு முன், இங்கே வந்திருந்தபோது மனசைத் திடப்படுத்திக்கொண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்குப் போய் ரூ. 1–14–0க்குத் தண்டியலங்காரம் ஒன்றை வாங்கிவிட்டேன்! மேற்கோள் செய்யுள்களை அடிக்கடி படித்துக் கொண்டிருக்கிறேன். படிக்கும்போதெல்லாம் விளாத்திகுளம் புஸ்தகசாலை, தெரு, வேப்பமரம், மணல், வளம் பொருந்திய ஆறு, ஒரு கரையிலிருந்து எதிர்க் கரைக்குப் பெரிய பருத்தி



கைத்தறித்
துணிகள்
கண்காட்சி'81
கோ-ஆப்டெக்ஸ் மைதானம்
பாந்தியன் சாலை
எழும்பூர், சென்னை-600 008
சிறப்புத் தள்ளுபடி
20%
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

ELEGANT

ஏகாதிபத்தியத்தின் எதிரிகள்

வீரசிவாஜியாகத் தன்னைக் கற்பனை செய்து கொண்ட போர்க்களப் புலவன் பாரதி, பாரத பூமியின் பழம் பெருமை களைத் தனது சைனியத்துக்கு எடுத்துரைத்த பின் மேலுஞ் சொல்லுவான்:

''பாரதபூமி பழம்பெரும் பூமி;
நீரதன் புதல்வர்! இந்
நினைவகற்ருதீர்!
பாரத நாடு பார்க்கெல்லாம் திலகம்
நீரதன் புதல்வர் இந்
நினைவகற்ருதீர்!

தன்னுடைய சைனியம் ஆற்ற வேண்டிய கடமையைக் கூறுமிடத்து சிவாஜி சொல்வதையும் கேட்போம்:

''தாய்த்திரு நாட்டைத்
தகர்த்திடும் மிலேச்சரை
மாய்த்திட விரும்பார்
வாழ்வுமோர் வாழ்வுகொல்!
மானமொன் றிலாது
மாற்றலர் தொழும்பராய்
ஊனமுற் றிருக்க
எவன்கொலோ விரும்புவன்?
தாய்பிறன் கைப்படச்
சகிப்பவ ஞகி
நாயென வாழ்வோன்
நமரிலிங் குளனே?''

பாரதியார் சத்ரபதி சிவாஜி தனது சைனியத்துக்குக் கூறிய தாகப் புனைந்த கவிதை முற்றுப் பெறவில்லை. அது தமிழ் மொழியின் துரதிர்ஷ்டம் என்று சொல்லலாம்.

சிவாஜி மொகலாய ஏகாதிபத்தியத்தின் எதிரி! பாரதி ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் பகைவன்! மொத்தத்தில் இருவருமே ஏகாதிபத்தியங்களின் எதிரிகள்! இதுதான் அவர் களிடையே நிலவிய உறவு — உடன்பாடு!

இந்த உறவு — உடன்பாடு காரணமாக வீரசிவாஜியின் வர லாற்று நாடகத்தை விடுதலைப் போராட்ட காலத்திலே தேச பக்தர்கள் நாடெங்கும் நடத்தினர். பாரதியின் பரம பக்த ருன சுப்பிரமணிய சிவா, வீரசிவாஜியின் நாடகத்தை நடத்து வதற்கென்றே நடிகர் குழு ஒன்றைத் தம் கைவசம் வைத் திருந்தார். தாமும் ஒரு பாத்திரத்தை ஏற்று நடித்தார். அந்த நாடகத்திலே பாரதி புனைந்த ''சத்திரபதி சிவாஜி'' கவிதை உரிய இடத்தில் பயன்படுத்தப்பட்டது.

''பாஞ்சாலி சபதம்'' பாடுகிருனே, அதிலேயும் அவ னுக்குப் பாரத மாதாவாகவே பாஞ்சாலி காட்சியளிக்கிருள். துரியோதனனுடைய அரசவையிலே, அவன் தம்பி துச்சா தனன் பாஞ்சாலியின் துகிலை உரிந்த நேரத்திலே அந்த மாதரசி என்ன நிலையில் இருந்தாள் என்பதனைக் கூறும்போது,

''ஆடை குலைவுற்று நிற்கிருள் — அவள்
ஆவென்றழுது துடிக்கிருள் — வெறும்
மாடுநிகர்த்த துச்சாதனன் — அவள்
மைக்குழல் பற்றி இழுக்கிருன் — இந்தப்
பீடையை நோக்கினன் வீமனும் — கரை



⌘ சிவாஜி நாடகம் நடத்திய சிவா.

மீறியெழுந்தது வெஞ்
சினம்

என்று பாடுகிருர்.

ஆங்கிலேயரால் அவ மதிக்கப்பட்ட பாரதத் தாய் ஆடை குலைவுற்று நிற்ப தாகவும் அவள் 'ஆ'வென்று அழுது துடிப்பதாகவும் கற் பனை செய்து கொண்டு அதையே பாஞ்சாலி மீதேற் றிக் கூறுகின்ருன் பாரதி. ஆம்; உதட்டிலே பாஞ்சாலி! உள்ளத்திலே பாரதத்தாய்!


பாரதியார் காலத்தி லேயே, பாஞ்சாலியைத் துச் சாதனன் துகிலுரிந்த காப் பியச் செய்தியோடு ஒப் பிட்டுப் பாரதத் தாயை ஆங்கிலேயன் துகிலுரிவது போன்று ''கார்ட்டூன்'' போட்ட பத்திரிகைகளும் உண்டு. மேடையிலும் பேச் சாளர்கள் பேசியதுண்டு. இதையும் நினைவில் கொண் டால் பாஞ்சாலியைப்பாரத மாதாவாகவே பாரதியார் கற்பனை செய்து கவி பாடி யது நம்பத்தக்கதாக இருக் கும்.

பாஞ்சாலி சபதம் என்ற பெயரைத் தேர்ந்தெடுத்த திலேயே அவனுடைய விடு தலை ஆவேசம் வெளிப்படு கிறது!

(மயிலை இலக்கிய வட்டம் பாரதிய வித்யா பவன் சொற்பொழிவி லிருந்து)

ம.பொ.சி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran


மணமகள் தேவை
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
ஐயோ.. எனக்கு பயித்தியமே பிடிச்சிடப் போகுது இந்தப் பாழாப்போன கொசுவாலே...
ஓம்! சாந்தி... சாந்தி... ஓம்!
இழக்காதீர் பொறுமையை-கொசுக்களை இழந்திட உதவிடும்.
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
நம்மை எதிர்க்கும் கும்பல், மக்களைப் பிடுங்கி எடுத்துவிடும்; ரத்தத்தை உறிஞ்சி விடும்...
அவரு என்ன.. கொசுக்களைப் பத்தி பேசுறாரா?
உங்களைப் பிடுங்கிடும் கொசுக் கும்பலை ஓடவிரட்டிடும் டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
கொளுத்துவீர் டார்டாய்ஸ்-விரட்டுவீர் கொசுக்களை!
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருளினால்.
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
:.போர்ட், பம்பாய்-400 023. :.போன்: 273831

REGISTERED No. M. 4382
Registered as a Newspaper in Sri Lanka